# ஜகன்மோகினி

1-4-'50 பங்குனி மீ

அணா நான்கு.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1950
MADRAS

27-வது ஆண்டு

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்.

# க்ஷேமலாபங்கள்

ஸ்ரீ கீதாசார்யன் கருணையால் பிறக்கப்போகும் புத்தாண்டு—விக்ருதி—நம்மெல்லோருக்கும் ஸகல மங்களத்துடனும் சமஸ்த ஸௌபாக்யங்களுடனும் விளங்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். கடந்த விரோதி ஆண்டில் இன்ப—துன்ப இருவித அனுபவங்களையே கண்டோம்; வரும் ஆண்டில் எல்லா அம்சங்களிலும் நல்லதையே எதிர்பார்ப்போம். பகவத்ஸங்கல்பம் அனுகூலமானதாயிருந்தால் மனித யத்தனமும் சரியான மார்க்கத்தில் தானிருக்கும்.

நிற்க, விரோதி ஸூ முடிவுடன் நம் மோகினியில் சில தொடர் அம்சங்களை நிறுத்திக்கொண்டு புத்தாண்டில் புதிய அம்சங்களுக்கு இடமளிக்க முன்வந்துள்ளோம்.

கவியோகியின் சுய சரிதையைத் தனி நூலாக அன்பர்கள் வெளியிடுவதால் மோகினியில் அதன் தொடர்ச்சி நிறுத்தப்பட்டு, ஸ்வாமிஜியின் அரிய கடிதங்களில் சிலவற்றை வெளியிடவாரம்பித்துள்ளோம். பிறகு, அவர் பொதுப்படையான அருமையான வியாஸங்களை விருந்தளிப்பார்.

கடந்த ஐந்து இதழ்களாக அபூர்வ விருந்தாக வெளியாகிவரும் அபூர்வ ராமாயணம் இவ்விதழுடன் நிறுத்தப்படுகிறது. (விரைவில் தனி நூலாக ஆசிரியரால் வெளியிடப்படும்). இதுவரை மோகினியில் வெளியாகி பூர்த்தியடைந்துள்ள மூன்று குணங்களினுடைய விவரணமே ஸ்ரீ ராமாயணம் என்பது அறிஞர்களின் அபிப்ராயம். (குணவான், வீர்யவான், தர்மஜ்ஞ;)

நாளது சித்திரை இதழில் சில விசேஷ அம்சங்களுடன் புத்தாண்டு புதுமணமும் குதூகலமும் கமழும். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

## இவ்விதழின் மேலட்டைப்படம்

திருவல்லிக்கேணி மகாத்மாஜி ஸேவா சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவன்று எடுத்த போட்டோ இவ்விதழை அலங்கரிக்கிறது. விழாவைப்பற்றிய விவரங்கள் வனிதாமண்டலத்தில் வெளியாகியுள்ளன. பாராட்டுக்குரிய முறையில் நிகழ்ச்சிகளைத் தயாரித்தவர்கள் முறையே—(1) பாரதமாதா பூஜை, ஸ்ரீ கிருஷ்ணலீலை—குந்தலாதேவியும், R. A. ஜானகி அம்மாவும். (2) நாட்டிய வகைகள் பூரவும்—லீலாபாலசுப்ரமண்யம். (3) கதம்ப வாத்ய இசை, புகைப்பட காமிக், லக்ஷாதிபதி காமிக் மூன்றும் வை. மு. கோ. ஒலியும் ஒளியும் ஸ்டாண்டர்ட் ரேடியோ & எலக்ட்ரிக் கம்பெனியார்.

## வேண்டுகோள்

சங்கத்தின் வித்யாதானத் திருப்பணிக்கு கவியோகியின் காந்தி கீர்த்தனத்தை நேரிலோ, ஏஜண்டுகள்மூலமோ, பம்பாயில் ஸ்ரீ. D. கோவிந்தராவ் (Noormahal Bldgs, Plot, 541, Room No. 9, 1st Floor, Matunga) மூலமோ வாங்கி, ஸ்வப்ரயோஜனமும்பெற்று கைங்கர்யமும் செய்யபுண்யத்தைப் பெறுமாறுமீண்டும் பிரார்த்திக்கிறோம்.

வை. மு. ஸ்ரீ.

# தமிழ் நாடெங்கும்




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1950
MADRAS

**25—3—50 முதல் சென்னை**

**பிரபாத், கெயிட்டி &**

**சரஸ்வதி ஆரம்பம்.**

# பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கும் வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்யத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டுவிட்டது. மாத விடாய் நின்றுவிட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனமும் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக் கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்துவருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். அதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0. [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

SHRIMATI CHARAN PIARI
(J. M. M.) SANT NAGAR, JULLUNDUR CITY.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
- திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி !
மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

Vol. 27 No. 4. | விரோதி ௵ பங்குனி மீ | April. 1950.

# நூற்றெட்டு திருப்பதிக் கீர்த்தனைகள்.

## திருவல்லிக்கேணி—தெள்ளியசிங்கர்.

### விருத்தம்.

பள்ளியி லோதி வந்ததன் பாலன் பத்தியால் அரிபெயர் பகர
எள்ளிய கனகன் புடைத்திடும் தூணில் எழுந்தவன் உடல்தனை ஈர,
தெள்ளிய சிங்கமாகிய தேவா திருவல்லிக்கேணிமா நகர்வாழ்
வள்ளலேயடியேன் மனத்துயர் கெடவே வந்தருள் செய்குவாய்
மாலே !

*ராகம்—'ஸாநூரயீ' மெட்டு*

*பல்லவி*

சேவடியை, போற்றி செய்தேன், தெளிசிங்கா !
ஆவலுடன் அண்டினேனை ஆண்டருள் துங்கா ! (சே)

*சரணங்கள்*

1. எங்கும் நிறைந்துள்ளஜக, தீசனே கண்பாருமே
சிங்கவடி வாகிவந்த, தேவா காருமே (சே)

2. பாலனுக்காய் தூணில்வந்த பக்தவத்ஸலா !
ஞாலமீதில் ஏழைக்கருள், நாட்டும் நிச்சலா ! (சே)

3. மன்னும் திருவல்லிக்கேணி வாழ்பரஞ்ஜோதி !
என்னையருள் செய்யமுன்னில் எழுந்தருள் ஆதி ! (சே)

4. கூருகிரால் இரணியனைக் கொன்றருள் தீரா !
ஆரும்சரண் இல்லையென்னை ஆளும் உதாரா ! (சே)

— வை. மு. வேதம்மங்கார்.

# சென்ற மாதம்.

சென்ற மாதம், பலவிதங்களிலும் முக்கியத்வம் வாய்ந்த சரித்திரப் பிரஸித்தி பெற்றுவிட்டது. (1) சுதந்திர ஜன நாயக பாரதக் குடியரசின் முதல் உபரி நிதி மசோதா வெளியா யிற்று. சுமார் எட்டுகோடி ரூபாய்க்குமேல் வரிச்சலுகைகள் காட்டப்பட்டன. (2) என்றும் கண்டும் கேட்டுமிராத போட் டியின் பயனாக இங்கிலாந்தில் தொழிற்கட்சி மிகச் சிறிய 'மெஜாரிடி'யுடன் பதவியை நிர்வகிக்கலாயிற்று. சர்ச்சில் கட்சிக்கு அப்பேர்ப்பட்ட வெற்றியையும் பலத்தையும் பிரிட் டிஷ் மக்கள் அளித்துள்ளனர். (3) ஹைதராபாத் தகராறுகளுக் கெல்லாம் மூல காரணமாயிருந்த அதன் மாஜி பிரதம மந்திரி மீர்லைக் அலி தன் குடும்பத்துடன் பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார். இந்த மோசடி சம்பந்தமாக பலபேர் கைது செய்யப்பட் டுள்ளனர். (4) சதிகாரர்களின் நாசவேலை காரணமாக சூளூர் பேட்டைக்கருகே பெரிய ரயில் விபத்து நேர்ந்தது. ஓங்கோ லில் முன்பு நடந்த விபத்தைப்போன்று அவ்வளவு கோரமான தல்லவெனினும் நஷ்டம் மிகவும் அதிகமே (5) பந்தோபஸ்து கௌன்ஸிலால் காஷ்மீர் சிக்கல் விஷயமாக ஒன்றும் செய்ய முடியவில்லை. வழக்கம்போல் வழவழ... (6) கிழக்கு வங்கா ளத்தில் மீண்டும் தலைவிரித்தாடிய மதப்பேயாட்டம், பண்டித நேருவின் கல்கத்தா விஜயத்தாலும், இந்திய சர்க்காரின் பெரு முயற்சியினாலும், சிறிது குறையலாயிற்று. இந்தியா—பாகிஸ் தான் இரு சர்க்கார் பிரதமர்களும் நாளது ஏப்ரல் 2உ டில்லி யில் சந்தித்து, சிறுபான்மையோர் பாதுகாப்பு விஷயமாகப் பரஸ்பரம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும், அளிக்கும் வாக்குறுதிகளையும் ஒரு கூட்டறிக்கையில் வெளியிடுவார்கள். (7) இந்தியாவிலுள்ள பிரெஞ்சு ஸ்தானங்களான புதுவை, ஏனம், மாஹி, காரைக்கால் முதலியவை தமது வருங்காலத் தைக் குறித்துப் பொதுஜன வாக்குமூலம் தீர்மானிப்பதற்கு உரிமை ப்ரெஞ்சு மேல்சபையில் ஒரு மசோதாமூலம் அளிக்கப் பட்டது. (8) ஆந்திர மாகாணத்தை உடனடியாக நிறுவ இயலாதிருப்பதன் காரணங்களை மத்திய அரசாங்கம் சென் னைக்கு அறிவித்துள்ளது. (9) இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையைக் குறித்து மீண்டும் பிரதமர் நேரு விளக்கி யுள்ளார். இவ்விதமாகப் பல முக்கிய சம்பவங்களைக் கண்டு உணர்ந்தது கடந்த மார்ச் மீ. ஷை விஷயங்களுள் முக்கியமான சிலவற்றைமட்டும் கவனிப்போம்.

நிதி மசோதாவில் புது வரி எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. சுமார் 9.62 கோடி ரூபாய் உபரியாயிருக்குமென்று மதிப்பிட்டு, அதில் 8.31 கோடி ரூபாய்க்குச் சலுகையளிக்க முன்வந்தார் நிதி மந்திரி மத்தாய். நடுத்தர நிலைமையிலுள்ள பொது ஜனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளாவன: 6000 ரூபாய்க்குள் வருமான முள்ள அவிபக்த குடும்பத்திற்கு வரி கிடையாது; உள்ளூர் தபாலுக் குக் குறைந்த கட்டணங்கள்—கார்ட் அரையணா, கவர் ஒரு அணா;

சென்னை - 600 008

நந்தி விகிதங்களும் குறைக்கப்பட்டடுள்ளன; பத்து முதல் பதினை யாயிரம் வருமானமுள்ளவர்களுக்கு வரி மூன்றரையணுவிலிருந்து மூன்றணுவாகக் குறைக்கப்பட்டுள்ளது...வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. நிதி மசோதாவைப் பரிசீலனை செய்த கமிட்டியார் வரிவிலக்குத் தொகையை 3000த்திலிருந்து 3600 ஆக்கும்படியும், அவிபக்த குடும்பத்தின் வரிவிலக்குத்தொகையை 6000-லிருந்து 7200 ஆக்கும் படியும், தீப்பெட்டி செய்யும் குடிசைத் தொழிலுக்கு சிறிது சலுகை காட்டும் படியும் சிபார்சு செய்துள்ளனர். அதாவது, இந்த சிபார் சின்படி, தற்கால விலைவாசிகளின் நிலைமையில் தினசரி பத்துரூபாய் வருமானமுள்ள ஒருவன் வருமான வரி கட்டவேண்டியதில்லை.

லைக் அலி தப்பியோடியதிலிருந்து பலவித சந்தேகங்கள் எழும்பின. பாகிஸ்தானுக்குத்தான் ஓடியிருக்கடும் என்று எல்லோரும் எண்ணியது போலவே அவர் (சென்று சேர்ந்த பிறகு) கராச்சியில் இருப்பதாகப்பாகிஸ்தான் அறிவித்தது. மற்றப்படி ஒரு விவரமும் வெளியாகவில்லை இந்த சதி விஷயமாகப் பல ஹைதரா பாத் வாஸிகளும், தேசத்ரோகிகளான பம்பாய் வாஸிகளும் உடந்தையாயிருந்து காரியத்தை முடித்தது வெளியாகிவிட்டது. நிஜாமுக்கே இது பெரிய ப்ரமிப்பாயிருக்கிறது. இதில் பாகிஸ் தானின் கை எவ்வளவு தூரம் என்பது இனித் தான் தெரியும்.

28—3—'50 ல பாகிஸ்தான் பார்லிமெண்டில் பிரதமர் லிய கத் அலி கான் அறிவித்தார்:—"வங்காள நிலைமையைச் சீர்திருத்தும் விஷயமாகப் பண்டித நேருவும் நானும் முக்கிய கடிதப்போக்கு வரத்து நடத்தியுள்ளோம். நாங்கள் இருவரும் பரஸ்பரம் ஸந்திப் பதே சீக்கிரமாகவும் சுமுகமாகவும் நிலையைச் சமாளிக்க உதவும் என்பதை உணர்ந்துள்ளோம். இரு சர்க்கார்களும் சேர்ந்து ஒரு கூட்டு அறிக்கை வெளியிடும் விஷயமாகப் பெரும்பாலும் இசைந் துள்ளோம். குற்றவாளிகளைத் தண்டிக்கும் விஷயத்திலும், கொள் ளையடிக்கப்பட்ட பொருள்களைத் தேடிப்பிடிப்பதிலும், வீடுகளை இழந்தோரை மீண்டும் அங்கங்கே குடியேறி நிலைபெறச் செய்வ திலும், வெளியேற விரும்புவோருக்குப் பூரண பாதுகாப்பளிப்ப திலும், பெரிய அளவில் ஜனமாற்றம் நடைபெறாது பார்த்துக்கொள் வதிலும், பொய்ச் செய்திகளையும் மதவெறிச் செய்திகளையும் பரப்பு வோரைத் தண்டிப்பதிலும் இரு சர்க்கார்களும் தீவிரமாக ஈடுபடு வர் என்பதையே அவ்வறிக்கை குறிப்பிடும். கலவரங்கள் தோன்றிய விதத்தையும், இனி தோன்றாது தடுக்கும் விஷயமாயும், பரிசீலனை செய்து யோசனை சொல்லக் கமிட்டி ஒன்று நிறுவுவதும் அத் திட்டத்தில் ஒரு அம்சம்.

இந்தியாவில் பெரும்பான்மையோர் ஹிந்துக்களாயிருப்பினும் நமது ராஜ்யம் ஹிந்து ராஜ்யமல்ல. எல்லோருக்கும் சம அந்தஸ் தளிக்கிறது நமது அரசியல். அதேபோல் பாகிஸ்தானில் அனைவர்க் கும் சம அந்தஸ்தளித்தால் மதவெறிப்பேயாட்டம் மாண்டுபோகும். பரஸ்பர நல்லெண்ணம் ஏற்பட்டு, நல்ல சூழ்நிலை தோன்றும். இவ் வாறு கிழக்கு வங்காள சட்டசபை காங்கிரஸ் அங்கத்தினர்கள் கோரியுள்ளனர்.... ஆனால்?...




"லக்ஷ்மீ! ஏதேது? நீகூட சோம்பலைவிட்டு ஏதோ ப்ரமாதமாய்ப் பக்கம்பக்கமாய் எழுதுகிறாயே. ஏதாவது கட்டுரையா அல்லது கடிதமா?"

லக்ஷ்மி:—"வாங்கோ மாமி! என் சோம்பலைவிட்டு நான் கடிதம் எழுதுகிறேன் என்றால் எவ்வளவு ஆச்சர்யமான விஷயம் நடந்து இருக்கவேண்டும்? நீங்கள் தான் யோசித்துப்பாருங்களேன். முழுச்சோம்பேறி, முக்கால்சோம்பேறிகளைக்கூட சுறுசுறுப்பாய்ச்செய்துவிடுகிறது எது தெரியுமா? எங்கள் மஹாத்மாஜீ ஸேவா சங்கம்தான். இந்தாருங்கள்! இந்த இரண்டாவது ஆண்டின் அறிக்கைப் புஸ்தகத்தைப் படித்துப்பாருங்கள். அதிலிருந்து சங்கத்தின் மேன்மை உங்களுக்கு நன்றாய்ப் புரியும்.

காவேரி:—சரி, சரி! இப்போது இதைப் படிப்பது என்றால் நேரம் ஆகும். நீ தான் சுருக்கமாய் இதன் சாராம்சத்தைச் சொல்லிவிடேன். அதெல்லாம் சரி! என்போன்றவர்களுக்கு இந்த நாகரீகசங்கத்திலும், க்ளப்பிலும் என்ன இருக்கிறது? கரண்டிபோல் இருக்கும் பேட் (Bat) எடுத்துக்கொண்டு பந்து ஆடப்போகிறேன்.

லக்ஷ்மி:—ஹாம்! இதனால்தான் நீங்கள் இதுவரையில் சேராமல் இருக்கிறீர்களா? எங்கள் சங்கத்தில் பேட்டுக்கும், பந்துக்கும் வேலையே கிடையாது, மாமி! இந்த அறிக்கை கொடுத்தேனே, அதைப் படித்தால் நீங்கள் உடனே உங்கள் எண்ணத்தைக் கட்டாயம் மாற்றிவிடுவீர்கள். இப்படி நினைத்துதான் பார்வதி, ஸரஸ்வதி, நீலா எல்லாரும் இவ்வளவு நாள் சேராமல் இருந்தார்களாம். சமீபத்தில்தான் அவர்களும் சேர்தார்கள். ஆண்டு விழாவுக்கும் வந்து இருந்தார்கள். அவர்களைக் கேளுங்கள்; நான் சொல்வது சரியா என்று உங்களுக்கு நன்றாய்ப் புரியும். அதோ ஸரஸ்வதி, பார்வதி, சுமதி, நீலா எல்லாரும் வருகிறார்களே!...வாங்கோ, வாங்கோ! நேற்று அந்தக் கூட்டத்தில் உங்களைப் பார்க்கவேமுடியவில்லை. நிகழ்ச்சியெல்லாம் எப்படி இருந்தது? பொது ஜன அபிப்பிராயம் எப்படி?

ஸரஸ்வதி:— கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? லக்ஷ்மீ! இத்தனை நாள் நாம் சங்கத்தில் சேராமல் இருந்துவிட்டோமே என்றுதான் வருத்தமாய் இருக்கிறது. திரை திறந்தவுடன் அந்த பாரதமாதா நின்றிருந்தாளே, அது என் கண்ணைவிட்டே போகவில்லை. பாரதமாதாவுக்குப் பொருத்தமாய் அந்தப் பெண்ணை எப்படித்தான் தேர்ந்து எடுத்தார்களோ தெரியவில்லை.

பார்வதி:—அதுமட்டுமா? ஒவ்வொரு ஜாதியைக் காட்டும் வேஷங்களைப்போட்டு அவரவர் எப்படி நமஸ்காரம் செய்கிறார்களோ அப்படியே மௌனமாய் (டேப்ளோவாக) செய்து காட்டியது மிகத் திறமையாக இருந்தது.

நீலா:—எல்லாவற்றிக்கும் மேலாக "சுதந்திர ஹிந்துஸ்தானம்" என்ற பாட்டுதான் எப்படிபொறுக்கி எடுத்தார்களோ? அந்த டேப் ளோவுக்கும், பாட்டுக்கும் சங்கிலிபிணைத்தாற்போல் அல்லவா இருந்தது.

சுமதி:—அடடா! அந்த வாத்யகோஷ்டியின் இசை காதிலேயே இருக்கிறது. ப்ரத்யேகமாகப் புல்லாங்குழல் காதுக்கு மிக அத்புதமாய் இருந்தது. அந்த "உள்ளம் உருகி" என்ற ஒரு பாட்டு பாடினார்களே, அது நிஜமாகவே எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கியேவிட்டது. வாத்யங்கள் வாசித்தவர்கள் ஒருவர்க்கு ஒருவர் ஏற்றத்தாழ்வு இல்லாது எவ்வளவு அழகாக வாசித்தார்கள்! அந்த சமயம் லைட் கூட அல்லவா ஏதோ கெட்டுவிட்டது! ஒரு வராவது அசைந்தார்களா! எனக்கு மிக ஆச்சர்யமாக இருந்தது.

ஸரஸ்வதி:—லக்ஷ்மீ! போட்டோ எடுக்கும் காமிக் செய்தார் களே, அது எப்படி இருந்தது? அப்பா!....இப்பொழுது நினைத் தாலும் சிரிப்பு என்னால் தாங்கவேமுடியவில்லை. அப்பப்பா!... எனக்கு வயற்றுவலியே வந்துவிட்டது! திருவேங்கடி அம்மாதான் புல்லாக்கு, ராகடி, பாட்டிகாலத்துப் புடவை, திருமண், ஸ்ரீசூர்ண சகிதம் வந்தாள் என்றால், அவள் கணவனுமா அப்படி பட்டிக்காட் டுக் கர்மமாய் இருக்கவேண்டும்? குழந்தைகளோ கண்ராவி சொல்ல முடியாது. அதுகள் தலை பின்னலும், உடையும் சஹிக்கவில்லை. அவன்தான் வேஷ்டி, புஷ்கோட், தலையில் ஹாட் (Hat), பட்டை பட்டையாய்த் திருமண் என்றால், உட்காரவாவது தெரிகிறதா?

பார்வதி:—அடி பைத்தியமே! வேஷத்தைமட்டும் சொல் கிறாயே. திருவேங்கடம்மாவும், அவள் கணவனும் எவ்வளவு தத் ரூபமாய் நடித்தார்கள். தாங்கள் சிரிக்காமல் காமிக்காக நடிப்பது மிகவும் கஷ்டம். இதே நிகழ்ச்சியை ஒரு ட்ராமா கம்பெனிக்காரர் களே நடித்தால் ப்ரமாதப்படுத்துவார்கள். நேற்று எங்க ஆத்தில் எல்லோருக்கும் நான் நடித்தேகாட்டிவிட்டேன். நான் நடித்துக் காட்டியதே அவர்களுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. என்ன இயற்கையான நடிப்பு! வெகு தரம் அம்மா!

நீலா:—என்ன! டான்ஸ் கோஷ்டி எப்படி? குழந்தைகள் மிக நன்றாக ஆடினார்கள். தயாரித்தவர் வெகு அழகாக ச்ரமப்பட்டு கற்றுக்கொடுத்து இருக்கிறார். குழந்தைகளும் சளைக்காமல் உத் ஸாகத்துடன் ஆடினார்கள்.

பார்வதி:—எனக்கு டான்ஸ்களில் எல்லாவற்றையும்விட நாட்டுப்புரத்து டான்ஸ்தான் ரொம்பவும் பிடித்தது. என்ன அழ காக முகபாவம் காட்டி ஆடினார்கள்!

ஸரஸ்வதி:—அந்த நாட்டியம் கற்றுக்கொடுத்த வாத்தியார் நம்ப சங்கத்து அருகிலேயே "நடராஜ நாட்டிய நிகேதனம்" என்ற பெயருடன் டான்ஸ் கற்றுக்கொடுக்கிறாராமே. நான் என் பெண்களை அனுப்பலாம் என்று யோசித்து இருக்கிறேன்.

பார்வதி:—நானும் என் பெண்ணை அனுப்புகிறேன், நீ போகும்பொழுது என்னையும் கூப்பிடு;....டான்ஸ் பலே ஜோர்.

சுமதி:—லக்ஷாதிபதி பெண் எப்படி இருந்தது? எவ்வளவு பொருத்தமாய்ப் பெண் தேடி எடுத்து இருக்கிறார்கள்! "பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்" என்பார்களே. அதேபோல் லக்ஷம் என்றதைக் கேட்டவுடன் தடபுடலாய் மாமனார் எப்படிக் கிளம்புகிறார்!

பார்வதி:—தரகர் வேலை செய்து பிழைக்கும் பகல்கொள்ளைக் காரர்களுக்குச் சரியான சவுக்கடி! இந்த ப்ரோக்கர் வேலை செய்வதைவிடப் பிச்சை எடுக்கலாம். எனக்கு அந்த ட்ராமா ரொம்ப பிடித்தது.

லக்ஷ்மி:—ஆமாம்! ஸ்கவுட் பசங்கள் நடுவில் பங்கு எடுத்துக் கொண்டார்களே; அது எப்படி?

பார்வதி:—ஸ்கவுட்களும் பங்கு எடுத்துக்கொண்டதற்குச் சிலர் "இந்த வானரப்படைக்கு இங்கு என்ன வேலை? தண்டப்பொழுது போக்கிக்கொண்டு பொழுதை வீணாக்குகிறார்களே" என்று சொன்னார்கள். எனக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. பாவம்! ப்ரதிபலனை எதிர்பார்க்காமல் எவ்வளவு ச்ரமப்பட்டு அந்தக் கூட்டத்தைப் பாதுகாத்தார்கள்? போலீஸ்களுக்கும், ஸ்கவுட்களுக்கும் என்ன வித்யாஸம்? அந்த குழந்தைகளும் தங்கள் ஆசைக்காக ஏதோ செய்துகாட்டினார்கள். அதை வெறுப்பது மிகவும் தப்பு.

நீலா:—ஆமாம்! அது தப்புதான். க்ருஷ்ண லீலாவில் வேஷப் பொருத்தம் மிக நன்றாய் இருந்தது; யசோதையாக வந்தவள் மிகப் பொருத்தமாக இருந்தாள்.

ஸரஸ்வதி:—ஆமாம்! நான் அப்போதுமுதல் பார்க்கிறேன். ஒவ்வொருவரும் நிகழ்ச்சிகளைப்பற்றியே பேசுகிறீர்கள். தலைமை வஹித்த சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமியின் ப்ரஸங்கம் எவ்வளவு அழகாய் இருந்தது! எவ்வளவு அடக்கமாக, டாம்பீகம் இல்லாது பொறுமையாகக் கடைசிவரை இருந்து நடத்திவைத்தார்கள். காலணா காசு படைத்துவிட்டால் தலை கால் தெரியாமால் ஆடுகிறார்களே! அவரைப்பார்த்துக் கற்றுகொள்ளவேண்டும், அடக்கத்திற்கு. அவரை எனக்கு மிகவும் பிடித்தது.

லக்ஷ்மி:-கேட்டீர்களா மாமி! என்போன்றவர்களுக்கு சங்கத்தில் என்ன இருக்கிறது என்றீர்களே; இதை எல்லாம் வந்து பார்த்தால் வேண்டாம் என்பீர்களா?

மாமி:—நான் ஏதோ பந்து ஆடும் க்ளப் என்று எண்ணிவிட்டேன் இப்பொழுதே வா! போய் மெம்பராய்ச் சேர்ந்துவிடுகிறேன். எவ்வளவு சந்தா?

லக்ஷ்மி:—அப்படி வாருங்கள் வழிக்கு. வருஷத்துக்கெல்லாம் மூன்றுருபாய்தான். இந்தாருங்கள் குங்குமம் இட்டுக்கொண்டு, மாமியைச் சங்கத்துக்கு அழைத்துப்போகலாம். பிறகு வந்து என் நீண்ட கடிதத்தை முடித்துக்கொள்கிறேன......

— லை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

# சாதன ரகசியம்

[1941-வரையில் கவியோகி அரிய கடிதங்கள் எழுதினார்; அவற்றால் ஆயிரக்கணக்கான அன்பர் பயன்பெற்றனர். இக்கடிதங்களில் தெய்வச்சுவைபொருந்திய சிலவற்றை யோகினியில் வெளியிடுகிறோம். இக்கடிதங்கள் பல அரிய சாதன ரகசியங்களை விளக்கும் ஆத்மீகப் பொக்கிஷங்கள். நமதுநாடு புறச்சுதந்தரம் அடைந்தது போதாது; அகச்சுதந்தரம் அடைய வேண்டும். அதற்கு எல்லாரும் அப்யசிக்கக்கூடிய யோக சாதனங்களை நமது கவியோகி அனுபவித்து விளக்குகிறார். ஆத்மசக்திதான் பாரத நாகரிகத்தின் ஆணிவேர். அதைஆண் பெண் அடங்கலும் வளர்க்கவேண்டும். வளர்ப்போம் வாருங்கள்.]

— வை. மு. ஸ்ரீ.

## 1. சாதனம் என்றால்?

அன்ப,

சாதனம் என்பது மனதை உள்ளே இழுத்து அடக்கி, சித்தத்தைத் தூய்மையாக்கி, இதயப் பொருளிடம் நிலை நிறுத்துவது தான். சாதனமே சாந்தமும் இன்பமும் அளிக்கும்.

மனம் சும்மா அலைகிறது; புலன்கள் வழியே திரிகிறது; ஊர்வம்பை விலைக்கு வாங்கிவந்து உள்ளேகுவிக்கிறது. யார் மேலாவது பாய்கிறது. 'அவன் அப்படி; இவன் அப்படி' என்று வம்பாடுகிறது. தான் எப்படி என்பதை விசாரிக்காமல் அவிசாரியாகத் திரிகிறது. வாயளப்பதும், பண்டிதப் புலமையால் ஆட்களை மிரட்டுவதும் காசு பெறா. உள்ளடங்கித் தன்னைத்தானே ஆராயவேண்டும், முத்துக் குளிப்பவன்போல் உள்ளே மூழ்கி உண்மைப்பொருளை அறியவேண்டும். உள்ளாழ்ந்து நிற்கும்நிலை தான் தியானம் என்பது. தியானம் நிலைநிற்காவிட்டால், புலன்களும் சித்த விருத்திகளும் கண்டபடி உன்னை அலைக்கும்; கடும் புயல் வீசும். ஊழிக்கடல்போல் ஆசையாணவாதிகள் கொந்தளிக்கும். இவற்றையெல்லாம் மெல்ல மெல்ல அடக்கியாளுவதே சாதனம்.

*　*　*　*　*　*

அன்ப! உன் வாழ்வில் நடந்த சம்பவம், முதலில் உனக்குப் பெரியதுக்கத்தைக் கொடுத்தது; அவமானத்தைத் தந்தது. ஆனால், அந்தச் சம்பவம் உன்னை ஒரு வைராக்கிய நிலைக்கு உயர்த்திவிட்டது. உலகின் பெரிய மாயக்கண்ணியிலிருந்து அஃது உன்னைத் தப்பிவிட்டது. அன்று முதல் உன்னுள் சாதனம் நடந்தேவருகிறது. அந்தராத்மன் நல்ல சித்த விருத்திகளையே உண்டாக்குகிறான். இப்படியே மேன்மேலும் வைராக்கியத்தை வளர்; சாதனம் விளங்கும், உன்னை யறியாமலே படிப்படியாக சாத்விக புத்தியுண்டாகும்; தாமஸக் கசண்டுகள் எல்லாம் விலகிப் போகும்.

அப்பனே, எதற்கும் கவலைப்படாதே; உலகில் எதற்கென்று கவலைப் படுவது? ஒழிந்தது ஒழியட்டும். எந்தக் கண்ணும் கண்ணி வீசாமல் கவனமாயிரு; எப்போதும் நல்ல காரியங்களில் ஈடுபட்டிரு. சாதுக்களிடம் உனக்கு இயற்கையாகவே பற்றுதல் இருக்கிறது; இது முற்பிறவியின் நற்குறி. சாதுக்களாலேதான் இந்த உலகம் பொறுக்கமுடிகிறது.

கொலையும், கொள்ளையும், போட்டி பொறாமைகளும், அகம்பாவச் செருக்கும் நடமாடும் இந்த உலகில், சாதுக்கள் அங்குமிங்கும் சிலரே இருக்கிறார்கள். அவருளும் சுத்தசக்தி பெற்ற அருட்சுடர்கள் மிகச் சிலரே.

சாது தரிசனம், சாது சங்கம், சாது கைங்கரியம், சாது சிந்தனை—இந்த நான்கும் கிடைத்தால் வேறு சாதனம் தேவையில்லை. ஆமை சும்மா நினைப்பதனாலேயே தன் முட்டைவெடித்துக் குஞ்சு வைக்கும் என்பர். சாதுக்களை என்றும் நினைத்து நற்பணி செய்தாலே சித்த சுத்தியும் இதய விகாஸமும் உண்டாகும். "ஸாதனம் ஸாது ஸங்கேன" என்பதை நினை. அன்பு. —சுத்தானந்த பாரதி

## 2. நிலையம்

அன்பு மணியே !

சுத்த யோக சாதனத்திற்கு ஒரு நல்ல கட்டிடம் வேண்டும்.

1. கட்டிடத்தில் சாதி மத வேறுபாடில்லாமல் எல்லாரும் கூடித் தியானமும் பக்தியும் செய்க.

2. காலையில் நீராடி அவரவருக்குப் பிடித்தமான ஜபதப அனுட்டானங்களைப் பிறருக்கு இடரில்லாமல் அங்கே செய்யலாம்.

3. நல்ல நந்தவனம் வளர்த்து மலர்த்தொண்டு செய்யலாம்.

4. சனிக்கிழமை, ஏகாதசி நாட்களில் பகவத் பஜனைகள் தீபப்பிரதக்ஷிணத்துடன் நடத்தலாம். ஸ்ரீராம நவமி, கிருஷ்ணஷ்டமி, மற்றும் மகான்கள் திருநாட்களை நல்ல முறையில் பாராயணக் கிரமத்துடன் நடத்தலாம்.

5. ஒரு சங்கீத வித்வானை அமர்த்தி சுத்த சங்கீர்த்தன சாதகம் செய்யவும், பஜனைகளில் பாடவும், ஸத்கதைகளைச் செய்யவும், உயர்ந்த நாடகங்களைப் பழகி நடிக்கவும் முயலலாம்.

6. நிலையத் தொண்டர்கள் சாரணப் பயிற்சிபெற்று ஊருக்கு உதவியாகப் பொதுநலம் புரியலாம்.

7. இக் கட்டிடத்தில் சாப்பாட்டு விவகாரமே கூடாது. விநியோகத்திற்குரியவைகளையும் வேறிடத்தில் தயாரித்துவந்து பொட்டணம் கட்டியே தரவேண்டும். யாராவது பெரிய மகான்கள் வந்து தங்கும்போது மட்டும் வீடுகளில் பக்குவம்செய்துவந்து தரலாம்.

8. வீண் அரட்டை, அரசியல் வம்பு, நாத்திகம், தனிச்செருக்கு இவை கூடா. பத்திரிகைகள் வாங்கி மௌனமாகப் படித்து நாட்டு நிலை, உலகநிலை யறியலாம்.

9. கட்டிடம் ஒரு தேர்ந்தெடுத்த பொதுநலக் கூட்டத்தார் பார்வையிலிருக்கவேண்டும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை, தலைவர் காரியதரிசிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.

10. கட்டிடம் பெரிதாகி வளர்ச்சிபெற்றால் பயனுள்ள தொழில்கள் நடத்தலாம். உயர்ந்த நூல்களை அதில்வைத்து விற்று லாபத்தை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம்.

11. கட்டிடத்தைப் பெருக்க, மெழுக, பாதுகாக்க, விளக்கு வைக்க, மராமத்துக் செய்ய, புத்தகங்கள் வாங்க, திருநாட்கள் நடத்த நிலையான முதல் ஒன்று சேர்க்கவேண்டும். மாதம் நூறு ரூபா வட்டி வரும்படியான மூலதனம் ஒரு கமிட்டியிடம் ஒப்பிக்கவேண்டும்.

இந்த ஏற்பாடு நடந்தால் சுத்த யோகப் பணியைத் தூண்டி நடத்தலாம். நல்லவை வெல்க !

### தொண்டு செய்வோர்

1. கோபதாபங்களை அடக்கவேண்டும்; அகம்பாவத்தை அறவே ஒழித்தல் வேண்டும்.
2. தன் எளிய தேவையளவே ஊதியம் பெற்றுப் பொது நலத்தை வளர்க்கவே செல்வத்தைச் செலவிடவேண்டும்.
3. சாதிப் பித்தம், மாகாணப் பித்தம் கூடாது. சாதி இறுமாப்பு அபாயமானது. யோகம் சாதி மதமற்றது; அதுவே என் மார்க்கம். சுவர்க்க வயலில் விஷப்பூண்டு இருந்தாலும் களைந்தெறியவேண்டியதே; தங்கக் கிண்ணத்தில் நஞ்சிருந்தால் குடிப்பதா? ஒழுக்கமே பொதுநலம்.

உலகம் வகுப்புவாதங்களால் இரத்தக்களரிகிறது. மதங்களெல்லாம் பலகிளைகளாகிப் பகையாடுகின்றன. கிளைக்குக்கிளை ஆணவச்சமர்; ஒவ்வொன்றிற்கும் குரு, மடம், பத்தி, சடங்கு, புராணம்—எல்லாம் உண்டு; ஆயிரம் குருமார் முளைத்தால், ஆயிரம் வகுப்புகள் உண்டாகின்றன. நாட்டில் ஆயிரம் பிரிவினைகள் தோன்றுகின்றன. ஆதலால் சுத்த சக்திமயமான பரம்பொருளைப் பொதுமன்றமான உள்ளத்தில் தியானத்தால் கூடும் யோகமே மனிதருக்கு ஒருமையும், அன்புப் பெருமையும் தரும் உலகெல்லாம் ஒருமையில் ஒன்றி வாழவேண்டும். முதலில் ஆயிரம் பேராவது ஓரினமாகக்கூடி வாழக் காணவேண்டும்—சுத்தயோக சங்கம் எழுந்து யோகசித்தியைத் திவிரமாகப் பின்பற்றி வாழ்ந்தால் உலகொருமையும் உள்ளொருமையும் கொண்டு வாழலாம். சுத்த யோகத்தின் உத்தேசம் இதுவே—பரிசுத்தமான பரமாத்மனை உள்ளே கூடி உலகை அவன்மயமாகக்கண்டு சுத்தமுக்த சமத்துவ சித்திபெற்று அதனால் வரும் சக்தியால் உலகசேவை செய்யவேண்டும். ஓம் சுத்தசக்தி:—அன்பு.

## 3. மனச் சாதனம்

அன்புத் தங்கமே!

உடல், உயிர், மனம், புத்தி, சித்தம், ஆத்மா, சுத்தாத்மா பரமாத்மா—ஆகிறவை படிப்படியாக நரதேக தத்துவங்கள். வாழ்க்கை பூரணம் பெறவேண்டுமானால் இவற்றின் தன்மையறிந்து, மற்ற தத்துவங்களெல்லாம் பரமாத்ம தத்துவத்தில் அடங்கி நடக்கச் செய்யவேண்டும். கடிகாரச் சக்கரங்களெல்லாம் மயிரிழை வில்லுக்கு அடங்கிச் சுழல்கின்றன. வில் துடிப்பு நன்றாயிருந்தாலே வெளியே முள் நகரும்; இதுபோலத்தான் தேகேந்திரியங்களும். மனிதனுக்குப் பெரிய நோய் மன--நோய்தான்; சித்தம் சதா அதிலும் இதிலும் அலையக்கூடாது. மனது வந்ததையும் போனதையும் எண்ணிச் சஞ்சலப்படக்கூடாது. அகங்காரம் கிளம்பி "நான், எனது" என்று உலகப் பொருள்களை அபிமானித்து அலையக் கூடாது. மனத்தில் ஆசை, காமம், அகந்தை, பொறாமை முதலிய பகைவர் வந்து அண்ட எப்போதும் காத்திருப்பார்கள். கோபப்பேய் எளிதாகப் புகுந்துவிடும். இவைகளெல்லாம் ஆத்மாவுக்கு இயல்பில்லாத அன்னியப் பேய்கள். இவை வெளியிலிருந்தே வருகின்றன. நடையுடை பாவனைகளையோ, ஆடையணிகளையோ, தோல் மினுக்குகளையோ கண் பார்த்து, புலன்களைத் தூண்டி, மனதைக் கெடுத்துப் பிறகு ஆசை, காமம், குரோதம், பொறாமை, கலகம், சலனம், கவலை—யெல்லாம் விளைவிக்கின்றது. இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவும். "இன்று நாம் ஏன் கோபம் கொண்டோம்?" என்று ஒருவன் சிந்தித்தால், கோபப்பேய்

வெளியிலிருந்தே வந்து மனதைத் தாக்குவதை அறியலாம். அம்மை, தொத்து நோய், பேதி-இவற்றைப்போல், காமக்குரோதாதிகளும் வெளியிலிருந்தே வந்து மனிதனைத் தாக்கிப் பாழாக்குகின்றன. அவற்றை வரும்போதே "போ பேயே என்னுள் வராதே" என்று அடித்துவிரட்டி, மனிதன் உள்ளே அந்தக்கரண சுத்தி என்னும் விளக்குடன் விழித்திருக்கவேண்டும்.

அநேகர் உள்விழிப்பற்றவர்கள்; அவர்களுக்குச் சவவுறக்கந்தான் தெரியும்; சமாதி உறக்கம் தெரியாது—உடலை மறந்து உள்விழித்திருக்கத் தெரியாது. அதனாலேதான் கண்விழித்துப் பார்க்கும்போதே காமக்குரோதப் பேய்கள் தாக்குகின்றன; உறங்கும் போதும் கனவில் வந்து கலக்குகின்றன.

ஒரு தரம் கோபம் வந்தால் உடலைக் காக்கும் நரம்புகள் தளர்ந்து போகின்றன. மனம் வேட்டைநாயாகி 'வள், வள்' என்று விழுகிறது. நரம்புகள் தளர்ந்துகொண்டேவருகின்றன. நரம்பு தளர்ந்தால் இந்திரியம் கட்டுப்படாமல் சலித்துக்கொண்டிருக்கிறது. உடலின் ரகசியம் மனத்தில் உள்ளது. புலன்களை வெளியே விட்டலையாமல் உள்ளடங்கியிருப்பதே மனதை வெல்லும் வழி.

உடலை உள்ளும் புறமும் ஸ்படிகம்போல் வைத்துக்கொண்டால் மனமும் நிம்மதியாகும். பஞ்ச பூத சிறை காத்தலே அதற்கு வழி. பசிக்கும்போது சுசி ருசியாக நிதானமாக உண்ணவேண்டும்; இரண்டுவேளை போதும். ஒரு மணிக்கு ஒருதரம் ஐந்து விழுங்கு சுத்தநீர் குடிக்கவேண்டும். மாலை ஐந்துமணி வெயிலில் வேர்க்கும்படி காற்றாட உலாவல் அல்லது தேகப்பயிற்சி செய்யவேண்டும். "ஓம் சுத்த சக்தி" என்ற மந்திரத்தை ஜபம்செய்துவந்தால், சித்தசுத்தி யுண்டாகும். காலையில் அல்லது மாலையில் உடம்பில் நன்றாக வெய்யில்படும்படி சூரிய நமஸ்காரம்செய்து பிறகு நன்றாக நீராடினால் நரம்புகள் திண்மையுறும். உயர்ந்த நூல்களைப் படிப்பதினாலும் பெரியார் வாக்குகளை எழுதுவதினாலும் ஆத்மலாபம் பெருகும்.

காலையில் சர்வாங்காசனமும், மச்சாஸனமும், ஹலாசனம், சிரஸாஸனம், பத்மாஸனம் செய்து பிராணாயாமமும் செய்க; "ஓம், ஓம்" என்று அளவாக மூச்சுவிட்டாலே போதும். மூக்கு நுனியில் பார்வையை ஊன்றி மூச்சைக்கவனித்தால் அநு சமனாகும்; பிராணாயாமத்தின் பலனைப் பெறலாம். ஒன்றைக் கருத்துடன் செய்; அடுத்தது புலப்படும்—அன்பு:

---

## ஆத்ம சோதனை

கவியோகி சுத்தானந்தரின் அனுபவ மாலையான "ஆத்ம சோதனை" சுயசரிதையைக் கடந்த பதினைந்து திங்களாக மோகினி சுவைமிக்க விருந்தாக அளித்துவந்தாள். ஷை இதழ்களில் ஒரு சிறு பகுதியே வெளியாகியது. நாளது சித்திரையில் ஸ்ரீ ஸ்வாமியின் ஜனன தினத்தன்று அன்பர்களின் உத்ஸாகத்தின் உருவாக ஆத்ம சோதனை முழுநூலாக வெளியாகப்போவதால், மோகினியில் ஷை தொடரை வெளியிடுவதை நிறுத்தி, ஸ்வாமிஜியின் அரிய கடிதங்களில் சிலவற்றை வெளியிட முன்வந்துள்ளோம். ஸ்வாமிஜியின் பேனாமுனையில் எந்த அம்சம் வெளியானாலும் ஆத்மீக விஷயங்களை விரும்பும் மோகினி அன்பர்களுக்கு மிகவும் ரஸிக்குமல்லவா?

— வை. மு. ஸ்ரீ.

# கல் வளையல்.

"ஐயோ! எனக்குப்பிடிக்கவில்லையே! என்னைக் கஷ்டப்படுத்தவேண்டாம்; தூரப்போ!" என்று எரிந்துவிழுந்துவிட்டுப் படுக்கையில் படுத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டான் ஜகதீசன். ஜுரத்தின் வேகத்தினால் அவன் முகம் சிவந்திருந்தது. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஜயத்தின்மேல்கூட ஜுரத்தின் கனல் வீசியது!

வேறு வழியில்லாமல் பாதி கஞ்சி மீதியிருந்த டம்ளரைக் கையில் எடுத்துக்கொண்டு மாடிப்படிகளில் இறங்க ஆரம்பித்தாள் ஜயம். அவள் மனம் 'அவருக்கு' வந்திருந்த காய்ச்சலுக்குக் காரணம் கண்டுபிடிப்பதில் முனைந்திருந்தது. திடீரென வேணி ஊருக்குப்போனதும் பிடித்த ஜலதோஷம்—அதன் பலனாக ஏற்பட்ட ஜுரம்—இன்றுகாலை "கவனிக்காமல் விட்டால், நிமோனியாவாகத் திரும்பிவிடும்" என்ற டாக்டரின் சொற்கள்—என்ன போதாத வேளையோ!

காற்றில் கலந்துவந்த அந்தசொற்கள் அவள் செவியில் விழுந்தன. "இந்தாடி அம்மா கனகம்! வெள்ளிக்கிழமையும் அதுமா இப்படி அழாதே! —நான் சும்மா சொல்லமுடியாது. அழுதா உன் பிறந்தகத்து அண்ணனும் அவன் குடும்பமும் சுகமாக இருக்கவேண்டாமோ?" என்று பக்கத்து வீட்டுப் பாட்டி, தன் விதியை நொந்து சதா அழுதபடி இருந்த கனகத்திற்கு நல்லவார்த்தையில் சமாதானம் சொல்லி மாளாதுபோகவே, இந்த ப்ரும்மாஸ்திரத்தைப் பிரயோகித்துக்கொண்டிருந்தாள். ஆமாம்! அது சரியான பிரயோகம்தான். தன் அண்ணன்மீது தன் அன்பை முழுதும் வைத்திருந்த கனகம் அழுகையை நிறுத்திவிட்டாள்.

இவை சாதாரணமாக அவர்கள் வீட்டில் நடப்பவையே. இன்று இச்சொற்களும் சம்பவமும் ஜயத்தின் மனதில் ஊடுருவிப் பாய்ந்தன. முடுக்கப்பட்ட யந்திரம்போல் அவள் மனம் கட்டுக்கடங்காது பின்னோக்கிச் சுழன்றது. இதுவரை சகஜமாகத்தோன்றிய அவளது சில செய்கைகள் அவளுக்கே அநாகரீகமாகவும், கேவல மனமுள்ளவளின் செய்கைபோலவும் தோன்றின.

*    *    *    *    *

ஒரு வாரத்திற்குமுன் வேணி ஊரிலிருந்து வந்திருந்தாள். ஏதோ ஆபீஸ் வேலையாக மதராஸுக்கு வந்திருந்த தன் கணவனுடன் பிடிவாதமாகத் தன் அண்ணனையும் மன்னியையும் பார்த்துப் போவதற்காக வந்ததாக அவள் கூறினாள். கலியாணமானபிறகு முதல் முறையாக அப்போதுதான் அவள் பிறந்தகம் வந்திருந்தாளாதலால், அவள் குணம் இப்போது எப்படி மாறியிருக்குமோ என ஜயம் பயந்தாள். தங்கைமீது ஜகதீசனுக்குமே மிக்க அன்பு. ஆகவே குடும்பத்தில் மனஸ்தாபம் ஏற்படாது வேணி ஊருக்குப் போகவேண்டுமே—இந்தக்கவலைஜயத்தின் மனதில் அப்போது அதிகமாக ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது.

ஜயத்தின் பயத்திற்கும் அஸ்திவாரம் இருந்தது—அஸ்திவாரமின்றிக் கட்டடம் எழும்பாதே! ஆனால் இந்த அஸ்திவாரம் சரியானதுதானா என்று அப்போது ஜயம் ஊன்றி யோசிக்கவில்லை.

வெகு நாளாய் கோடித்தபிறகு தன் கைவளையல்களில் இரண்டை அழித்து, கூட சிகப்புக்கல்லும் வாங்கிக்கொடுத்து சிகப்புக்கல் வளையல் செய்ய தட்டானிடம் கொடுத்து பத்து நாட்கள் ஆகியிருந்தது. அவன் தன் வேலையை முடித்துக்கொண்டு பூரண அழகுடன் பொலியும் அந்த

வளையலைக் கொண்டுவரும்நாளை ஜயம் எதிர்பார்த்துக்கொண்டிருந்த போதுதான் வேணி வந்துசேர்ந்தாள்.

வளையல் வந்துவிட்டால் வேணி அதைப்பார்த்து விட்டு ஆசைப் பட்டால் என்ன செய்வது? அப்படி அவள் ஆசைப்பட்டாளானால் ஜயத்தின் வெகுநாளைய ஆவல் பூர்த்தி செய்யப்படாமல் சுருக்கப்பட்டு ஆழத்தில் அமுக்கப்படவேண்டியதுதானா?—இல்லாவிடில் வேணியின் மனத் தாங்கலை சம்பாதித்துக்கொள்ளவேண்டியதா?

என்ன வந்தாலும் வளையலை வேணிக்குக் கொடுக்கப்போவதில்லை என்று மனத்துக்குள் தீர்மானித்துக்கொண்டாள் ஜயம். வேணிக்கு இந்த எண்ணம் தெரியாவிட்டாலும், ஜயம் தன் எண்ணம் அவளுக்குத் தெரிந்துவிட்டதுபோல் அவளைப் பார்க்கும்போதெல்லாம் கீழே குனிந்து கொள்வாள். வேணியுடன் மனம் விட்டு சாதாரண விஷயங்களைக்கூட அவளால் பேசமுடியவில்லை. வேணி கட்டாயம் ஜயத்தின் புதிய சுபாவங் களைக் கண்டு தன்மன்னி மாறிவிட்டதாக எண்ணியிருப்பாள்.

கடைசியில் ஜயம் பயந்தபடியே தட்டான் வேணி இருக்கும் போதே வளையலைக் கொண்டுவந்தான். வேணிதான் அதை முதலில் பார்த்தாள். வெகு நன்றாக இருக்கிறதென்றாள். இதிலிருந்து வளையல் மீதிருந்த அவள் ஆசையின் அளவு ஜயத்திற்கு ஒரு வகையாகத் தெரிந்தது. வேணி அத்துடன் நில்லாமல் தட்டானிடம் வளையல் செய்ய எத்தனை பவுன் வேண்டும்? கற்கள் எத்தனை தேவை? வெள்ளைக்கல் செய்ய என்ன செலவாகும்? என்றெல்லாம் கேட்டுத்தெரிந்துகொண்டாள். வேணி எந்த வகையில் அதன்மேல் தனக்கிருந்த ஆசையைக் காட்டிக் கொண்டால் என்ன? ஜயம் தான் மனதில் தீர்மானம் செய்துகொண்டு விட்டாளே.

வேணியும் தன் வாயைத் திறந்து தன் ஆசையை எடுத்துக் கூருமலே ஊருக்குப் போய்ச்சேர்ந்தாள்

அவள் ஊருக்குப் போனதிலிருந்து ஜகதீசனுக்கு ஜுரம் ஆரம்பித்து அடித்துக்கொண்டிருந்தது. வேணி ஆசைப்பட்டாள். ஆனால், அவளுக்குத் தான் வளையல் கொடுக்கவில்லை—வேணி ஊருக்குப் போனதிலிருந்து ஜகதீசனுக்கு ஜுரம்—பாட்டி கனகத்தினிடம் கூறியசொற்கள்... இவை மூன்றையும் இணைத்துக்கட்டியது ஜயத்தின் பெண்மனம்.

ஆசைப்பட்ட பொருள் கிடைக்காததால் வேணி மனம் கசந்துபோய் கண்ணீரை மறைத்துக்கொண்டு ஊருக்குப்போனாளோ? அவள் தற்போது ஊரில் சிந்தும் கண்ணீர் ஜகதீசனின் காய்ச்சலுக்குக் காரணமோ? இருக்கும்! வீட்டுப் பெண்ணின் கண்ணீர் பிறந்தகத்தைத்தானே தாக்கும்! —அதுவும் கண்ணீரின் காரணம் பிறந்தகமாக இருக்கும்போது.

என்ன கீழ்த்தரமான எண்ணம்? வேணியின் கல்யாணத்தில் அவளுக்கு ஒன்றும் ஜகதீசன் அளிக்கவில்லை. எல்லாம் அவள் தகப்ப னாரே செய்துகொண்டார். அப்படி இருக்க இந்த மூன்று பவுன் வளையல் பெரியதா? இதைச் சீதனமாகப்பெற்றுக்கொள்ள—அண்ணனிட மிருந்து பெற்றுக்கொள்ள—வேணிக்கு உரிமை இல்லையா?

* * *

சட்டென ஒரு தீர்மானத்திற்கு வந்த ஜயம் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். மாடிப்படிகளில் இறங்கி ரேடியோவின் அருகேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்ட அவள் சிந்தனை சாகரத்தில் ஆழ்ந்து தன்னையும் மறந்துவிட்டாள் இதுவரை, ரேடியோ பாடல்கூட

அவளைத் தட்டிஎழுப்பவில்லை. கையில் இருந்த டம்ளரில் கஞ்சி வடவட வென்று உலர்ந்துபோயிருந்தது.

ஆளை அனுப்பி பக்கத்து வீட்டு ராகவனை அழைத்துவரச்செய்து தான் நினைத்த காரியத்தை முடித்தபிறகுதான் அவள் மனம் வேறு வேலைகளை எண்ணியது. காய்ச்சலினால் வருந்தும் கணவன்கூட பிறகு தான் கவனிக்கப்பட்டான்.

அப்புறம் மந்திர சக்தியினால் இறங்குவதுபோல், நாலே நாட்களில் ஜுரம் இறங்கி சாதாரண நிலைக்கு வந்துவிட்டான் ஜகதீசன். ஒரே வாரத்தில் ஆபீஸுக்குப் போகவும் ஆரம்பித்தான்.

பாட்டியின் வார்த்தையை அசரீரி வாக்காக எண்ணி, தான் செய்த நல்ல காரியம்தான் இதற்குக் காரணம் எனப் பூரணமாக நம்பினாள் ஜயம்.

"தேவி! எனக்கு பணம், காசு, நகை ஒன்றும் அவசியமில்லை. வீட்டில் பிறந்த என் சகோதரிகள்போன்ற நாத்தனார்களுக்கு இனி நான் ஒரு மனத்தாங்கலும் உண்டாக்குவதில்லை. என் மாங்கல்யம் கல்லாக இருக்கட்டும். என் குடும்பம் மன நிம்மதியுடன் வாழ அருள்புரி தாயே! என் பிழையை மன்னித்துவிடு" என்று சுக்ரவார பூஜையின்போது மனம் உருக பிரார்த்தித்தாள் ஜயம். பக்தியினால் அவள் கண்களில் கண்ணீர் பொங்கி வழிந்தது. உடல் சிலிர்த்தது. ஆம்! அன்னை இனி நல்வழியில் திரும்பிவிட்ட தன் மகளைக் காப்பாற்றுவாள்—என்ற நம் பிக்கை ஜயத்தின் உள்ளத்தில் ஊன்றியது.

* * * * *

பதினைந்து நாட்கள் உருண்டோடின. ஜகதீசன் ஆபீஸுக்குப் போய்வந்துகொண்டிருந்தான். ஜகதீசனும் கல் வளையல்களைப்பற்றி ஜயத்திடம் கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை. வேணியிடமிருந்தும் கடிதம் ஒன்றும் வரவில்லை. இது சற்று திகைப்பாகத்தான் இருந்தது. ஜயத்திற்கு ஏன் கடிதம் வரவில்லை? சந்தோஷத்துடன் ஏன் பதில் எழுத வில்லை? என்று கேள்விகேட்கும் மனத்தைப் பல அசட்டு பதில்களால் சமாதானம் செய்துகொள்வாள்.

ஒரு நாள் மத்தியானம் ஆபிசிலிருந்து வரும்போது பரபரப்புடன் வந்தான் ஜகதீசன். வந்ததும்வராததுமாக "ஜயா! வேணி உனக்கு என் னமோ பார்ஸல் அனுப்பியிருக்கிறாள்போல் இருக்கிறது" என்ற அவன் சொற்களைக் கேட்டு திடுக்கிட்டது ஜயாவின் மனம்--வேணி என்ன அனுப்பி இருப்பாள்?

கணவனும் மனைவியும் போட்டிபோட்டுக்கொண்டு பார்ஸலைப்பிரித் தனர். மேலே ஒருகடிதம் இருந்தது. ஜயம் அவசர அவசரமாகக் கடி தத்தைப் பிரித்தாள்—ஜகதீசன் பார்ஸலிலிருந்து பொட்டணத்தைஎடுத்துப் பிரித்துக் கொண்டிருந்தான்— ஜயம் தன் கண்களைத் திருப்பினாள் காகிதத்தின் மீது.

க்ஷேமம்.

கோயமுத்தூர்
25–8–49.

"மன்னி!

நீ என் மனதைத் தப்பிதமாக எண்ணிக்கொண்டு வளையலை அனுப்பியிருக்கிறாய். நான் எதிர்பார்த்ததுதான் இது. உன் மனம் எனக்குத் தெரியாதா என்ன?

அம்மாவுக்கு அம்மாவாக இருந்து என்னை இதுவரை வளர்த்திருக் கிறாய் — என் காலேஜ்படிப்புக்கு சாதகமாக இருந்தாய்—சங்கீத ஞானம்பெற உதவியாக இருந்தாய்; அண்ணா என்னிடம் பிரியமாக இருப்பது சகஜம்—நீ தாயாகி இருந்தது தான் அதிசயம்.

கல்யாணமானபிறகு உன் அன்பிற்கு ஏதாவது பரிசளிக்கவேண்டு மென முயன்றுகொண்டிருந்தேன். நீ செய்துகொண்ட சிகப்புக் கல் வளையல்களைக் கண்டதும், புதியதொரு எண்ணம் தோன்றியது. அதன்காரணமாகவே தட்டானிடம் கேள்விகள் பல கேட்டேன்—எனக்கு சிகப்புக் கல் வளையல் பொருந்தவும் பொருந்தாது—உன் மாப்பிள்ளைக்கும் நான் அதிக நகைகள் அணிவதில் இஷ்டமில்லை. நீ செய்துகொண்ட சிகப்பு வளையல்கள் உன் சிகப்பு உடலுக்கே எடுத்துக்காட்டும். இத்துடன் உள்ள 'வெள்ளைக்கல்' வளையல் களையும் சேர்த்து ஜதையாக அணிந்துகொள். மறுக்காதே—ஏழை யால் முடிந்தது இதுதான்.

மன்னி! என் மன்னி! அன்பும் ஆதரவும் காட்டி தாயாகவும், சகோதரியாகவும் இருந்து என் மனப்போக்கின்படி நடந்தவளே! உன் அன்புக்கு ஏற்ற பரிசு கொடுக்க நான் அருகதையற்றவள்.

நீயும் அண்ணாவும் சுகமாக வாழ இறைவனை சதா காலமும் வேண்டுவது ஒன்றுதான் என்னால் முடியும். அதிகம் எழுத நேரமில்லை.

இப்படிக்கு,

உன் அன்புள்ள—வேணி''

அப்பா...நல்லவேளை! வேணி ஒன்றும் தப்பிதமாக எண்ணவில்லை—தன் மனதையும் அதன் கெட்ட எண்ணங்களையும் விவரிப்பதற்கு பதில் அன்பின் ஸ்வரூபமாகப் புகழ்ந்து வரைந்து தள்ளியிருக்கிருள்—எப்படி இருக்கிறது!

''வளையல் வெகு நன்ருக இருக்கிறதே—சிகப்பும் வெள்ளையும் ஏற்ற ஜோடிதான். நான் சிகப்புக் கல்; வேணி மாசற்ற வெள்ளைக் கல்'' இப்படி எண்ணியபடியே இருந்த ஜயம், ஜகதீசன் சிரித்தபடி வேணியின் கடிதத்தை அவசரமாகக் கீழேவைத்துவிட்டு இரண்டடியாக மாடிப் படிகளில் தாவி ஏறுவதைக் கவனித்துவிட்டு, கடிதத்தை மறுபடியும் கையில் எடுத்துப்பார்த்தாள். கடிதத்தின் பின்னே பின்குறிப்பு இருந் ததை ஜயம் முதலில் கவனிக்கவில்லைபோலும்

பி. கு: மன்னி! நான் ஊருக்குப் புறப்படும்தினம் அண்ணாவும் இவரும் ஹோடலில் 'யார் அதிகம் சாப்பிடுகிருர்கள்!' என்று போட்டி போட்டுக் கொண்டு ஐஸ்கிரீம் சாப்பிட்டதாக இவர் இங்கு கூறினர். எண்ணெய் ஸ்னானம் செய்துவிட்டு ஐஸ்கிரீம் தின்ருல்—ஜலதோஷமும் ஜுரமும் வராது என்ன செய்யும்? அண்ணாவின் ஜுரத்திற்கு இதுவே காரண மாக இருக்கலாம்...ஜயம் சிரித்துக்கொண்டாள்—எதை எண்ணி?


## வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1—4
2. மதமா, மனமா? 1—4
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1—8
4. ராணி சீலாவதி 1—0

தாரண நந்தவனம்
(700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த ருதுமலர் மாலை ரூ. 9.

ப்ர.ப. அண்ணங்கராசாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் உரையுடன் ரூ. 1.

## தெய்விக மராமத்து!

"வெள்ளம்! வெள்ளம்!! அடே! சுப்பா! தொழுவத்திலுள்ள கன்று காலிகளை முதலில் அம்புகறித்துவிடு. எங்கேயாவது நீந்திச்சென்றாவது உயிர் தப்பட்டும்" என்கிறார் மிராசுதார்.

"அம்மா! பாய்படுக்கையெல்லாம் வெள்ளம் கொள்ளுகிறதே! என்ன செய்வது?.... இதோ! உள்ளெல்லாம் ஜலம் ஓடிவருகிறதே! என்ன அம்மா பண்ணுகிறது?" என்று சீதா தன் தாயைக் கேட்கிறாள்.

"சீ! நல்ல தூக்கத்தைக் கலைக்கிறயே; உனக்கு புத்தியில்லை" என்று 'தூங்குமூஞ்சி முத்தண்ணா' கடிந்து சொல்லும்போதே அவன் உடம்பு முழுவதும் வெள்ளம் கொள்வதுகண்டு, "அப்பா! அப்பா! நான் என்ன பண்ணுவேன்?" என்று கதறுகிறான். இதற்குள் ஊரில் பேரிரைச்சல்...காவிரி உடைப்பு—எங்கும் வெள்ள மயம். பார்த்து நிற்கும்போதே பலமரங்கள் வேருடன் அடி சாய்ந்து விழுகின்றன! கோடியிலுள்ள ராயர் வீடு அடியோடு இடிந்து விழுந்துவிட்டது! நிமிடத்திற்கு நிமிடம் வெள்ளம் மேல் மேலே பொங்கி வருகிறது. ஜனங்கள் தத்தளிக்கிறார்கள். சோழ மன்னன் படகுகளையும் கட்டுமரங்களையும் கொண்டு ஜனங்களை மீட்க உத்தரவிடுகிறான்......மராமத்து இலாகா உத்யோகஸ்தர்களை மணல் மூட்டைகள் கட்டி உடைப்பை அடைக்கச்சொல்கிறான்.

4 கஜம் உடைப்பு 40 கஜம் ஆகிவிட்டது! என்ன செய்வதென்றே தெரியவில்லை என்று ஒரு அதிகாரி ஓடிவந்து அரசனிடம் முறையிடுகிறார். வயது முதிர்ந்த தலைமையதிகாரி உடல் குலுங்க அரசனிடம் ஓடோடியும் வந்து 'அரசர்பெருமானே! நாடு முழுவதும் ஒரு நொடியில் அழிந்தேவிடும்போலிருக்கிறது. பல்லாயிர ஆட்களைத் திரட்டிப் படாதபாடுபட்டுக் கட்டியுள்ள கரையெல்லாம் சின்னாபின்னமாகிவருகிறது. மணல் மூட்டைகள் எத்தனை ஆயிரம் போட்டும் பயனில்லை—போடும்போதே உருண்டுபோய்விடுகிறதே! நீர்வேகம் இன்னதென்று கூறத்தாமில்லை...." என்று முறையிட்டுச் செயலற்று நிற்கிறார்.

அறிவிற் சிறந்த மந்திரி ஓடிவந்து "ராஜாதி ராஜனே! காவிரியின் சீற்றத்தைத் தணிக்க நமது முயற்சிகள் யாதும் பயன்படாது. தெய்வ அருள் ஒன்றேதான் நம்மைக் காக்கும். நமது அருட்கவி வள்ளல்—கம்பரைக் கண்டு வேண்டுவோம் வாரீர்!" என்கிறார்.

அரசனும் உண்மைநிலை யுணர்ந்து மந்திரியுடன் கம்பர் வீடு சென்று அவரைக் கண்டு "புலவர் பெருமானே! யாம் அனைவரும் தங்களிடம் அடைக்கலம் புகுந்துள்ளோம்...என்று சொல்லும் போதே அங்கும் வெள்ளம் சூழ்கிறது!

புலவர் திலகன் எழுந்திருந்து அமைச்சனையும் அரசனையும் உடன் கூட்டிக்கொண்டு ஒரு சிறிதும் அச்சமின்றிக் காவிரிக் கரைக்குச் செல்கின்றார். காவிரித் தாயைத் தீர்க்கதண்டனிட்டு,

"கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென்—றிந்நீர்

உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே!
கரைகடக்க லாகாது காண்."

என்று ஆசுகவியாய்ப் பாடிப் போற்றுகிறார்.

என்ன அதிசயம்! என்ன விசித்திரம்! இருகரைகளையும் கடந்து பெருகிய வெள்ளம் இப்பாட்டுக் கேட்டவுடன் இரண்டடியளவில் வற்றிக்காட்டியது! இவ்வதிசயத்தைக் கண்கொண்டு கண்ட அரசனும் அமைச்சனும் மற்றும் அங்குக் கூடியிருந்த பெரு மக்களும் புலவர்பெருமானின் பாதங்களில் விழுந்து வணங்கு கின்றனர்.

எழுந்துநின்ற அரசன் புலவரைக் கட்டித்தழுவி, "மன்னுயிரும் என்னுயிரும் காத்தளித்த அருட் கவிதைப் பெருமானே! இக்கா விரிக்கரையிலே கவிதைப் பொருளை விளக்கியருள்வீர்!" என்கிறான். புலவர்திலகன் பின்வருமாறு விரிவுரை தருகிறார்:—"உலகத்து உயிர்கட்கும் பயிர்கட்கும் தாய்முலைப்பால்போன்ற உனது அமுத நீரை ஊட்டி வளர்க்கும் லோகமாதாவே! குமரி என்னும் கன்னி யாறு கடல்கொள்ளப்பட்டு உருவழிந்தாள்! கங்கை—ஆகாய கங்கையென்னும் தன் உன்னத நிலை இழந்து—பாதாளம் போய்ச் சேர்ந்தாள். பொன்கொழிக்கும் பொன்னியாகிய நீயும் கரை யழிந்துபோனாய் என்னும் வாசகம் வையகத்திலே வழங்குதல் தகுமோ? கரை கடத்தல் (வரம்பு மீறுதல்) கன்னியர்க்கு ஏற்ற தாகுமோ? ஆதலின் நீ வரம்புக்கு உட்பட்டு வாழக்கடவாய்! ... நீ பழிக்கு ஆளாகாதிருக்கவேண்டுமென்பதே அடியேன் வேண்டு வது."—என்று.

"ஆஹா! என்ன நயம்! எவ்வளவு ஆழ்ந்த கருத்து! கன்னித்தமிழின் கடவுள் தன்மையைக் கண் முன்காட்டிய நீரே கவிச் சக்ரவர்த்தியும் அருட்கவி வள்ளலுமாவீர். இன்றுபோல் என்றும் எம்மை இரட்சித்தருள்வீர்" என்று புகழ்மாலை சூட்டி விருதுகள் பலவும் வழங்குகினன் அறிவுடைமன்னன்.

---


வை. மு. கோ.
87-வது நாவல்

## ஜீவநாடி

27-வது ஆண்டுமலரில் வெளியாகி,
உயரிய தனிப்பதிப்பாக வெளிவந்துள்ளது.
(10 ஆர்ட் படங்களுடன்.)

மனிதர்களின் வாழ்க்கையை நடத்திச்செல்வதற்கு சக்திதான் ப்ரதானம். அந்த சக்தி அவரவர்களின் கர்ம விசேஷத்தின் பலனால் ஒவ்வொரு விதம் அமைந்து செல்கிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று ஜீவநாடியாய் அமைந்து அதன் பலனைக் கொடுத்து வாழ்க்கை வண்டியை ஓட்டிசெல்கின்றது. தனபாலன், ஜெயபாலன், பூபதி, குந்தலா, விமலா, சபலா, அகிலா, நிர்மலா ஆகியவர்களுக்கு எந்தெந்த அம்சங்கள் ஜீவநாடியாக அமைந்து எத்தகைய பலனைக்கொடுக்கிறது என்பதைப் படித்துக் களியுங்கள்.

ரூ. 2. (ரிஜிஸ்தர் தபாலில் 2—4)

# இ—ஈ வெளியிடும் இரகசியம்

— பழமொழிப் பித்தன் —

## இஞ்சி தின்ற குரங்கு

குரங்குச் சேட்டை பிரசித்தமானது. இஞ்சியும் தின்றுவிட்டால் என்ன பாடுபடும், என்ன பாடுபடுத்தும்? ஒரு பழைய பாட்டிலே, காதலை இன்னதென்று முதல்முதல் அறிந்துகொண்ட ஒரு பெண், மிளகு தின்ற குரங்கு பட்டபாடு பட்டதாய் வருணித்திருக்கிறது. அந்தப் பரம்பரையிலே வந்தது, 'இஞ்சி தின்ற குரங்கு போல் பஞ்சரிக்கிறுன்' என்ற பழமொழி. அவ்வளவு பழையமொழி அல்ல.

குரங்கு கள்ளுண்டு தேளும் கொட்டிப் பேயும் பிடிக்கக் கூத்தடிக்கும் சுலோகமும், இக்கதையை மேலும் வளர்த்திருக்கும் காளமேகப் புலவர் வெண்பாவும் பிரசித்தமானவை.

## இடக்கன் போன வழி

இடக்குச் செய்கிறவன் விநயமாக விலகித் தன்பாட்டிலே போகமாட்டான். இந்த மனிதக்குரங்கால் பிறருக்கு இம்சை செய்யாமல் இருக்கமுடியாது. இதைத்தான் 'இடக்கனுக்கு வழி எங்கே? கிடக்கிறவன் தலைமேலே!' என்கிறது பழமொழி, ஒரு வினுவிடை ரூபத்திலே.

'இடக்கனேடு இணக்கமா?', 'இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்ற பழமொழிகளும் இடக்கன் வைபவம்பேச எழுந்தவை. இடக்கனை எச்சரிப்பதாக எழுந்த பழமொழி; 'இடும்பு செய்வார்க்கு இராப்பகல் நித்திரை இல்லை.'

## இடிக்குக் குடை

மழைக்குக் குடை, வெயிலுக்குக் குடை உண்டு. ஆனுல் 'இடிக்குக் குடை பிடிக்கலாமா?' என்று கேட்கிறது பழமொழி.

பாரதியாரோ, இடிக்குக் குடை பிடித்தவர் என்கிறுர் காந்தியடிகளை. ஆம், அஹிம்சாதர்ம சத்தியாக்கிரகம் இடிக்கும் குடை பிடித்த கதைதானே? மகாத்மா புல்லிலே வஜ்ராயுதம் கண்டார்; இருளிலே அருளொளி கண்டார்; கல்லைப் பிசைந்து கனியச்செய்தார். சுருங்கச் சொன்னுல், செயற்கரிய செயல்கள்செய்து பெறற்கரிய வெற்றி பெற்றுர். இப்படி இடிக்குக் குடைபிடிக்க முற்பட்டவர்களே உலக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியுள்ள உத்தமர்கள் —உலக சிரேஷ்டர்கள்.

## இரும்பினும் கடினம்

'இரக்கமிலாதான் நெஞ்சு இரும்பினும் மெத்தக் கடினம்' என்கிறுர் பழமொழிக்காரர். இத்தகைய ஆசாமிகள் தாங்களும் கொடுப்பதில்லை, பிறர் கொடுப்பதையும் கெடுப்பதுண்டு. இதைத்தான் 'இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பார்' என்கிறது பழமொழி. எனவே, 'இரக்கமிலார் அரக்கர்' என்றும் எச்சரிக்கை செய்கிறது. இத்தகைய அரக்கர் 'இந்திரனைச் சந்திரனை ஏவிக்கூவி வைப்பார்? எமதர்மராஜாவை எருமைபோல் மேய்ப்பார்!'

இவர்கள் ஏதாவது இடுவதுபோலத் தோன்றினாலும், ஏதோ உள்ளுக்குள் தீ இடுவதுபோல் உட்கலகம் மூட்டத்தான்! 'இரண்டு நாய்க்கு ஒரு எலும்பு போட்டமாதிரி.' 'இராவணன் குடிக்கு மகோதரன் போல'வும் நடந்துகொள்வார்களாம். 'இரும்பை எலி கவ்விச்சென்றது' என்று ஒரு போடு போடுவார்களாம்.

### எட்டிக்குப் போட்டி

அடுத்த வீட்டுக்காரியிடம் இரும்பைக் கொடுத்துவைத்து ஒருத்தி சேதுவுக்குப் போய்வந்தாள். 'இரும்பைக் கறையான் அரித்துவிட்டது!' என்று கையை விரித்தாள் வைகாரி. 'இருப்புத் தூணைச் செல்லரிக்குமா?' என்று சேட்டும் பயனில்லை.

இரும்பை இழந்தவள், 'இராமேச்வரம் போயும் சனீச்வரன் தொலையவில்லையே' என்று வருந்திச் சில தினங்களில் அடுத்த வீட்டுக்காரியின் சிறுவனை ஒளித்துவைத்தாள். 'வைத்தப் 'பருந்து கொண்டுபோயிற்று, பாப்பம்மா!' என்றாள். 'வளர்ந்த பிள்ளையைப் பருந்து கொண்டுபோகுமோ?' என்று அவள் கேட்க இவள், இரும்பைக் கறையான் அரித்தால், பிள்ளையைப் பருந்து கொண்டுபோகாதோ?' என்றாள்.

### ஆஷாடபூதிகளின் அருமை பெருமைகள்

'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று இருப்பார்கள். இத்தனை அத்தனையானால் அத்தனை எத்தனையாகாது?' என்றெல்லாம் சாமர்த்தியமாய்ப் பேசுவார்கள். 'இரண்டுபட்ட ஊரில் குரங்கும் குடியிராது' என்று ஒற்றுமை உபதேசம் செய்வார்கள். 'இடுகிற தெய்வம் எங்கும் இடும்' என்றும், 'இராமர் இருந்த இடம் அயோத்தி', 'இராமரைப்போல் ராஜா இருந்தால் அனுமானைப்போல் சேவகன் இருப்பான்' என்றும், 'ஈசனுக்கு ஒப்பு இல்லொன்றும் இல்லை' என்றும், பக்திப் பிரசாரம் செய்வார்கள். 'இருளும் ஒரு காலம், நிலவும் ஒருகாலம்' என்று வேதாந்தம் பேசுவார்கள். 'இத்தனை பெரியவன் காலைப்பிடித்தால் எப்படி மாட்டோம் என்கிறது' என்று பெருமை பேசுவார்கள். 'இந்தப் பூனைக்கா இந்த ருத்திராட்சம், இந்தத் துளசிமணி?' என்று அதிசயிப்போம் நாம்.

'இரண்டு தோணியில் கால்வைக்கிற' இப்பேர்வழிகள் முழுகிப்போவார்கள். அல்லது, 'இரண்டு குதிரைகளை ஒருங்கே சவாரி செய்'து புழுதியில் புரளுவார்கள், இந்த அருமந்த ஆஷாடபூதிகள்.

'இருக்கப்போனாலும் சிறக்கப்போகவேணும்' என்ற இரகசியம் இவர்களுக்கு நன்றாகத் தெரியும். 'இருந்து பணம் கொடுத்து நடந்து வாங்குவதுபோல்' போய்ப்போய்ப் பணம் பறிப்பார்கள். எனினும், 'இருளன் ராஜமுழி முழிப்பானா?'—'இருதலைக்கொள்ளி எறும்பு போல்' இவர்கள் கடைசியாக இடர்ப்படுவார்கள்.

'இரச வாதமும் இரசமாய்ச் செய்வோம்' என்று இனிமையாய்ப் பேசுவார்கள். 'இரும்பான உடம்பு பொன்னாவதே இரசவாதம்' என்பர். 'இரும்பு பொன்னானால் திரும்பித் துரும்பாகவுங் கூடும்' என்பர். கிடைக்கிற பொன்னை, மணியைத் துரும்புபோல் கைப்பற்றிக் கம்பி நீட்டி விடுவார்கள், இரும்புபோன்ற வலு

நெஞ்சர்கள். 'ஈரைப் பேனாக்கிப் பேனைப் பெருமாளாக்கு'வர். 'இதோ சிவலோகம்; அதோ வைகுண்டம்' காட்டுவர். 'இது தானு பூலோகம் பக்தா?' என்பர். உண்மையில், நாகலோகம்தான் இவர்கள் வாழ்க்கையெல்லாம்.

### யுகம் எங்கே?

சில சோம்பேறிகள் இருக்க இடம் கிடைத்ததும் 'சிவனே' யென்று படுத்துக்கொண்டார்கள். 'இருந்தல்லவோ படுக்க வேணும்?' என்றுதான், முதலில் இருக்க நிழல் கேட்டார்கள். சாது ஒருவன் தன் வீட்டு ரேழியில் இருக்க இடம் கொடுத்ததும், நீட்டிசிமிர்ந்துபடுத்துரேழியெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டார்கள்! பிறகு, 'இது கலியுகம்; நாம் என்ன செய்யமுடியும், தோழர் களே?' என்று கலிபுருஷனைத் தூஷித்துக்கொண்டிருந்தார்கள்.

ஓர் அறிஞர் அங்கே வந்தார். அவரை நோக்கிச்சோம்பேறிகள் படுத்தபடியே, 'நாங்கள் என்ன செய்வோம், சுவாமி? கலி யுகத்தில் அல்லவா இருக்கிறோம்?' என்று குறைபட்டுக்கொண் டார்கள்.

'இப்படிப் படுத்திருந்தால் கலியுகம்தான்!' என்று அறிஞரும் ஒப்புக்கொண்டார். பிறகு அவர்களை நோக்கி, 'உங்களுக்குத் துவா பரயுகம் வேண்டுமா?

'வேண்டியதுதான் சுவாமி; ஆனால் அது எப்படி வரும்?'

'இதோ வந்துவிடும் பாருங்கள்; சற்றே எழுந்து உட்கா ருங்கள்;

அவர்களில் சிலர்வெகு சிரமத்துடன்எழுந்து உட்கார்ந்தார்கள். 'நிமிர்ந்து உட்காருங்கள்' என்று சொல்லி அப்படி உட்காரவைத்த பின், 'இதோ உங்களுக்குத் துவாபரயுகம் வந்துவிட்டது' என்றார் பெரியவர்.

பிறகு அவர், 'உங்களுக்குத் திரேதாயுகம் வேண்டாமா?' என்று கேட்டு, 'சகோதரர்களே, தயவுசெய்து எழுந்து நில்லுங்கள்' என்று வேண்டிக்கொண்டார்.

மிகச் சிலர் எழுந்து நின்றார்கள். பாக்கி ஆசாமிகள் அப் படியே சோர்ந்து மறுபடியும் பள்ளிகொண்டார்கள். இவர்களை நோக்கி,'மறுபடியும்கலியுகத்திற்குப் போய்விட்டீர்களே, ஐயோ!' என்று வருந்தியபின், பெரியவர் நின்றவர்களை நோக்கி, 'நீங்கள் திரேதாயுகத்தில் இருக்கிறீர்கள்!' என்றார்.

அவர் நின்றவர்களை மறுபடியும் நோக்கி, 'அதோ ஒரு படம் தொங்குகிறதே அந்தலட்சியத்தை நோக்கிச் செல்லுங்கள்' என்றார்.

ஒரே ஒருவன் சோம்பேறித்தனத்தை முற்றும் தள்ளிவிட்டு அப்படி லட்சியத்தை நோக்கி நடந்தான். அவனை நோக்கி அறிஞர், 'நீ கிருதயுகபுருஷனாகிவிட்டாய்; பொன்யுகத்திற்குப் போய்விட் டாய்!' என்றார்.

இந்தக் கதை இருக்கிறது, 'இருந்த கால் கலியுகத்திலே; நடந்த கால் கிருதயுகத்திலே' என்ற பழமொழியிலே. 'இருந்தால்

கலியுகம்; எழுந்தால் புதயுகம்,' என்ற பழமொழியும் இதே கருத்தை வெளியிடுகிறது.

இந்தப் பழமொழிகளைப் பழமொழிகள் என்று சொல்வதுகூட அவ்வளவு பொருத்தம் இல்லை. ஏறக்குறையப் புதுமொழிகள் என்று சொல்லலாம்.

சில பழமொழிகளும் புதுமொழிகளும்

இன்றைய புதுமொழி நாளைய பழமொழிதான். நேற்று ஒரு புதுமொழி இன்று ஒரு பழமொழி. 'மிளகு தின்ற குரங்கு,' காலடைவில் 'இஞ்சி தின்ற குரங்கு' ஆனதுபோல், பழமொழிகளும் புதிய காரம் உண்டு பரிணாமங்கள் பெறுவதுண்டு.

'இடுகிற தெய்வம் எங்கும் இடும்' என்ற பழமொழியின் ஒரு பரிணாமம்தான், 'கொடுக்கிறதெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும்!' என்ற பிற்காலப் பழமொழி. ஒரு கார சாரமான பரிணாமம்—இல்லையா?

'இருந்தவன் எழுந்திருக்கு முன்னே நின்றவன் நெடுந்தூரம்' என்ற பழமொழிக்குப் புதிய அவதாரங்கள் 'புதயுகப்' பழமொழிகள்!

பழைய பழமொழிகளுக்கும் பிற்காலப் பழமொழிகளுக்கும் வித்தியாசம் அவைபோடும் நடையிலேயே (தமிழ் நடையிலேயே) கண்டுகொள்ளலாம். 'இலக்கணம் கற்றவன் கலக்கமற மன்னர் சபை காண்பான்' என்பதுபோல் இலக்கணமாக அமைவது பழைய பழமொழியாக இருக்கவும் கூடும். அல்லது பண்டித குலத்திற்குள் சிறைப்பட்டிருந்த பழமொழியாகவும் இருக்கலாம். இலக்கணம் கற்றவன்......' என்ற பழமொழியே இலக்கணம் கற்ற புலவர்கள் கற்பித்த புதுமொழியாகவும் இருக்கலாம்.

'இடுவார் பிச்சையைக் கெடுவார் கெடுப்பார்' 'இரக்கமிலான் நெஞ்சு இரும்பினும் கொடிது' 'இருப்புத் தூணைச் செல்லரிக்குமா?' 'இருதலைக்கொள்ளி எறும்பானேன்' 'இலவுகாத்த கிளியானேன்'—இவைபோன்ற பழமொழிகள் இலக்கணப் பழமொழிகளே. பெரும்பாலும் பண்டிதர் நாவில் பயின்றவை.

'ஊரைப் பேணுக்கிப் பேணைப்பெருமாளாக்கு'வோரையும், 'எட்டி எட்டின மட்டும் குத்தும்; பணம் பாதாளம் வரையில் பாயும்' என்ற ரீதியில் பாய்கிறவர்களையும் பரிகசிக்கும் பழமொழிகளும் இவை போன்றவையும் பொதுஜன உள்ளத்திலே பிறந்தவை.

'இளங்கன்று பயம் அறியுமா?' 'இறைத்த கிணறு ஊறும்' 'இல்லையென்ற வீட்டில் பல்லியும் சேராது' 'இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது' 'இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இருக்குமா?' 'இடக்கனுக்கு வழி எங்கே, கிடக்கிறவன் தலைமேலே' இத்தகைய பழமொழிகளெல்லாம் இலக்கணப் புலமைக்கும் எட்டாத அனுபவ ஞானம்; கல்லாக் கலையாகத் தோன்றிவை.

இப்பழமெழிகள் உருவத்திலே 'பொதுஜனவாக்கே தெய்வ வாக்கு' என்று சொல்லுகிறார்களே, அத்தகைய தெய்வவாக்காக இருக்கும். உயிரான பொருளிலோ, பொருளாழத்திலோ, அநுபவ அறிவுக்கடலின் ஆழம். இவை நல்ல நாணயமான பழமொழிகள்.

# திருடனுக்குத் தேள் கொட்டினால்...

நாராயணபுரி ஒரு சிறந்த செல்வம் நிறைந்த ஊர். அதில் தானிய சமர்த்தியும் த்ரவ்ய பூர்த்தியும் நிறைந்த மிராசுதாரர் நாராயண மூர்த்திக்குத் தகுந்த குணவதியான தர்மபத்தினியாய் லக்ஷ்மி அமைந்திருந்தாள். ஒரு தினம் நாராயண ஐயர் வீட்டிற்கு ஏராள தானியம் களத்துமேட்டிலிருந்து வண்டிவண்டியாய் வந்ததையும், அதில் பெரும்பாகம் வ்யாபாரிகளுக்குப் போட்டுவிட்டு ஏராளமான ரூபாய்களை வாங்கிப் பெட்டியில் வைத்ததையும், ஒரு பக்காத்திருடன் பார்த்து நன்றாக உளவறிந்துகொண்டான்.

எப்படியாவது தான் மூன்று சகாக்களுடன் உள் புகுந்து கொள்ளையடித்தால் சரியானபடி பணமும் தானியமும் கிடைக்கும் என்ற ஆசையுடன் தன் சகாக்களைப் பின்புறத்துக் கதவருகில் வந்து நிற்கும்படியும் தான் இருட்டும் சமயத்தில் உள்ளே புகுந்து சரியான இடத்தில் பதுங்கியிருந்து ஓசை செய்யாமல் புறக்கடைக் கதவைத் திறந்துவிட்டு தானிய மூட்டைகளைக் கட்டுவதாயும், அவர்கள் தூக்கிக்கொண்டுபோய்விடலாம் என்றும் எச்சரித்து விட்டுத் தான் சமயம்பார்த்து உள்ளே புகுந்து அந்த வீட்டின் முற்றத்தில் ப்ரம்மாண்டமாகப் படர்ந்துள்ள அவரைச் செடியின் பந்தலின்கீழ் மறைவாகப் பதுங்கி உட்கார்ந்துவிட்டான்.

மகா கெட்டிக்காரியும் சூக்ஷ்ம புத்தியுடையவளுமான லக்ஷ்மி, திருடன் வந்து பதுங்கியிருப்பதைக் கண்டுவிட்டாள். உண்மையில் பயம் நடுக்குகிறது. இதை ரகஸ்யமாகத் தன் கணவனிடம் சமையல் அறையில் தெரிவித்தாள்.

இதைக்கேட்ட நாராயணன் "பேசாமல் மவுனமாய் ஒன்றுமே தெரியாதுபோலவே இரு. இப்போது கலபை செய்தால் ஆள் அகப்படாமல் தப்பித்துக்கொண்டுவிடுவான். புறக்கடைப்பக்கம் கூட சலசலப்பு உண்டாகியதைப் பார்த்தால் அங்கும் கள்ளர் இருப்பதாகவே தோன்றுகிறது. ஆகையால் நீ பேசாமலிரு. நான் சரியானபடி ஒரு நாடகம் நடிக்கிறேன்" என்று சில விஷயத்தைக் கூறிவிட்டுச் சாப்பாடு ஆனதும் தாழ்வாரத்தில் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தபடியே, "ஐயோ! அப்பா! பல் வலி சகிக்கமுடியவில்லையே! என்ன செய்வேன் அடீ! ஏதாவதொருமருந்து கொண்டு வாயேன்......கடுக்காயைக் தட்டிப்போட்டு வென்னீர் காய்ச்சிக் கொண்டுவாடீ!" என்று கத்தினார்.

லக்ஷ்மியம்மாள் உடனே ஒரு தவலை ஜலத்தைக் காய்ச்சிக் கொண்டுவந்து வைத்தாள். சுடச்சுட ஜலத்தை வாயில் கொட்டிக் கொண்டு அந்த அவரைப் பந்தலடியில் பதுங்கியுள்ள திருடன்மேல் கொப்பளித்துக்கொண்டே இருக்கிறார்!...

பாவம்! திருடன் வாய்திறக்கமுடியாது சூடான தண்ணீர் அபிஷேகத்தில் திண்டாடுகிறான்! இவரோ விடுவதாகக் காணவில்லை. வாய்கொப்பளிக்கையில் ஒருவாய்த் தண்ணீரை தன் மனைவியின்மீது கொப்பளித்துவிட்டார்!

அவ்வளவுதான். அந்த அம்மாள் 'குய்யோ முறையோ!' என்று கத்தி, "ஐயையோ! என் கணவருக்குப் பயித்தியம் பிடித்து விட்டதே. நான் என்ன செய்வேன் பயமாயிருக்கிறதே!" என்று கூச்சலிட்டாள்.

இதைக்கேட்டதும் அக்கம்பக்கிலிருந்தவர்கள் ஓட்டுமீது ஏறிக் குதித்து உள்ளேவந்து வாசல்கதவைத் திறந்ததும் ஊர் ஜனங்கள் கூடிவிட்டார்கள்.

"என்ன நாராயணமூர்த்தி! ஐயையோ! ஏன் இப்படியாகிவிட்டது?" என்றார்கள்.

நாராயண ஐயர் மனைவியை வெகு கோபத்துடன் விழித்துப் பார்த்துவிட்டு, "ஐயா! நீங்களே சொல்லுங்கள். இவளை நான் கல்யாணம் செய்துகொள்ள எத்தனை ஆயிரம் ரூபாய் செலவு செய்திருப்பேன்?...எத்தனை நகைகள் போட்டிருக்கிறேன்?...நான் ஒரே ஒருவாய் தண்ணீர் உமிழ்ந்ததைத் தாளாமல் இத்தனை பெரிய கூட்டத்தை நன்றிகெட்டுக் கூட்டுகிறாளே; எனக்கும் அவனுக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லாதிருக்கும் இந்த மனிதன் தலையில் எத்தனைவாய்தான் கொப்புளித்திருக்கிறேன் தெரியுமா? அவன் வாயைத் திறந்தானா கண்ணை விழித்தானா! எத்தனை சாது? எத்தனை நல்ல மனிதன்!" என்றாராம். உடனே திருடனை எல்லோரும் சேர்த்துப் பிடித்துக்கொண்டார்கள். இதற்குள் புறக்கடைப் பக்கத்தில் பதுங்கியவர்களையும் பிடித்துவிட்டார்கள். நாராயண மூர்த்தியின் சாமர்த்யத்தை மெச்சினார்கள். இத்தகைய சமயங்களில்தான் சமயோசித புத்தி வேண்டுமென்பது.

---

## மார்ச் இதழ் 12-ம் பக்கத்தில் வந்த
# ஒரு கேள்விக்குப் பதில்

இரவில் தான் இருந்து பார்த்துக்கொள்ள முடியாததால் கம்பெனிக்கு தான் இல்லாதபோது காவல் இருக்க (Nightwatchman) இவனை நியமித்திருந்தால், இவன் இரவில் தூங்கினேன் கனவு கண்டேன் என்று சொன்னால், தன் வேலையை அவன் சரியாகச் செய்யவில்லை என்று தெரியவில்லையா? பகலில் தூங்கினேன், கனவு கண்டேன் என்றாலும், இரவு விழிக்க வேண்டியவன் பகலில் தூங்கினான் என்று ஒப்புக்கொள்ளலாம். இரவு காவல் இருப்பது தவறியதால், இவன் சோம்பேறி—சரியாக வேலை செய்யவில்லை. இவனை நம்பினால் கம்பெனி திருடர்கள் வசப்பட்டுவிடும் என்று வேலையிலிருந்து எடுத்துவிட்டார். தன் உயிரைக் காப்பாற்றிய உபகாரத்திற்கு இனாம் அளித்தார். விடை மிகவும் சுலபமாக இல்லையா?

A. ஸரோஜா

---


| ஜகன்மோகினி | இந்தியா, ஸிலோன். | பர்மா. | வெளிநாடு |
|---|---|---|---|
| தனிப் பிரதி | அணா 4. | 0—4—6. | 0—5—0 |
| வருடச் சந்தா | 3-0-0. | 3—8—0. | 3-12—0 |

# அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்

கஃ தர்மஜ்ஞஃ ?

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிராட்டி அருகேயில்லாத சமயங்களில் நடந்த வரலாறுகளை ஆராய்வதுபோலவே அவள் அருகேயிருக்கும் சமயங்களில் நடந்த வரலாறுகளையும் ஆராயவேணும்.

சூர்ப்பணகையின் விஷயமொன்று கீழே தெரிவிக்கப்பட்டது. அதற்கும் முந்தியதான காகத்தின் கதையைக் காண்போம். இது சித்திரகூட மலைச்சாரலில் நடந்தது. அயோத்யாகாண்டத்தில் கூறப்படவேண்டிய கதை இது. ஆனால், இது அங்குக் கூறப்பட வில்லை. சுந்தரகாண்டத்தில் முப்பத்தெட்டாவது சர்க்கத்தில் பிராட்டி அநுமானிடம் அடையாளமாகச் சொல்லியனுப்புவதாக இது அமைந்துளது.

அங்குச் சொல்லப்பட்டிருக்கிற விதம் யாதெனில்; 'அநுமனே ! முன்பு சித்திரகூட பர்வதத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள தாழ்வரையில் ஏகாந்தமானதோரிடத்தில் வாழ்ந்திருக்குங்கால் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சமயம் நான் விளையாடிக் களைப்புற்று இராமனது மடியில் உட்கார்ந்திருக்கையில், ஒரு காகம் மாமிசத்தின் விருப்பத்தினால் என் மார்பினிடையில் மூக்கால் குத்தியது. நான் எவ்வளவு அதட்டியோட்டியும் அது போகாமல் என் தனங்களைக் குத்திக்கொண்டு அங்கேயே மறைந்திருந்தது. அதைக்கண்டு இராமன் என்னைப் பரிகசிக்கையில் நான் வெட்கமும் கோபமும் காட்டினேன். பிறகு ராமன் என்னை நல்வார்த்தைகளால் சமாதானப்படுத்தினன். நான் இளைப்புற்று இராமனது மடியில் படுத்துறங்கினேன்.

தூக்கந்தெளிந்து நானெழுந்திருக்கையில் இராமனும் என் மடிமேல் படுத்துக் கண்வளர்ந்தருளினான். அப்பொழுது அக் காகம் மீண்டும் அவ்விடம் வந்து எனது மார்பினிடையில் அதிகமாகப் பீறி என்னை மிகவும் புண்படுத்தியது.

அந்தப் புண்ணினின்று பெருகிய ரத்தத்தினால் ராமன் நனைந்தனன். பிறகு என்னாலெழுப்பப்பட்ட இராமன் எனது கஷ்டத்தைக் கண்டு மிகச் சீறித் தனது தர்ப்பாஸனத்தினின்று ஓர் தர்ப்பத்தை யெடுத்து அதைப் பிரமாஸ்திர மந்திரத்தினால் மந்திரித்து அக் காகத்தின் மேலெய்தனன்.

அக் காகம் இந்திரனது மகனும், அவனைப் பிரமாஸ்திரம் ஆகாயத்தில் துரத்திக்கொண்டே போயிற்று. அக் காகம் தன்னை எவரேனும் காப்பாற்றுவாரென்று மூவுலகும் திரிந்தது; தந்தை தாயார்

183160

தேவர் முனிவர்முதலிய யாவரும் கைவிட்டதினால் முடிவில் இராமனிடமே வந்துசேர்ந்தது.

சரண்யனான ராமன் கருணையினால் கொல்லாது விட்டனன்; ஆனாலும் தனது பிரமாஸ்திரம் வீணாகாதாகையால் அக் காகத்தின் விருப்பத்தின்படி அதன் வலது கண்ணைக் குருடாக்கி உயிரோடு விட்டனன்; பிறகு காகம் தன்னிருப்பிடம் சென்று சேர்ந்தது.'—என்றிங்ஙனே பிராட்டி கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இக் கதையானது பாத்ம புராணத்தில் சிறிது வாசிபடக் கூறப்பட்டுள்ளது. *ந சாப்யுபாரமங் மாம்ஸாத் பக்ஷயார்த்தீ பலிபோஜந: ...பக்ஷக்ருத்நேந காகேந* என்று ஸ்ரீராமாயணத்தில் காகம் மாம்ஸ பக்ஷணத்தில் ஆசையினால் வந்ததாகவன்றோ சொல்லப்பட்டது. பாத்மத்திலோ வென்னில் *ஸ த்ருஷ்ட்வா ஜானகீம் தத்ர கந்தர்ப்ப சரபீடித:, விததார நகைஸ் தீக்ஷ்ணை: பீநோந்நத பயோதரௌ* என்று காகனும் இராவணனைப்போல் காமபீடிதனாகவே வந்து அபசாரப்பட்டனனாகச் சொல்லிற்று.

இவ்வரலாற்றைப் பிராட்டி தன் திருவாக்கினால் அனுமனிடம் சொல்லும்போது காமபீடிதனாய் வந்தானென்று சொல்ல நாணி மாம்ஸார்த்தியாய் வந்தானென்று மறைத்துச்சொல்லியிருப்பதாக நினைக்க இடமுள்ளது.

அன்றியும், பிராட்டி தானே காகத்தின் தலையையெடுத்துப் பெருமாள் திருவடியோடேசேர்த்து சரணாகதி செய்ததாகக்காட்டி இவனை ரட்சித்தருளவேணுமென்று இராமனை வேண்டினதாகப் பாத்ம புராணத்தில் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது; அவ்விடத்து ச்லோகங்கள் இவை;—*புரத: பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம் ததா, தச்சிர: பாதயோஸ் தஸ்ய யோஜயாமாஸ ஜாநகீ. ப்ராணஸம்சயமாபந்நம் த்ருஷ்ட்வா ஸீதாத வாயஸம், த்ராஹி த்ராஹீதி பர்த்தாரம் உவாச தயயா விபும்* என்று.

இவ்வுண்மையைப் பிராட்டி (ஸ்ரீராமாயணத்தில்) சொல்லாதொழிந்தது ஏனென்னில்; அங்குத் தன்னுடைய பெருமையைச் சொல்லிக்கொள்ளவேண்டிய அவச்யமில்லையன்றோ. 'காகத்தை ரட்சிக்கும்படி நான்தான் செய்தேன்' என்று அவ்விடத்தில் தெரிவிப்பதில் சுவையில்லையே. ஆனாலும் இவ்விஷயத்தை ஒருவாறு காட்டியிருக்கின்றாள்; எப்படியென்னில், *வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்* என்பது பிராட்டியின் வாக்யம்.

இதில் 'க்ருபயா' என்கிற சொல் கவனிக்கத்தக்கது. இராமன் தன்னுடைய க்ருபையினாலே ரட்சித்தானென்பது மேலெழுந்த பொருள். க்ருபா என்பது பிராட்டிக்கு வாசகம். *லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்யரூபயா* என்றும், *அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம்* என்றும் பிராட்டியை க்ருபைதானே வடிவெடுத்தவளாகச் சொல்லியிருக்கின்றதன்றோ! ஆகவே 'க்ருபயா பர்யபாலயத்' என்று பிராட்டி சொன்னதானது 'இராமன் காகத்தை வதை செய்யாமல் காப்பாற்றினது என்னால்தான்' என்று வ்யங்க்யமாகத் தெரிவித்தபடி.

இதனைத் திருவுள்ளம்பற்றியே திருமந்திரார்த்தத்தில் பிள்ளை லோகாசாரியர் "இவள் ஸன்னிதியாலே காகம் தலை பெற்றது" என்று அருளிச்செய்தார்.

பிராட்டி விஷயத்தில் காகாசுரனுடைய அபராதம் வலிதா? இராவணனுடைய அபராதம் வலிதா? என்று ஆராய்ந்து பார்க்குமளவில், இராவணனுடைய அபராதம் சிறிது, காகத்தின் அபராதமே மிகவும் வலிது என்று நிர்ணயிக்கத் தட்டில்லை. திருமேனியை நலிந்து உதிரவெள்ளம் பெருகும்படியான மஹாபராதத்தை இராவணன் செய்யவில்லையே!

இதை மணவாளமாமுனிகளும் திருமந்திரார்த்த வியாக்கியானத்தில் விளங்கக் காட்டியருளினர். பிராட்டியைக் கவர்ந்துசென்ற இராவணன் இராமபிரானோடு போர்புரியும்போதும் பிராட்டியை அசோகவனத்தில் வைத்திடாமல் அருகிலேயே வைத்துக்கொண்டு யுத்தம் நடத்தியிருந்தானாகில், காகம் போலவே அவனும் உயிர் பெற்றே உய்ந்திருப்பன் என்பது நம் ஆசாரியர்களுக்குத் திண்ணமான நம்பிக்கை. ஆகவேதான் "இவள் ஸன்னிதியாலே காகம் தலை பெற்றது" என்றவுடனே "அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்றருளிச்செய்தார் பிள்ளைலோகாசாரியர்.

பிராட்டி அருகேயிருந்தால் மாத்திரம் போதுமோ? சரணாகதி செய்தாலன்றோ பெருமாள் ரக்ஷிக்கக்கூடும். காகம் சரணாகதி செய்தபடியாலன்றோ உயிர்பெற்றது. *த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்* என்று-ஒருவர்க்கும் தலைவணங்கமாட்டேனென்று கண்டிப்பாகக் கூறுகின்ற இராவணன் சரணாகதி செய்யமாட்டானே; அப்படிப்பட்டவனுக்கு அருகே பிராட்டி இருந்து தான் என்ன பயனாகும்? என்றிப்படி சிலர் கேட்கக்கூடும்.

அவர்களுக்குச் சொல்லுகிறோம். 'காகம் சரணாகதி செய்தபடியினால்தான் உயிர்பெற்றது' என்று நினைப்பது பொருத்தமற்றது. காகம் மூவுலகும் திரிந்தும் எங்கும் கால்பாவிநிற்க இடம் பெறாமையாலே தரிப்பற்றுக் கீழேவிழுந்த வத்தனையேயொழிய, பெருமாள் பக்கலில் சரணாகதி செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு வந்ததன்று. *புரதः பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம்* என்று பாத்ம புராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று.

ஸ்ரீராமாயணத்திலும் *ஸ தம் நிபதிதம் பூமௌ* என்று, தரிப்பற்றுத் தரையில் விழுந்தமாத்திரமே சொல்லிற்று. ஆளவந்தார் ஸ்தோத்திரத்தில் (63) *ரகுவர யதபூஸ் த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய ப்ரணத இதி தயாளுः* என்றவிடத்து வியாக்கியானத்தில் வேதாந்த தேசிகர்—காகம் நமஸ்கரித்து சரணாகதி செய்யவில்லையென்றும், கருணாகுத்ஸ்தனுடைய திருவுள்ளத்தினாலே சரணாகதனாகக் கொள்ளப்பட்டானத்தனை என்றும் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. *சத்திசையுமுழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போல்* என்று அடைக்கலப்பத்திலும் அவர்தாமே கூறினர். இளைத்து விழுந்த வத்தனையே யொழிய சரணாகதி செய்தமையில்லை யென்பதே இதன் கருத்து.

காகம் சரணாகதி செய்ததாகவும் ஒரு யோஜனையுண்டு; அதைக் கொண்டே ஸ்ரீவசநபூஷணத்தில் "தர்மபுத்ராதிகளும் த்ரௌபதியும் காகமும் காளியனும்" என்று, சரணம்புகுந்தவர்களிலே காகமும் சேர்த்துச் சொல்லப்பட்டது.

இந்த மருமத்தையும் சிறிது விவரிப்போமிங்கு. சரணாகதி யாவது என்ன? என்று விமர்சிக்குமளவில், அதைப் பற்றிப் பலர் பலவகையாகக் கூறுவர். 'எம்பெருமான் செய்ய நினைக்கும் ரக்ஷணத் திற்கு இடையூறாகத் தான் செய்யும் ப்ரவ்ருத்தியிலிருந்து விலகி நிற்பதே சரணாகதி' என்பதும் ஒரு முடிவாகத் தேறியுள்ளது. இப்படிப்பட்ட சரணாகதிதான் காகத்தினிடத்தில் காணமுடியும். இதற்காகப் பெருமாள் காகத்திற்கு உயிர்ப்பிச்சை யளித்தா ரென்றே சொல்லவேண்டும்.

இப்படிச் சொல்வதானால் இராவணனிடத்திலும் இங்ஙனே சொல்வதற்குத் தடையில்லை. எப்படியென்னில், 'இன்று போய் நாளை வா' என்று சொல்லி இராவணனுக்குப் பெருமாள் நியமனம் தந்தருளும்போது, இராவணனது நிலைமை காகத்தின் நிலைமையோ டொத்திருந்ததன்றோ. *சசால சாபஞ்ச முமோச வீர:* என்றது- போக்கற்றுச் செயல்மாண்டுநின்ற நிலையே யன்றோ

ஆக, காகத்தினிடத்தில் சரணாகதியென்று சொல்லக்கூடிய தான நிலைமை எது காண்கிறதோ, அது இராவணனிடத்திலும் காண்பதனாலே மஹாபராதியான காகத்தையே ரக்ஷித்தருளின பெருமாள் அவ்வளவு அபராத மில்லாதவனான ராவணனை அவசியம் ரக்ஷித்தேயிருக்கவேண்டும். ஏன் ரக்ஷிக்கவில்லையென்று கேட் டால், பிராட்டி அருகிலிருக்கையாகிற ஒரு வாய்ப்பு காகத்திற்கு இருந்தது; அது இராவணனுக்கு இல்லையே. ஆதலால்தான் ரக்ஷிக்க வில்லை--என்று சொல்லக் குறையில்லையாயிற்று.

ஆக, இவ்வளவு நிரூபணங்களினால், பிராட்டி இராவணனுக்கு உபதேசித்த ஹிதவசனத்தில் "தர்மஜ்ஞ: சரணாகதவத்ஸல:" என்று கூறியதையும், ஸீதாவிவாஹ காலத்தில் "மம ஸுதா ஸஹதர்மசரீ தவ" என்று ஜநக சக்ரவர்த்தி சொல்லியிருந்ததையும் இணக்கி, தேறின ஸாரப்பொருள் தெளிவிக்கப்பட்டு முடிந்தது.

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய
காந்தி கீர்த்தனம்
350 பக்கங்கள். ரு. 3-8-0.
உயரிய கிளேஸ் பதிப்பு.
இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷ பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க இல்வசச் சம்பள நிதிக்கே!

# என் சுய சரிதை

**சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்**

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## இலங்கை வாஸம்

இலங்கை இதுவரைக்கும் நாங்கள் பார்த்திராத ஒரு புதிய இடம் அல்லவா? ஆகவே, அங்கு போவதில் ஒரு உத்ஸாகமும் சந்தோஷமும் எங்களுக்கு. கொளும்பில் 2 நாள் இருந்துவிட்டுப் பிறகு கண்டியிலேயே ஒருவீடு எடுத்துக்கொண்டு ஒரு மாதம் அங்கேயே இருப்பதாக ஏற்பாடு. அதற்குவேண்டிய ஆயத்தங்கள் செய்துகொண்டு மே மாதம் 6-ஆந்தேதி போட் மெயிலில் புறப்பட்டோம். ''ஸிலோன் போட்மெயில்'' என்றால் ஸிலோனுக்குப்போகும்''போட்''அல்லது ஸ்டீம் லாஞ்சுக்குச்சரியாகப்போய் தனுஷ்கோடியில் சேரும் வேகமான ரயில் என்று அர்த்தம். 7-ஆந்தேதி மற்பகல் தனுஷ்கோடி போய்சேர்ந்தோம். பாம்பனிலேயே பிரயாணிகளை யெல்லாம் இறக்கிப் பரீக்ஷித்து அம்மை குத்துகிறார்கள். இரண்டாம்வகுப்புப் பிரயாணிகளுக்குச் சோதனை அத்தனை கடுமையில்லை ஆகவே எங்கள் சோதனை அதிசீக்கிரத்திலேயேமுடிந்துவிட்டது.ஸ்நானம்செய்து ஆகாரத்தை முடித்துக்கொண்டு மறுபடி ரயிலேறி தனுஷ்கோடிக்குப்போய்ச் சேரும் போது மணி 6 ஆகிவிட்டது. ஒரு சிறு ஸ்டீமர் அறையுள்ள, நீராவிக்கப்பல்கள் என்னும் ஸ்டீம் லாஞ்சுகள் பிரதிதினமும் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் போய்வந்துகொண்டிருக்கும் இந்த இடத்தில் பெரிய ஸ்டீமர்கள் போவதற்கு வேண்டிய ஆழம் கடலில் இல்லை. ராமேச்வரத்திலிருந்து லங்கைக்கு ஸ்ரீராமர்கட்டியபாறைகளான அணைக்கட்டு ஆங்காங்கு ஜலத்தில் அமிழ்ந்திவிட்டதென்றும் சற்று உயர்ந்த பாகங்கள் ஆங்காங்கு தெரிகிறதென்றும், அந்த அணையினாலேயே ஸ்டீமர்கள் அந்தவழி போக முடியவில்லையென்றும் சொல்வார்கள். இப்புறம் பெரிய ஸ்டீமர்கள் இலங்கையின் கிழக்குக்கரையைச் சுற்றிக்கொண்டுதான் மேற்கில் இருக்கும் துறைமுகப்பட்டினமாகிய கொழும்புக்குப் போகின்றன. நிற்க,

### ஸ்டீம் லாஞ்சு பிரயாணம்

6½ மணிக்கு ஸ்டீம்லாஞ்ச் புறப்பட்டது. அன்று சற்று புயல்காற்றுடன் கடலில் கொந்தளிப்பு அதிகமாயிருந்தது. ஸ்டீம்லாஞ்சு ஆட்டம் அதிகம். ஸ்டீமர்களில் ''டெக்'' கில் உள்ள பெஞ்சுகள் நாற்காலிகள் எல்லாம் கீழ் தளத்துடன் ஆணியினால் முடுக்கிப் பொருத்தப்பட்டிருக்கும். ஸ்டீம்லாஞ்சுகளில் அநேகமாய் அப்படியிராது. ஆகவே, புயல்காற்றில் கப்பல் பக்கத்துக்குப்பக்கம் ஆடியபோது, பெஞ்சுகளும் நழுவி நழுவி முன்னும் பின்னுமாக நகர ஆரம்பித்துவிட்டன. நாங்கள் நிலைத்துநிற்க முடியாமலும் பெஞ்சுகளிலும் உட்காரமுடியாமலும் சிறுதுநேரம் அவஸ்தைப்பட்டோம். அது ஒரு தமாஷாயுமிருந்தது. இப்படியாக ஒரு அரை மணி நேரம். பிறகு ஸ்டீமர் பிரயாணம் சுகமான சமுத்திரக்காற்றுடனும் சுற்றிலுமுள்ள காட்சியுடனும் மிகவும் இன்பமாயிருந்தது. ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாக மின்ன ஆரம்பித்தன. இருள் சூழ்ந்து கொண்டது. அலைகளில் பாஸ்பரஸ் என்னும் ஒரு பிரகாசம். சுமார் 4½

மணிக்கு லங்கையின் வடமேற்குக் கரையிலுள்ள தலைமன்னார் என்னும் இடத்தைச்சேர்ந்து அங்கு காத்திருந்த ரயிலில் ஏறினோம். மறுநாள் காலை 7½க்கு கொழும்புபோய்ச்சேர்ந்தோம். மாரதானை என்பது ஸ்டேஷன் பெயர். ரயில் கடல்கரையை அடுத்தே போகிறது. வரிசை வரிசையாக தென்னை மரங்கள் அபரிமிதம். நம் ஊர் தென்னைகளைவிட அதிக உயரமாயும் பருமனையும் வளைவையாயும் இருக்கின்றன. தேங்காய்களும் மிகப் பெரிய அளவு. இளங்காய்களில் 2, 3 ஆழாக்கு அளவு இளநீர்.

### இயற்கைக் காட்சிகளும், செயற்கைக் காட்சிகளும்

திருநெல்வேலியைச்சேர்ந்த சங்கரய்யர் என்பவர் கொழும்புவில் வியாபாரத்தொழில் செய்பவர் ஸ்டேஷனுக்கு வந்து எங்களை அவர் வீட்டுக்கு அழைத்துச்சென்றார். கொழும்புவில் 3 நாளிருந்து, ஹார்பர், தோட்டங்கள், முதலான இடங்கள் யாவும் பார்த்தோம். ஸின்னமன் தோட்டம் என்னும் இடத்தில், சென்னைக்கு 2 முறை வந்து எனக்கு பழக்கமான மிஸஸ் திருநாவுக்கரசு என்பவளைப்போய்ப் பார்த்துவந்தோம். பிறகு 10-ஆந்தேதி பகல் 1½-மணி ரயிலில் கண்டிக்குப் புறப்பட்டோம். புனாவிலிருந்து பம்பாய்க்குப்போவது போல அநேகம் மலைகளையும் அவற்றில் சுமார் 12 குகைகளையும் கடந்து ரயில்போகிறது. ரயிலில் போகும்போது சுற்றிலுமுள்ள காட்சிகள் கண்களுக்கும் மனதுக்கும் மிகவும் ரம்யமானவை. அஸ்தமிக்கும் சமயம் கண்டி ஸ்டேஷனில் இறங்கினோம். எங்களைச் சந்தித்து அழைத்துச்செல்லவேண்டிய ஸ்ரீமான் பெரேரோ என்பவர் கால் மணி தாமதமாக வந்தார். அதற்குள் நாங்கள் மிகுந்த கவலையும் கலவரமும் அடைந்துவிட்டோம். இடமோ புதிது. நேரமோ இருட்டிக்கொண்டுவருகிறது. தமிழ்தெரிந்தவர்கள் யாரும் இல்லை. போர்ட்டர்கள் சிங்கள பாஷை பேசுவது புரியவேயில்லை. குளிர் வேறு ஆரம்பித்துவிட்டது. ஸ்டேஷன்மாஸ்டரிடம் ஆங்கிலத்தில் பேசி பெரேரோ என்பவர் இருப்பிடத்தை விசாரித்தோம். ஸிலோனில் பெரேரோ என்னும் பெயர் அநேகருக்கு உண்டாம். ஆகவே எந்த பெரேரோ என்று ஸ்டேஷன்மாஸ்டர் கேட்பதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. நல்லகாலமாக அந்த ஸமயம் நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெரேரோ என்பவரே வந்துசேர்ந்து, அவர் தாமதித்துவந்ததற்கு மன்னிப்புக்கேட்டுக்கொண்டு, எங்களுக்காக வாடகைக்கு அமர்த்தியிருந்த ஜாகைக்கு எங்களை அழைத்துச்சென்றார். வீடு அழகிய ஒரு சிறு பங்களா. வீட்டுக்கு சமீபத்தில் மகாபலிகங்கையென்றும் ஒரு நதி. முக்கால் மைல் தூரத்தில் பெரதெனியா (Peradenia) என்னும் ஒரு பெரிய தோட்டம். (Botanical Garden) உலகத்திலேயே மிகப்பெரிய தோட்டம் அது. வானளாவிய விருக்ஷங்கள் என்று சொல்வார்களே, அந்தமாதிரி உயரமும் பருமனுமான மகாவிருக்ஷங்கள், அவற்றின்மேல் ஏறிப்படரும் மிகப் பருமனான தண்டுகளையுடைய அநேக வருஷங்கள் ஜீவித்திருக்கும் மகோன்னதமான கொடிகள், பலவித புஷ்பச்செடிகள், கொடிகள், மரங்கள்; ஆங்காங்கு கொடி வீடுகள், தாமரை அல்லி இவைகளையுடைய தடாகங்கள், செய்குன்றுகள், பிரதிதினம் சாயங்காலம் தோட்டத்துக்குப் போவதிலும் மற்ற இடங்களைப் பார்ப்பதிலும் காலங்கழித்தோம்.

### அநுஷ்டானத்தில் புத்தமதம்!

சிங்களவர்களின் மதம் புத்தமதம். ஜீவஹிம்ஸை கூடாது என்பது புத்தமதத்தின் முக்கியமான ஒரு கொள்கை. அப்படியிருந்தும் புத்த மதத்தைச்சேர்ந்தவர்கள் யாவரும் தாராளமாக மாமிசம் சாப்பிடுகிறார்கள்.

அதைப்பற்றி அவர்களைக் கேட்டால் தங்கள் கையால் எதையும் கொல்லவில்லையென்றும், வென்னீரில் போட்டு பாத்திரத்தை மூடிவிட்டால் அவை தாமே இறந்துபோகின்றன என்றும் அவை துடித்து இறந்துபோவதை தங்கள் கண்ணால் பார்ப்பதில்லையென்றும் சமாதானம் சொல்கின்றார்!! கடைகளில் முன்பக்கத்தில் ஒரு கயிறுகட்டி அதில் விலைக்கு வேண்டிய கத்தரி, வெண்டை, வாழைக்காய்கள் கொத்துக்கொத்தாகக் கட்டியிருக்கும்; இவற்றினிடையில் மீன்கள், மாமிசம் இவைகளும் கட்டித்தொங்கும். பார்ப்பதற்கு நமக்கு அருவருப்பாயிருக்கும்.

கண்டியில் ஒரு பெரிய ஏரியும் அதைச்சுற்றி அழகான தோட்டப் பாத்திகளும் நடைபாதையும், உட்காருவதற்கு ஆசனங்களும் உண்டு. மாலைநேரங்களில் ஜனங்கள் காற்றாட அங்குவந்து சேர்வார்கள். ஏரியைச் சுற்றி ஒரு தடவை நடந்தால் அதுவே போதுமான தேகாப்பியாசம். ஏரியின் அருகில் ஒரு பெரிய புத்தர்கோவில். அங்கு புத்தஸந்நியாஸிகள் நிரம்ப இருக்கின்றனர். ஹிந்து மதத்தில் ஒரு முறை ஸந்நியாச ஆச்ரமத்தை மேற்கொண்டுவிட்டால் மறுபடி கிரகஸ்தனாகத்திரும்பமுடியாது. புத்தர்களுக்குள் அப்படியல்ல. ஏழ்மை மிகுந்து சாப்பாட்டுக்கு கஷ்டம் உண்டானால், உடனே காவிஉடையை அணிந்துகொண்டு, முண்டனம் செய்துகொண்டு வந்துவிடுவார்கள். புத்த மடங்களிலும் இந்த ஸந்நியாஸிகளுக்கு மரியாதையும் மதிப்பும் ஆகாரமும் கிடைத்துவிடும். எப்போதாவது இந்த வாழ்க்கை சப்பிட்டுப்போனால் லௌகிகர்களாக மாறிவிடுவார்கள். நிரம்ப சௌகரியமான ஏற்பாடு!!

## குருவுக்கு மிஞ்சின சிஷ்யன்

புத்த பகவானுடைய கோவில்கள், புத்தபகவானுடைய ஒருரோமம், ஒரு பல், ஒரு எலும்புத்துண்டு ஏதேனும் ஒன்றை ஒரு அழகிய பாண்டத்திலிட்டுப் புதைத்து, அதன்மேல் கட்டப்பட்டிருக்கும். இவற்றில் உண்மையுமுண்டு, எத்தனையோ மோசங்களுமுண்டு. ஒரு கிருஸ்தவப்பாதிரியிடமிருந்த சிஷ்யர் பிழைப்பதற்குத் தனித்துச் சென்றபோது, குருவினிடமிருந்து ஒரு ஆட்டுக்குட்டியைப் பெற்றுக்கொண்டுபோனார். வழியில் அது இறந்துவிட்டது. ஒருஇடத்தில் அதைப் புதைத்தார். உடனே அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. புதைத்த இடத்தின்மேல் ஒருகோவில் கட்டி அந்த வழியாகப் போய்வருபவர்களிடம் ஏசுநாதரின் ஒருநகம் அந்த இடத்தில் புதைத்திருப்பதாயும், அந்த இடத்தை தரிசித்தவர்களுக்கு சகல ரோக நிவாரணம் ஏற்படுமென்றும் அவர்களிடமிருந்து நிரம்பப் பணம்பெற்று பக்கத்திலேயே ஒரு மடம் கட்டிக்கொண்டு சுகமாக இருக்கும்போது இவருடைய குரு இவரைப் பார்க்கவந்து வார்த்தமானத்தைத்தெரிந்துகொண்டு, "அப்பனே! குருவுக்கு மிஞ்சின சிஷ்யனாகிவிட்டாயே. நீ இங்கு புதைத்திருக்கும் ஆட்டுக்குட்டியின் தாயாரைப்புதைத்த இடத்தில்தான் நான் கட்டியிருக்கும் கோவிலும் மடமும்" என்று சொன்னாராம்.

புத்த கோவில்களில் சிற்ப சித்திரங்கள் எல்லாம் நிரம்பவும் நன்றாயிருக்கும். சில பணக்காரக் கோவில்கள் சலவைக்கற்களாலேயே கட்டப்பட்டிருக்கும். புத்தரது விக்கிரகங்கள் ஆழ்ந்த நிஷ்டையில் கீழ்நோக்கிய பார்வையுடன் சாந்தமான புன்சிரிப்புடன் கூடிய முகபாவத்துடன் பக்தியை உண்டாக்குவதாயிருக்கும். விக்கிரகங்களுக்கு எதிரில் நிறைய புஷ்பங்களை வைத்து அலங்கரித்து தூபதீபங்கள் ஊதுவத்திகள் எல்லாம் வைத்து பக்தர்கள் எதிரில் அமைதியாக உட்கார்ந்து ஜபம் செய்வார்கள்.

காப்பித்தோட்டம் ரப்பர்தோட்டங்கள் சில பார்த்தோம். நம் இந்தியக் கூலிகள் தமிழ் பேசிக்கொண்டு அங்கு வேலைசெய்கின்றார்கள். ரப்பர் மரங்களிலிருந்து பால் எடுப்பதிலிருந்து ரப்பர் செய்துமுடிக்கும்வரைக்கும் உள்ள வேலைகளைப் பார்த்தோம், காப்பிச் செடிகளுக்குப் பக்கத்தில் ஆத்திச் செடிகள் பயிரிடுகின்றார்கள். ஆத்தி செடிகளின் வேர்களில் ஒரு வித "பாக்டீரியா" "நைட்ரஜன்" ஆகாரத்தைத் தயாரித்து பூமிக்குக் கொடுக்கிறது. அந்த உரம் காப்பிச் செடிகளுக்கு அவசியம் வேண்டியது.

## கைஸரிஹிந் வெள்ளிமெடல்

ஜூன் மாதம் ஆரம்பத்திலேயே தென்மேற்குப் பருவக்காற்றும் மழையும் ஆரம்பித்துவிட்டது. சாதாரணமாக 10, 15 தேதிக்குத்தான் ஆரம்பிக்கும்; அந்தவருஷம் சீக்கிரமே ஆரம்பித்துவிட்டது. 2, 3 மாதங்கள் விடாமல் அடிக்கடி மழை வருஷிக்குமாம். எங்கள் ஏற்பாட்டின்படி நுரெலியாவும் அனுராதபுரமும் பார்க்கவேண்டும், மழைஆரம்பித்துவிட்டபடியால் போகமுடியவில்லை. ஆகவே, ஜூன் ஆரம்பதில் புறப்பட்டு, அம்பாசமுத்திரத்துக்கு அருகில் உள்ள பாபநாசத்துக்கு வந்தோம். அம்பாசமுத்திரத்தில் அந்த சமயம் என் அத்தை புதல்வர் C. S. சுப்ரமணியம் ஸப் ஜட்ஜாக இருந்தார். அன்று காலையிலேயே வெல்லிங்டன் கவர்னர் தம்பதிகளிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்திருந்தது. மன்னர்பிரான் பிறந்த தினத்தில் (ஜூன் 3-ஆம் தேதி) பட்டம் அளிக்கப்படுபவர்களில் நான் ஒருத்தி என்றும், எனக்கு கைஸரி ஹிந்த் வெள்ளி மெடல் கொடுக்கப் போவதாயும், அதற்காக அவர்களது சந்தோஷத்தைத் தெரிவிப்பதாயும் இருந்தது. இதைப்பற்றி முன்கூட்டி எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் சற்றும்எதிர்பாராத விஷயம். அந்தஒன்றிரண்டுநாட்களில் அநேகம் பெரியவர்களிடமிருந்து தங்கள் தங்கள் சந்தோஷத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்து எனக்குக் கடிதங்கள் வந்தன. அவர்களுக்கெல்லாம் என் நன்றியறிதலைத் தெரிவித்து பதில் எழுதினேன்.

## திருக்குற்றால வாசம்

பருவ மழை சீக்கிரம் ஆரம்பித்துவிட்டதால் திருக்குற்றாலத்தில் 'ஸீஸன்' சீக்கிரமே ஆரம்பித்து அருவிகளில் ஜலம் நிறைய விழ ஆரம்பித்துவிட்டது. ஆகவே அங்கு சென்று திருநாவுக்கரசு ஸ்வாமிகள் மடத்துக்கு எதிரில் நல்லகண்ணுபிள்ளை யென்பவரின் பங்களா ஒன்றில் தங்கி பிரதி தினமும் இரண்டு வேளையும் அருவிஸ்நானமும் கோவில் தரிசனமும் செய்துகொண்டு 15 நாட்கள் இருந்தோம்.

இடையில் 2 நாள் என் தாயார், ஸ்வர்ணம் நித்யாவுடன் திருவனந்தபுரம் போய்வந்தார்கள். ஒரு ஏழையான பெண் கோமதி என்னும் 15வயதுப்பெண்ணை அழைத்துவந்தார்கள். ஐஸ்ஹௌஸில்சேர்ந்து படிக்கும் எண்ணத்துடன்தான் வந்தாள், சுதேசராஜாங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு கவர்மெண்ட் உதவி கிடையாது என்று ஒரு நிபந்தனையிருந்தது. பல காரணங்களை முன்னிட்டு அவள் எங்கள் வீட்டிலேயேதங்கி எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மனுஷியாகவே ஆய்விட்டாள். என் தாயாரிடத்திலேயே பாடம் சங்கீதம் எல்லாம் கற்றுக்கொண்டு இப்பவும் எங்கள் குடும்பத்திலேயே இருக்கிறாள். ஜூலை முதல்தேதி குற்றாலத்தைவிட்டுப் புறப்பட்டு 3-ஆம்தேதி சென்னை வந்துசேர்ந்து, 5-ஆம்தேதி பாடசாலை திறக்கப்பட்டது.

(தொடரும்)

## 13

அன்று செல்ல, மறுதினம் காலையில் முதல் நாள் அரசம்பட்டிக்குச் சென்ற குதிரைவீரன் திவானிடம் அவசரமாக வந்து, "ப்ரபோ! அந்தக் கிழவியின் ப்ராணன் போகவில்லை. இன்னும் ஊசலாடிக்கொண்டிருக்கிறதாம். அவளை வண்டியில் வைத்து ஜாக்ரதையாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். மகாராணியைப் பார்த்துவிட்டால் அந்த அம்மாளுடைய ஆசை தீர்ந்துவிடுமாம். சரியானபடி நல்ல நினைவில்தான் இருக்கிறார்கள். அவர்களை நமது நோயாளி விருந்தினர் தங்கும் இடத்தில் தங்கவைத்துவிட்டு இங்கு விஷயம் அறிவிக்கவந்தேன்" என்றான்.


உடனே திவான் சந்தோஷத்துடன் மகாராணியின் விடுதிக்கு வந்தார். வீரலக்ஷ்மி உடம்பு குணமாகி இருந்ததெனினும் படுத்திருந்தாள். அவள் தாயார் அவளருகில் உட்கார்ந்திருந்தாள். முதல் நாள் ஏழைக் குடியான மக்கள் விஷயமாக நடந்த கலாட்டாவுக்குப் பிறகு வள்ளியம்மாளை அவர் தனித்துப் பார்க்கவில்லை. அந்த ஏழைகளை உள்ளேவிட்டதற்கே அந்த அம்மாள் தாறுமாறுகத் திட்டியதாய் வேலைக்காரர்கள் சொல்லியிருப்பதால், கிழவியையும் பார்க்கக்கூடாதென்று சொல்லுவாளோ என்று அஞ்சினர்! இருப்பினும், சாகப்போகும் கிழவி இவ்வளவு ஆசையுடன் வந்திருப்பதால் நாம் அந்த அம்மாளின் உத்தரவை எதிர்பார்க்கவேண்டாம் என்று தீர்மானித்துக்கொண்டு வீரலக்ஷ்மி அருகில் வந்து "மகாராணீ! நீங்கள் இரவு பகல் பார்க்கவேண்டும்என்று ஆசைப்பட்டு சதா சொல்லும் எதிர்வீட்டுக் கிழவி வந்திருக்கிறார்களாம். வாருங்கள். நான் அழைத்துச் செல்கிறேன்" என்று கூறிமுடிப்பதற்குள், வீரலக்ஷ்மி, "ஹா! பாட்டியா வந்திருக்கிறார்கள்!... இந்த ஊருக்கா?...என் சினேகிதர்கள் எங்கே காணவில்லை?"...என்று கூறியபடியே தாவி எழுந்து திவானுக்குமுன்பு இரண்டடிகள் வைத்தவாறு, "அம்மா! அம்மா! நீயும் வாம்மா! பாட்டியைப் பார்க்கலாம்." என்று தன்போக்காய் குசாலாக ஓடினாள்.

மகாராணியின் வார்த்தையைக் கேட்டதும் வள்ளியம்மாள் சீறி எழுந்து வீரலக்ஷ்மியைத் தடுக்கப் பாய்ந்தாள். இதற்குள் திவான் சற்று கடுமையான குரலில் "அம்மணீ! தயவுசெய்து நில்லுங்கள். உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நீங்கள் கிழவியிடம் வரவேண்டாம். மகாராணியைத் தடுப்பது சரிஇல்லை." என்று கூறியவாறே மகாராணியை அழைத்துக்கொண்டு கிளம்பினர். வள்ளி

யம்மாள் முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கிறது. வேறு எதுவும் சொல்லவும்முடியாது மெல்லவும் முடியாது தவித்தாள்.

அரண்மனையிலிருந்தே போகக்கூடிய வழியில் வீரலக்ஷ்மியை பல்லக்கில் ஏற்றித் தானும் சென்றார். கிழவி படுத்தபடியே "கண்மணி வீரலக்ஷ்மி வந்தாளா! வந்தாளா?" என்று கேட்டவாறிருந்தாள். குழந்தை துள்ளி ஓடிச்சென்று "பாட்டி! பாட்டி! இதோ வந்துவிட்டேன். உடம்பு எப்படி இருக்கு!" என்றவாறு பாட்டியை முகத்தோடு முகம் வைத்துத் தன் சந்தோஷத்தைக் காட்டினாள்.

கிழவியின் அபாரமான ஆனந்தத்தில் மெய்மறந்துபோய் "என் ராஜாத்தி! என் கண்மணீ! உன்னைப் பார்த்து என் கலி தீரும் வரையில் எனக்கு நல்ல நினைவும் ப்ராணதானமும் கொடுக்கும்படி பகவானை வேண்டிக்கொண்டே இருக்கிறேன். இனி என்னுயிர் இப்போதே போனாலும் பாதகமில்லை. என் செல்லமே! எங்கே உன் முகத்தைக்காட்டு" என்று அன்பை அள்ளிவீசி அணைத்துக்கொண்டு பல முத்தங்களை மழைபோல் பொழிந்தாள். "என் ராஜாத்தி! என் கிளியே! நீ பிறந்த அந்த நிமிஷமே ஒரு மகான் வந்து சொல்லிய வார்த்தைகளை அப்படியே அன்றே நான் எழுதி



வைத்திருக்கிறேன். இந்தா! இதை நீ உன் பொக்கிஷமாக எண்ணி பத்திரப்படுத்திக்கொள்ளு. கண்மணீ! இதில் உள்ளபடியே நீ உன் செங்கோலை நடத்தி அழியாத புகழும் கீர்த்தியும் அடைந்து வாழவேண்டும். இதோ பாரு! கண்மணீ! உன்னிடம் உயிராக அன்புகொண்டு உன்னைப் பார்க்கவேண்டும் என்று எத்தனையோ அரும்பாடுபட்டு இங்குவந்த அந்த க்ராமத்து ஏழைச்சிறுமிகளையும் சிறுவர்களையும் இப்படி அடித்தும் இம்ஸித்தும் திருட்டுப் பட்டத்தைக் கட்டியும் அவர்களை அவமானப்படுத்தி அனுப்புவது தர்மமாகுமா! அவர்கள் உனக்கென்ன தீங்குசெய்தார்களம்மா?.... ஆவலாகப் பார்க்கவந்ததற்கு இத்தகைய தண்டனை விதித்து அனுப்பிவிட்டதைக் கேள்விப்பட்டுத்தான் நான் வழியில் இறந்தாலும் இறக்கிறேன். முதலில் நேரில் போய் பார்த்து இந்த அனியாயத்திற்கு ஒரு நியாயம் வழங்கச் செய்கிறேன்" என்று அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டு வந்தேன்.

கண்ணு! நீ பிறந்த ஊரையும், நீ வளர்ந்த ஊரையும், உன் ஆதி நேசர்களையும் நீ மறக்கலாமா! ஆரம்பத்திலேயே நீ பிறந்த க்ராம மக்களிடமே நீ கெட்டபெயர் வாங்கிவிட்டால் அது உனது எதிர்காலத்தின் வாழ்க்கை ஆணிவேரை எவ்வளவு தூரம் ஆட்டிவிடும் என்பதை உன் அரசாங்கத்தில் யாருமே கவனிக்கவில்லையல்லவா? படிப்பு வாஸனையோ, நிதான புத்தியோ, தேர்ந்த அனுபவ ஞானமோ எதுவும் அறியாத பட்டிக்காட்டு ஜனங்களின் பகைமையும் கோபமும் காட்டு விலங்குகளின் ஆக்ரோஷத்திற்கொப்பாகவன்றோ ஆகிவிடும்! இந்த மூடஜனங்கள் க்ராம அதிகாரி, தலையாரி, கணக்குப்பிள்ளை, மிராசுதாரர், நாட்டாண்மைக்காரர் ஆகியவர்களிடம் இந்த விஷயத்தைச் சொல்லி ஆத்திரப்பட்டு யோசனை கேட்டார்களாம். ஏற்கெனவே வேலனையும் வள்ளியையும் பிடிக்காத ஜனங்கள் இதையே ஒரு காரணமாகக்கொண்டு சீறி எழுந்தார்களாம். இந்த கஜேந்திரபுரிக்கு எதிரிகள் யார் யார் என்பதை அறிந்து அவர்களிடம் தாம் தூதுபோய் இச் செய்கைக்காகப் பழிதீர்க்கப் படைஎடுக்கச் சொல்லி வீரலட்சுமிக்கு அரசுரிமையே இல்லாது செய்து அவளைத் தோற்கடித்துக் கவிழ்த்து, வள்ளியின் இறுமாப்பை அடக்கவேண்டும் என்று பெரிய சதியாலோசனைகள் செய்வதை அறிந்து துடிதுடித்தேன்.

உன் நன்மையைக் கோரி அந்தக் கூட்டத்தை என் வீட்டிற்கே வரவழைத்து அவர்களுக்கு இதம் சொல்லிச் சமாதானப்படுத்திவிட்டு உடனே என்னை இங்கு கொண்டுவிடும்படியாகச் சொல்லி வந்துசேர்ந்துவிட்டேன். விஷயத்தையும் ப்ராணனைப் பிடித்துக் கொண்டு சொல்லிவிட்டேன். திவான் சாஹேப்! குழந்தையின் க்ஷேமத்தைத் தாங்கள்தான் கோரி இதற்கோர் வழி செய்ய வேண்டும்" என்று மூச்சுத்திணறக் கூறினள்.

இந்த அதி பயங்கரமான விஷயத்தைக் கேட்டதும் திவானுக்குத் தூக்கி வாரிப்போட்டது. வீரலட்சுமிக்கும் ஒரு மின்ஸார

தாக்குதல்போல் ஷாக்கடித்துப் பெரும் மனப்போரை உண்டாக்கி விட்டது. அச் சிறுவர்கள் திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்று வள்ளி சொல்லியனுப்பிய செய்தியைக்கூட வீரலட்சுமியிடம் சொல்லக்கூடாதென்று திவான் திட்டம்போட்டுவிட்டு, அவர்கள் ஊரைச் சுற்றிப்பார்ப்பதாயும், பிறகுவருவார்கள் என்றும் சொல்லிவைத்திருந்ததால் இந்த விஷயம் அவளுக்கு மகத்தான அதிர்ச்சியைக் கொடுத்தது. திவானை ஒரு பார்வை பார்த்தாள்.

"பாட்டி! நீ சொல்வதெல்லாம் எனக்கு ஏதோ கதை போல் இருக்கிறதேயன்றி வேறு ஒன்றுமே தெரியவில்லையே! என் சினேகிதர்களையா இப்படிச் செய்தார்கள்? யார் இப்படிச் செய்திருப்பார்கள்?... திவான் சாஹேப்! இதென்ன விஷயம்?" என்று கம்பீரமான த்வனியில் கேட்டாள்.

திவானுக்கு என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் சற்று விழித்தார். பிறகு சமாளித்துக்கொண்டு "மகாராணீ! கொஞ்சம் பொறுங்கள். இம்மாதிரி யார் செய்திருப்பார்கள் என்று நான் தீரவிசாரித்துச் சொல்கிறேன்... பாட்டி! எங்கள் மகாராணியின்மீது இத்தனை அன்புகொண்டு தாங்கள் இத்தகைய மரணாவஸ்தையிலும் இது விஷயத்தில் சாந்தியையும் சமரஸத்தையும் உண்டாக்கியதுமன்றியில் இங்குவந்து விஷயத்தைச் சொல்லியதற்காக நாங்கள் மிகமிக வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். பச்சிளங்குழந்தையாகிய எங்கள் ராணியின் மனங்கலங்க எதுவும் நடக்காமல் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். தாங்கள் ச்ரம பரிகாரம் செய்துகொள்ளுங்கள்" என்றார்.

கிழவி:—திவான் சாஹேப்! என் கடமை தீர்ந்துவிட்டது. நான் இனி என்னுடைய க்ராமத்தில் என் குடிசையில் உயிரை விடுவேன். இந்த சுபகரமான இடத்தில் நான் இறப்பது சரியல்ல; என்னை இப்போதே அனுப்பிவிடுங்கள்.....கண்மணி! உன் மனம் கலங்கித் தவிக்கக்கூடாது. நீ உலகம்போற்றும் சக்ரவர்த்தினியாய் வீராங்கனையாய், உதாரப் பெண்மணியாய் வாழ்வாயாக...கண்ணு உன்தாயாரைப்பார்க்கவேண்டும்னு ஆவல் துடிக்கிறது. அவள் ஏன் இன்னும் வரவில்லை. சொல்லியனுப்புகிறாயா?"... என்றாள்.

திவான் உடனே ஆளை அனுப்பினார். தனக்கு உடம்பு சரியில்லை; வரமுடியாதென்று சொல்லியனுப்பிவிட்டாள். ஏழைச் சிறுவர்களிடம் வீணான வஞ்சம்தீர்த்தது வள்ளியம்மாளின் தர்பாரகத்தானிருக்கும் என்று திவானுக்கு உடனே வெகு நன்றாகத் தெரிந்துவிட்டது. இந்த துஷ்டையின் செய்கைக்கு என்ன செய்து தடைகட்டுவது என்ற குழப்பமும் யோசனையும் பலமாக எழுந்து போராடத் தொடங்கியது.

வீரலட்சுமிக்குஏற்கெனவேதெரிவித்தபடியேபூர்வஜென்மத்து வாஸனையின் பலனோ, என்னவோ! இந்த விஷயத்தைக் கேட்ட உடனே உள்ளம் கலங்கி ஒரு தடுக்கமுடியாத உணர்ச்சியைக் கொடுத்தது..."திவான் சாஹேப்! சில தினங்களுக்குமுன்பு ஒரு

கதை சொன்னீர்களே! மகததேசத்து மங்கையின் சரிதை; அதைக் கேட்டதுமுதல் நானும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்ற யோசனை தோன்றிக்கொண்டேதான் இருந்தது. அந்த நாரீமணி தன்னுடைய குழந்தையை ஒருவன் காப்பாற்றித் தன்னிடம் சேர்த்ததற்காக அந்த மனிதனின் க்ராமத்தையே அவனுக்குத் தானம்செய்தாளே!...நான் பிறந்த என் க்ராமத்தையும் என் சகாக்களையும் நான் ஏன் உயர்வாகக் கருதி அதைச் சிறப்புறச் செய்யக்கூடாது என்கிறேன். திவான் சாஹேப்! இப்போதே என் பாட்டியுடன் நாமும் போகவேண்டும்.

நான் பிறந்த சிறிய க்ராமத்தின் கோயிலை முதலில் புதுப்பிக்க வேண்டும். அந்த க்ராமத்தில் பள்ளிக்கூடம் நிலவவேண்டும். க்ராம மக்களின் கஷ்ட நிவாரணத்திற்காக நிதி உதவவேண்டும். நான் பிறந்த வீட்டையே பள்ளிக்கூடமாக்கி சகலரும் அதில் கட்டாயம் படித்து அறிவும் ஆற்றலும் வளர்ந்து வாழச்செய்ய வேண்டும்.

அந்த இடத்தில் ஒரு சுகாதாரவிடுதியும் ஆஸ்பத்ரியும் அமைத்துக் கொடுக்கவேண்டும். படிப்பு தெரியாத பெரியவர்களுக்கு வீட்டுக்கு வீடு நல்ல உபாத்தியாயர்களை அனுப்பி அவர்களுக்குப் படிப்பு கற்றுக்கொடுக்கச் செய்யவேண்டும். வயலில் வேலை செய்வதற்கான சகலசாமான்களும் வாங்கிக்கொடுத்து ஆங்காங்கே கிணறுகளும் வெட்டித்தரவேண்டும். கால்நடைகள் வாங்கித்தர வேண்டும். அவர்களுக்குள்ளேயே நியாயம் வழங்கிக்கொள்ள ஒரு பஞ்சாயத்துக் கூட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். பக்தியை வளர்க்கவும் சங்கீத ஞானம் செழிக்கவும் ஒரு பஜனை கோயிலைக் கட்டி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். வீணான புறம்போக்கு நிலங்களாயிருப்பவற்றைக்ராமத்துக்குடியானவர்களுக்குக் கொடுத்துப் பயிரிட்டுக்கொள்ள இதர உதவிகளை அளிக்கவேண்டும். காடுகளை அழித்து க்ராமத்துடன் சேர்த்து க்ராமத்தைப் பெரிதாக்கி மின்ஸாரம், ரயில், மெஷின்கள் முதலிய வசதிகளைச்செய்துகொடுக்க வேண்டும். போலீஸ் பயிற்சி சாரணர் பயிற்சி முதலியன அளிக்கும் மன்றங்களை ஸ்தாபனம் செய்யவேண்டும்.” என்று ஏதோ மந்திரத்தினால் ஏவிவிட்ட ஆவேசப்பதுமை பேசுவதுபோல் பொறுக்குமணிகளாயும், கேட்போர் ப்ரமித்து வியப்புறும்படியும் வீரலக்ஷ்மி பேசுவதைக் கேட்டு திவான் அப்படியே தம்பித்துப் போய் வியப்புக் கடலாடி மெய்மறந்துபோனார்.

“என்ன ஆச்சரியம்! என்ன அறிவு! அடாடா! கஜராஜனின் திறமை இப்போதல்லவா தெரிகிறது. எத்தகைய மாணிக்கத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறான்; ஒரு சின்னஞ்சிறுமி பேசுவதுபோலவா இருக்கிறது? பெரிய மகாராணியே உத்திரவிடுவதுபோலல்லவா இருக்கிறது! அத்தகைய தூரத்மாவாகிய பொறுமைக்காரியின் வயிற்றில் இத்தகைய விலைபிலா மாணிக்கம் பிறந்திருப்பதானது கடவுளின் விசித்ரலீலையைத்தான் காட்டுகிறது. இந்த அற்புத சக்தி

வாய்ந்த குழந்தைக்கு எத்தகைய கண் த்ருஷ்டியும் ஓம்மலும் வரா திருக்கவேண்டும். கடவுள் பரிபூர்ண கடாக்ஷம் செய்து காப் பாற்றவேண்டும்" என்று தனக்குள் வியப்புடன்வேண்டினர்.

கிழவியும் திவானைவிட அதிகமான ஆச்சரியமடைந்து வீர லக்ஷ்மியைச் சேர்த்துக் கட்டி முத்தமிட்டு த்ருஷ்டி கழித்து "செல் வச் சிமாட்டி! என்னாரவமுதே! உன் இதயத்தில் என்றென்றும் இதே கருணைப்ரவாகம் வற்றாது ஊற்று சுரந்து பொங்கிவழிய வேண்டும். உன்னிதயம் பரிசுத்தமான தேவாலயமாகவும் சத்யத் திற்கும் உத்தம லக்ஷணத்திற்கும் இருப்பிடமாகவும் இருக்க வேண்டும். 'நீயே உன் ப்ரஜைகளின் தேவி. நீயே உன் நாட்டின் தேவதை. நீயே வீராங்கனை. நீயே உத்தமமான மாதர்களின் திலகம்' என்று உலகம் உன்னைப் போற்றவேண்டும். கருணைக்குத் தாய இடம் அளிக்கும் உன்னிதயத்தில் சமயாசமயம் நேரும் போது த்யாகத்திற்கும் சிறந்த பொற்பீடத்தை அமைத்து வைத் துக்கொள். தெய்வப் பெண்ணான கண்ணகி என்ன, காரைக் காலம்மை என்ன, வாசுகிதேவி என்ன, சபரி என்ன இவர்களின் பெயருடன் உன்பெயரும் அழியாதசிலாசாஸனமாகத் திகழவேண் டும். விரோதத்தை வேருடன் அறுத்தெறிந்துவிடு. பகைமையே மக்களின் வாழ்வைப் பாழாக்கும் வேர்ப் புழுவாகும். பகைமைக்கு இடந்தராதே. கருணையை, சாந்தியை, சமரஸ ஞானத்தை, தரு மத்தை, சத்தியத்தைக் கைநழுவ விடாதே....தேவி!...வீரலக்ஷ்மீ!... நான் போய்வருகிறேன். என்னையனுப்பிவிடு. இனி நான் அதிக நாள் இருக்கமாட்டேன்" என்று திணறித் திணறிக் கூறினள்.

தகுந்த பந்தோபஸ்துடன் கிழவி உடனே ப்ரயாணமாகி விட்டாள். தன் தாயாரைப் பெற்ற மகள்போல் பாவித்த கிழவியை அவள்வந்து பார்க்காதது இச் சிறுமிக்கு மிகவும் விசனமாகவே தோன்றியது. தன் ஸ்னேகிதர்களை யார் இவ்வாறு சின்னபின்னம் செய்து சிதரவடித்திருப்பார்கள் என்ற விஷயம் பெரும்புயல் போல் அவள் உள்ளத்தை உருக்கியது.

## 14

இன்று மந்திரியின் பிறந்ததினம். ஊரே குதூகலத்திலாழ்ந் திருக்கிறது. இந்த அரசவம்சத்து சந்ததியில் சேர்ந்த ஒருவரே மந்திரியாக உத்யோகம் பார்ப்பதுதான் இந்த அரசாங்கத்தின் சட்டம். அதேபோல் மந்திரி ப்ரபாகர் சில்வருஷங்களாக இந்த உத்யோகத்தை வகித்து வருகிறார். அவருடைய பிறந்தநாள் மந்திரியின் அரண்மனையிலேயே நடப்பது வழக்கம். பலர் அவ ருக்குத் தமது சக்தியானுஸாரம் காணிக்கைகள் சமர்ப்பித்து நமஸ் கரிப்ப, அரசாங்கத்திலிருந்தும் மரியாதைகள் செலுத்தப்படும்...

மகாராணியே நேராகச்சென்று மந்திரிக்கு வாழ்த்துக்கள் கூறிவருவதற்காக திவான் ஏற்பாடு செய்திருந்தபடி அவளைப் பல்லக்கில் அழைத்துச்சென்றார். வீரலக்ஷ்மி வெகு உத்ஸாகத்

துடன் அரசாங்க மாலையை மந்திரியின் கழுத்தில் அணிவித்துத் தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் முறையில் சிரித்தாள்.

மகாராணிக்குரிய மரியாதையை மந்திரி செலுத்தி ஆசனமளித்து உபசரித்துக் குசலப்ரசனம் செய்தார். பிறகு ஆடல் பாடல்கள் நடந்தன. மகாராணியும் திவானும் அரண்மனைக்குச் சென்றுவிட்டார்கள். ஆடல் பாடல்கள் முடிந்தபிறகு மந்திரி தனித்து உட்கார்ந்திருக்கையில் ஒரு தூதன்வந்து "பிரபோ! மகாராணியின் தாயார் தங்களுக்கு வாழ்த்துக்கூற வந்திருக்கிறார்கள்" என்றான். உடனே உள்ளே வரும்படி அனுமதி கொடுத்தார்.

கையில் பரிசுத்தட்டுடன் வள்ளியம்மாள் மந்திரி பிரபாகரின் முன்பு வணங்கி மரியாதைசெய்து தான் கொண்டுவந்திருந்த பரிசுகளை வழங்கி, "இப்படியே பல்லாண்டுபல்லாண்டாகப் பிறந்த நாட்கள் நடந்து சஷ்டிபூர்த்தி, சதாபிஷேகம் முதலியன நடந்து கஜேந்திரபுரியின் திலகமாக வாழவேண்டும்" என்று வாழ்த்தினாள்.

பிரபாகர்:—அம்மணி! ஒரு சாம்ராஜ்யத்தின் மகாராணியையே பெற்றெடுத்துள்ள பரம பாக்யசாலியான தங்கள் ஆசீர்வாதம் பலிக்கவேண்டும். சகலமும் ஆண்டவனின் செயல்.

வள்ளி:—பிரபோ! சாதாரணமாக, உலகத்தில் பரமபாக்யசாலிகள் என்று ஒரு குறிப்பிட்ட நபர்களைக்கூறுவது முறைமையான வழக்கம். உயர்ந்த மக்களைப்பெற்றவர்கள், உத்தம பத்தினியை மனைவியாக அடைந்தவர்கள். அதேபோல் உத்தம புருஷனைக் கணவனாக அடைந்தவர்கள், வீரலக்ஷ்மியைப்போல் அதிர்ஷ்டம் பெற்றவர்கள், சத்குண சம்பன்னையான பெண்களை மருமகளாக அடையப்பெற்றவர்கள், அவ்வாறே மருமகனாக அடையப் பெற்றவர்கள், தபோதனர்கள், தர்மப் பிரபுக்கள்... இப்படியாக பலரகப்பட்டவர்கள்உண்டு அல்லவா! அம்முறையில் எனக்கு இரட்டிப்பான பாக்யம் வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். என்னைப்போல் தாங்களும் சிறந்த பாக்யசாலியாக ஆகவேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை... ...

பிர:—தாயே! தாங்கள் கூறுவது ஒன்றுமே விளங்கவில்லையே! ஏதோ பூடகமாயிருக்கிறதே. விவரமாகச் சொல்லுங்கள்.

வள்ளி:—பூடகம் ஒன்றுமேயில்லையே! இன்று மகாராணியாக விளங்கும் என் கண்மணியை வருங்காலத்தில் உங்களுடைய மருமகளாகச் செய்து நாம் இருவரும் சம்மந்திகளாகிவிடவேண்டும் என்பதே எனது பேராவல். தங்கள் குமாரன் முரளீகண்ணனின் அழகும் சவுரியமும் என்னை இந்தத் தீர்மானத்திற்குக் கொண்டுவந்துவிட்டன. அம்மாதிரி நாம் ஏற்பாடுசெய்து கொண்டு இந்த சாம்ராஜ்யத்தின் க்ஷேமத்தையும் நாம் காப்பாற்றவேண்டும். மகாராணியோ குழந்தை; திவானோ பெரும்மோசக்காரராக இருந்து கஜானாவைக் காலிசெய்யும் முறையில் குழந்தையின் தலையில் மகுடத்திற்குப் பதிலாகக் கப்பரையைத்தான் கவிழ்க்கப்போகிறார்! இது எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

ப்ர:—(திகைப்புடன்)...தாயே! இதென்ன அதிர்ச்சியான விஷயம். எனக்கொன்றுமே தெரியாதே. விளங்கச் சொல்லுங்கள்.

வள்ளி:—ப்ரபோ! குழந்தையின் மனத்தை நன்றாகக் கலக்கிக் குழப்பிவிட்டார். இப்போது ஆறு மாதகாலத்திற்குள் எத்தனை லக்ஷம் ரூபாய் செலவாகியிருக்கிறது என்பது உங்களுக்கு விபரம் தெரியாதா! ஏதோ! ஒரு பாக்யத்தினால் அவள் ஒரு மகா ராணியாய்ப் பிறந்தாள். அதற்காக அவள் பிறந்த அந்த அத்வானப் பட்டிக்காட்டைப் பெரிய நகரம்போலாக்கிவிடத் திட்டம் போட்டு வெகு மும்முரமாக நடத்திவருகிறார்கள். ஒரு பட்டிக் காட்டைப் பெரிய நகரமாக்குவதென்றால் சாமான்ய காரியமா? தாங்களே சொல்லுங்கள். இந்த சாம்ராஜ்யத்திற்குத் தாங்கள் தானே பொறுப்பாளி. மந்திரி என்கிற ஒரு ஹோதாவுடன் மட்டும் நிற்காமல் வீரலக்ஷ்மியே உங்கள் மருமகளாக ஆய்விட்டால் இந்த சாம்ராஜ்யம் பூராவும் தங்களுடையதாகிவிடுமல்லவா! இதை நான் தங்களிடம் வெகு நாட்களுக்குமுன்பே தெரிவிக்கத் துடி துடித்தேன். ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சகலமும் அமளிதுமளியாவதற்கு முன்பே நாம் கண்திறந்து எச்சரிக்கா விட்டால் காரியம் கெட்டுத்தான் போய்விடும். இன்னொன்று பாருங்கள். பெற்ற தாயாரிடங்கூட குழந்தையை சுயேச்சையாக விடுவதில்லை. சதா அவளுடன்கூடவே இருந்து மனத்தைக் கலக்கும் வயிற்றெரிச்சல் என்னால் பொறுக்கவே முடியவில்லை. இந்த திவான் காரியமிருக்கும்போது குழந்தையிடம் வந்தால் போதாதா?

இந்த வார்த்தைகளைக் கேட்ட ப்ரபாகரின் வியப்பு எல்லை மீறியது. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்ற பழமொழி மட்டும் வீணாகிவிடுமா! இத்தனை பெரிய சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தினியே தன் மகனுக்கு மகிஷியாக வந்துவிடுவதென்றால் அதைவிடப் பெருமையும் ஆச்சரியமான அதிர்ஷ்டமும் வேறு ஏதாவது உண்டா? ஆசை என்கிற பிசாசுபிடித்து ஆட்டாதவர்கள் கூட உலகில் உண்டா! எத்தகைய செல்வவந்தராக இருப்பினும், எத்தகைய மேம்பாடுடன் கூடிய பதவிலிருப்பவர்களாயினும் பணத்தாசைக்கு அடிமையாகாதவர்கள் கோடிக்கொருவர் கிடைப்பதுகூட துர்லபமல்லவா! அம்மாதிரி ஒருவர் எங்காவது தப்பித் தவறி இருப்பதனால்தான் உலகத்தில் க்ஷேமமும் தர்மமும் சிறிதளவாவது சாகாமல் உயிருடன் இருக்கிறது எனலாம்.

லக்ஷாதிபதிக்கு கோடி ஐச்வர்யவானாக வேணுமே என்று ஆசை. கோடிஐச்வர்யக்காரனுக்குத் தானே ஏகசக்ராதிபதியாகி விடவேண்டும் என்ற ஆசை. அதற்காக அவன் அசுரப்ரயத்தனங்களையும் செய்யத்தியங்குவதில்லை. சக்ரவர்த்தியாகிவிட்டபிறகோ ஒரு தேசம் போதாது. பலதேசங்களைப் பிடித்து மகத்தான வெற்றியை அடைந்து ஒரு குடையின்கீழ் பல நாடுகளையாளவேண்டும் என்ற ஆசை. அதனால் வினையும் கேடுகளோ விபரீதங்களோ எழுத்திலடங்காது. கடைசியில் வெற்றியோ தோல்வியோ விதி

விட்ட வழியாகிறது. இதைத்தான் உலகத்தில் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம்.

பதவிக்கு வரும்முன்பு சரியான முறையுடன் மனுஷ்யத் தன்மையுடன் நடக்கும் சிலர்கூட பதவியும் பட்டமும் வந்தபிறகு அடியோடு புதிய மாதிரியில் திரும்பிப் பணம் திரட்டுவதிலேயே கண்ணும்கருத்துமாகிப் பழயநினைவையேமறக்கும் ப்ரமுகர்களையும் காலதேவதை கண்ணாடிபோல் காட்டிக்கொண்டுதான்வருகிறது.

மந்திரி ப்ரபாகர் ஏற்கெனவே பணத்தாசையில் மெய்மறந்தவர். அவருடைய ஆசைத் தீயை ஜ்வாலைவிட்டு எரியும்படியான மார்க்கத்தையுங் காட்டி மகாராணியின் தாயாரே பேசும்போது மனது மாறாது என்னசெய்யும்! இந்த நாட்டின் அதிபதி தானேயல்லவா! இனி இந்த நாட்டின் பழய மூடவழக்கத்தை அடியோடு ஒழித்து, மற்ற இதர தேசத்து பழக்கவழக்கப்படி வம்சபரம்பரையாகவே ராஜ்யபாரம் செய்யும்படியான புதியதிட்டத்தை வகுத்துவிட்டால் ப்ரபாகரனின் பெயர் என்றென்றும் அழியாத புகழுடன் ஆகாயத்தையளாவிநிற்குமல்லவா! மகாராணியின் தாயாரே நமக்கு வழிசொல்லிக்கொடுக்கும்போது நாம் ஏன் பின்னடைய வேண்டும்! மகாராணியின் சிறிய வயதிலேயே விவாகத்தை முடித்துவிட்டால் பிறகு யார் என்ன செய்யமுடியும்?...

என்று வெகு ஆழமாக யோசனை செய்தபடியே பதில் பேசாதிருக்கையில், வள்ளியம்மாள் அவரையே உற்றுக் கவனித்தவாறு மவுனம் சாதித்தாள். பிறகு தானே



பேசத்தொடங்கி "ப்ரபோ! நான் ஏதாவது தப்பிதமாகச் சொல்லி விட்டேனு! தங்களைப் பார்த்தால் மனது வருந்துவதாகத் தெரி கிறதே...நான் ஒரு குழந்தையைப் பெறுவதற்குச் செய்த தவம் ஆண்டவனுக்குத்தான் தெரியும். அத்தனை தவம்செய்து பெற்ற குழந்தையின் க்ஷேமத்தைக் கோரும் தாயாகிய என்னைவிட வழி யோடு போகும் திவானுக்குத்தானு அக்கரையும் அன்பும் தோன் றும்? அதனுல்தான் என்மனது கொதித்து இதைச் சொல்லு கிறேன். இதற்குத் தாங்கள்தான் வழிசெய்யவேண்டும்" என்ருள்.

ப்ர:—அம்மணீ! எனக்குள்ள வியப்புக்கும் சந்தோஷத்திற்கும் எப்படித்தான் பதில் பேசுவது என்றே தெரியவில்லை. அந்த திவானை நான் வெகுவாய் நம்பி, பொறுப்பு பூராவையும் ஒப்புவித்து விட்டது மகா பிசகு என்று இப்போதுதான் தெரிகிறது. நான் இனி கண்ணைக் கொட்டாமல் இந்த அரசாங்கத்துச் சகலமான பொறுப்புகளையும் கவனித்து திவானுக்கு சீட்டுக் கிழித்துவிடவும் செய்கிறேன். தாங்கள் சொல்லியதுபோல் நாம் சம்மந்திகளாகி இந்த கஜேந்திரபுரியின் சட்டதிட்டங்கள்முதல் சகலத்தையும் மாற்றியமைத்து பெரும் சீர்திருத்தங்களுடன் புனருத்தாரண மாகும்படிச் செய்துவிடுகிறேன். தாங்கள் அடிக்கடி என்னை தாராளமாகச் சந்தித்து அப்போதைக்கப்போது விஷயத்தைக் கலந்து பேசி முடிவுசெய்ய ஏற்பாடுசெய்கிறேன். தாங்கள் இவ் வளவு தூரம் இங்கு வந்து இத்தகைய முக்யமான விஷயங்களைப் பற்றி இவ்வளவு அன்புடன் அந்தரங்கமாகத் தெரிவித்ததற்கு எப்படித்தான் ப்ரதிவந்தனமளிப்பதென்றே தெரியவில்லை சகல மும் இனி உங்கள் பொறுப்பு என்ற முறையில் என் மாற்றி விடுகிறேன்—என்ருர்.

வள்ளி:—ப்ரபோ! என்னுடைய வார்த்தைகளுக்கு இத்தனை மதிப்புவைத்துப் பேசியதற்கு மிகமிக வந்தனம். மகாராணி யான என் குழந்தை அந்தப் பட்டிக்காட்டுக்குப் போய் அந்த மக் களிடம் பல்லிளித்துப் பேசுவதும் சாதாரண மனிதர்களிடம் பழகு வதும் எனக்குச் சற்றும் பிடிக்கவே இல்லை. இனி அம்மாதிரி அவள் பழகாத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். நான் வரட்டுமா? எனக்கு உத்திரவா?"...என்று எழுந்து ப்ரபாகரைப் பார்த்தாள். பிறகு உத்திரவு பெற்றுக்கொண்டு கிளம்பினுள்.

தான் ஏதோ ஒரு பெரிய கோட்டையைப் பிடித்துவிட் டதுபோன்ற சந்தோஷத்துடன் பூரித்தவாறு வள்ளி தன்னிருப் பிடம் வந்துசேர்ந்தாள். அவள் இதயத்தில் அபாரமான சந்தோஷ மும் தனித்த ஒரு உணர்ச்சியுமே தாண்டவமாடியது.

## 15

அரசம்பட்டி க்ராமத்திற்கு உண்டாகிய யோகத்தைப் பற்றிப் போற்றுதவர்கள் இல்லை. அவ்வூரில் இருக்கும் சாதாரண கூலி யாட்கள்கூட கட்டாயக் கல்வி கற்றுக் கருக்காகக் கணக்குடன்

கூலிவாங்கக்கற்றுவிட்டார்களென்றால் மற்றவர்களைப்பற்றிக்கேட்க வேண்டுமா! அன்று வள்ளியையும் வேலனையும் தூற்றிய விரோதிகளே அவர்களுடைய வாயினாலேயே வாழ்த்தவாரம்பித்தனர். வீரலக்ஷ்மியின் படம் வீட்டுக்கு வீடு அலங்காரமாய் ப்ரகாசிக்கத் தொடங்கியது.

அன்று வள்ளியினால் அடித்துத்தூக்கிப்பழியுடன் விலக்கிய சிறுமிகளும் சிறுவர்களும் இன்று நாகரீகமாய் நல்ல சுத்தமான உடையணிந்து பள்ளிக்கூடம் போகவும், பஜனை கோவிலில் பஜனை செய்யவும், நல்ல உத்க்ருஷ்டமான விஷயங்களைக் கேட்கவும், அதைப்பற்றி அறிந்து ஆனந்திக்கவும் சக்தி பெற்றுவிட்டார்கள்.

தான் இத்தனை அறியாத சிறுமியாயிருந்தும் தனது ஆசைகள் நிறைவேறிவிட்டதையும் அதனால் தன் சிநேகிதர்களும் க்ராமத்து மக்களும் அபாரமான சந்தோஷத்தையடைந்து பயனுற்றதையும் எண்ணி எண்ணி வீரலக்ஷ்மி கட்டுமீறிய களிப்பெய்தி திவானிடம் இன்னும் அளப்பரிய அன்பும் விச்வாஸமும் நம்பிக்கையும் அடைந்தாள்.

தன்மீது உயிரையே வைத்திருந்த கிழவி இறந்ததும், அவளுடைய குடும்பத்திற்கு ஏராளமாக தனத்தை உதவியதோடு கிழவியின் ஞாபகார்த்தமாய் அவளுடைய பெயரால் அறிவு வளர்ச்சிக்கான ஒரு வாசகசாலையையும் அங்கு ஏற்படுத்தினாள். மந்திரியின் பிறந்தநாள் வைபவத்திற்கு திவானுடன் வீரலக்ஷ்மியும் போய் வந்த பிறகு வள்ளியம்மாள் சென்ற விஷயமே திவானுக்கும் தெரியாது; வீரலக்ஷ்மிக்கும் தெரியாது.

மந்திரியின் பிறந்தநாளுக்கு மறுநாள், வழக்கம்போல் வீரலக்ஷ்மி உத்யானவனத்தில் உல்லாஸமாக விளையாடிவிட்டு ஒரு பளிங்கு ஆசனத்தில் வீற்றிருந்தாள். பக்கத்தில் திவான் மிகவும் ரஸமான ஒரு கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார். வீரலக்ஷ்மி அதை வெகு ஸ்வாரஸ்யமாய்க் கேட்டுக்கொண்டிருந்தாள். இடையில்..."ஏன் திவான் சாஹேப்! அந்த அரசகுமாரன் மட்டும் ஏன் இத்தனை போக்கிரியாக இருக்கிறான்? அந்த அரசாங்கத்தில் உங்களைப்போன்ற நல்ல திவான் யாரும் இருக்கமாட்டார்களா? அவர்கள் அந்த முரடனைத் திருத்தியிருக்கக்கூடாதா?" என்று கதைகேட்டவாறு கதையிலேயே ஒரு கேள்வியைக் கேட்டாள்.

இம்மாதிரி புத்திசாலித்தனமாய் நடுநடுவே கேள்விகள் கேட்பதைக்கண்டு சந்தோஷப்பட்ட திவான், வீரலக்ஷ்மியை முதுகில் தட்டிக்கொடுத்து, "மகாராணி! உங்களுடைய மேதை நிறைந்த புத்திசாலித்தனத்தைக்கண்டு மெச்சுகிறேன். அடங்காப்பிடாரியான மூர்க்கனை எத்தகையவராலும்திருத்தமுடியாதுபோய்விட்டது.பிறகு துணிந்து அந்த ராஜகுமாரனுக்கும் ஒரு வீர ரமணியை மணம் செய்வித்தார்கள்.

வீர:—அடாடா! அந்த முரடனையுமா ஒரு பெண் மணந்தாள்? அவளை அவன் இம்ஸித்து அடித்து உபத்திரவப்படுத்தாதிருந்தானா?

திவா:—கேளுங்கள் சொல்லுகிறேன். அந்த வீரமணி மகா கெட்டிக்காரி. தர்க்காதேவி என்பது அவள்பெயர். அவள் விவாகம் செய்துகொண்டபிறகு தனது புத்திசாலித்தனத்தினுல் அந்த முரடனை வெகு உத்தமனுயும் அவனைப்போல் சிறந்த வீரவாலிபன் இல்லை என்று அந்த ஊரே கொண்டாடும்படியும் செய்துவிட்டாள். அந்த தர்க்காதேவியின் புகழ்தான் சரித்திரப்ரஸித்தமாக இன்னமும் உலாவுகிறது. தாங்களும் உலகமே ப்ரமிக்கும்படியான வீராங்கனையாகத்தான் இருக்கப்போகிறீர்கள்...

வீர:—எனக்குக்கூட அத்தகைய முரட்டுக் கணவன்தான் வருவான் என்று சொல்கிறீர்களா?...என்று கேட்கும்போது ஒரு நாளும் இல்லாமல் திருநாளைப்போல் ப்ரபாகர் அங்குவந்து நிற்பதைக்கண்டு திவான் திடுக்கிட்டு எழுந்துநின்று வணக்கம்செய்தார்.

வீர:—ஏது! தங்கள் வருகை அபூர்வமாயிருக்கிறதே...இப்படி உட்காருங்கள்.

ப்ரபாகர்:—திவான் சாஹேப்! இதென்ன கதை சொல்லலாட்டம்? தங்களுக்கு இந்த சமஸ்தானத்தில் இதுதான் உத்யோகமா! சதா சர்வகாலமும் மகாராணியிடமே குடியிருக்கிறுப்போலிருக்கிறது. ராஜாங்கம் நன்ருக நடந்துவிடும். முரட்டுக் கணவனும் திருட்டுக் கணவனும் இதென்ன கதை? இத்தகைய ஆபாசக் கதைகளைச் சொல்லிக் குழந்தையின் தளிர்போன்ற உள்ளத்தில் கறைபடியச்செய்வதுதான் திவானின் தொழிலா! இனி இம்மாதிரி உதவாக்கரைக் கதைகளை உபதேசம்செய்து பயங்கர விதையை மகாராணியின் இதயத்தில் விதைக்கவேண்டாம். மகா பண்டிதரும் சரித்திர ஆராய்ச்சிசெய்து வெற்றிபெற்றுள்ளவருமான பண்டிதரை இன்று நியமித்தாயிற்று. தங்களுக்கு இனி இந்த கவலைவேண்டாம். அவச்யமான காரியமிருந்தாலன்றி இந்த அந்தப்புரத்தில் வேலை இல்லை— என்று சற்று கடுகடுத்த பார்வையுடன் கரகரத்த குரலில் கூறினுர்.

இதைக்கேட்ட திவானுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "இதென்ன வெடிகுண்டு போன்ற வார்த்தை! ஒன்றுமே புரியவில்லையே" என்று தனக்குள் எண்ணி ஒரு க்ஷணம் தம்பித்துநின்ருர். இதற்குள் வீரலக்ஷ்மி சடக்கென்று மந்திரியைப் பார்த்து "மந்திரி! இதென்ன வார்த்தை? திவான் சாஹேப் எனக்கு வெகுவெகு அத்புதமான கதைகளைத்தானே சொல்கிறுர். அவரை ஏன் கோபிக்கிறீர்கள்? முரட்டுக்கணவனை ஒரு பெண்மணி திருத்தி உத்தமனுக்குகிறுள் என்ருல் அது தப்பிதமான கதையா? கதை மிகவும் ஸ்வாரஸ்யமாக இருந்தது. அதைத் தடைசெய்யவேண்டாம். திவான் சாஹேப்! அதை மேலும் சொல்லுங்கள்" என்று சற்று அதிகாரத்வனியிலேயே சொன்னுள்.

ப்ரபாகர்:—(மிகவும் அன்பும் நிதானமும் கலந்த த்வனியில்) "மகாராணி! திவான் சாஹேபுவுக்கு அரசாங்கத்துக் காரியம் இன்னும் ஏராளமாக இருக்கிறது பாருங்கள். அவைகளை அவர் முக்ய

மாகக் கவனிக்கவேண்டுமேயன்றி சாதாரண ஒரு பண்டிதனைப் போல் கதை சொல்வது அவருடைய கவுரவத்திற்கு ஏற்றதல்ல. ஆகையால் அவரைவிட இன்னும் அழகாய் கதை சொல்லக் கூடியவரை இன்றே ஏற்பாடுசெய்திருக்கிறேன்." என்று சொல்லியபடியே திவானைப் போய்விடும்படி ஜாடைசெய்தார். திவான் அக்குறிப்பறிந்து மெல்ல நழுவிவிட்டார்.

அவர் செல்வதைப் பார்த்த மகாராணி சற்று அதிர்ச்சியடைந்து......"திவான் சாஹேப்! திவான் சாஹேப்! இப்படி வாருங்கள்; போகவேண்டாம். எனக்கு நீங்கள்தான் கதை சொல்ல வேண்டும். மற்றவர்கள் சொன்னால் பிடிக்காது; வாருங்கள்." என்று கூப்பிட்டபடியே பின்னால் இரண்டடி நகர்ந்தாள்.

இதற்குள் மிக்க மகிழ்ச்சியே உருக்கொண்ட வதனத்துடன் வள்ளிவந்து வீரலக்ஷ்மியைத் தடுத்து "கண்ணு! உனக்கு மனிதர்களின் தாரதம் தெரியவில்லையே! திவானைவிட உயர்ந்த மனிதரான மந்திரியே உன்னை நேரில் கவனித்து உன்னுடைய க்ஷேமத்தைக் கோரி பாடுபட வந்திருக்கையில் உனக்கென்ன குறைவு கண்ணு! உன்னுடைய அந்தஸ்தென்ன? நீ ஒரு திவான் பின்னேடு ஓடுவதென்ன? அப்படி ஓடினல் சிரிப்பார்களம்மா!" என்று கூறியவாறு மகளை இழுத்து அணைத்துக்கொண்டு மந்திரிக்கு மிகுந்த நன்றியும் வந்தனமும் தெரிவிப்பதுபோல் பார்த்தாள்.

உடனே மந்திரி வீரலக்ஷ்மியைத்தூக்கி மடியிலமர்த்திக் கொண்டு "மகாராணி! கோபிக்காதீர்கள். இப்போது வரப்போகும் பண்டிதருடைய கதையைக் கேட்டபிறகு நீங்களே சொல்லப் போகிறீர்கள். திவானுடைய கதையைவிட பண்டிதரின் கதை ப்ரமாதமாயிருக்கிறது என்று ரஸிப்பீர்கள். உங்களுக்காக நமது சமஸ்தானத்தில் சில சிறந்த வித்வான்களைக்கொண்டு ஒரு நாடகக் கம்பெனி தயார்செய்து நல்ல நாடகங்களை நடித்துக்காட்டி இன்புறச் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன். அதனல் உங்களுக்கு எத்தனையோ நன்மைகள் உண்டாகுமென்றும், சந்தோஷமாயிருக்கும் என்றும் நம்புகிறேன்...நான் வருகிறேன்" என்ருர்.

உடனே மகாராணி இடைமறித்து "மந்திரியாரே! புண்டரீக புத்து சரித்திரக்கதையில் நாடகத்தினலேயே அந்தராஜாங்கமே பாழாகிவிட்டதாக திவான் கதை சொல்லியிருக்கிருரே! அப்படிக்கிருக்க நமது அரசாங்கத்தில் நாடகம் எதற்கு?"...என்று வெடுக்கென்று கேட்டாள்.

உண்மையில் இந்த கேள்வி மந்திரியைத் தூக்கிவாரிப்போட்டது. திவானிடம் நேற்றுவரையில் நன்மதிப்பும் நம்பிக்கையுமே வைத்திருந்ததால், அந்த எண்ணத்துடன்கூடிய மனத்துடன் இச்சொல்லைக் கேட்டதும் திவானின் திறமையையும் அவள் இளந்தளிர் போன்ற சின்னஞ்சிறு உள்ளத்தில் நீதிகளை எப்படித்தான் புகுத்தி பசுமரத்தாணிபோல் பதியச்செய்திருக்கிருர் என்பதும் ஒரு க்ஷணத்தில் நன்ருகத்தெரிந்தது.

மந்திரி உடனே பதில் சொல்லாது திகைப்புடனிருப்பதைக் கண்ட வள்ளியம்மாள், "ப்ரபோ! இல்லாத பொல்லாத கட்டுக் கதைகளை எல்லாம் சொல்லி குழந்தையின் மனத்தையே சிதற வடித்து உத்ஸாகத்தைக் குறைத்துவிட்டார் பார்த்தீர்களா! சமஸ் தானத்தில் நாடகங்களின்மூலம் நல்ல பயனை அடைந்த உயர்ந்த சரித்திரங்கள் எத்தனை இருக்கின்றன. அவைகளை ஏன் சொல்லக் கூடாது. இதிலிருந்தே திவானின் மனோபாவம் நன்றாகத் தெரிய வில்லையா? குழந்தைக்கு சந்தோஷமும் ஒரு குதூகலமும் உண் டாகவிடாமல் நாசமாய்ப்போன கதைகள், நலிந்துபோன கதைகள், பயங்கரக் கதைகள் முதலியவற்றையே சொல்லியிருக்கிறார்....

என்று முடிப்பதற்குள் மறுபடியும் வீரலட்ச்மி சற்று பட படத்த முகத்துடன் "என்னம்மா! திடீரென்று திவான்மீது இத் தகைய கோபத்துடன் குறைசொல்கிறாய்?" என்று கேட்பதைச் சற்றும் லட்ச்யம் செய்யாமல், பேசாமல் மந்திரியுடன் போய் அடுத்த க்ஷணமே ஒரு புதிய தாதி நடுத்தர வயதுடையவளை வள்ளி யம்மாள் அழைத்துவந்து "மஞ்சுளா! மகாராணியின் விருப்பப்படி அவள் மனங்கோணாது நீ சகல விஷயத்திலும் நடந்துகொள்ள வேண்டும், அடிக்கடி நான் இங்கு வருவேன். இல்லையேல் ஏதாவது கேட்கவேண்டுமாயின் என்னிடம் நீ தாராளமாக வரலாம் என்ன! நான் சொல்லியது புரிந்ததா? கண்ணு வீரலட்ச்மீ! இந்தத் தாதி மிகமிகக் கெட்டிக்காரி; வெகு இனிமையாகப் பாடு வாள். நாட்டியமும் ஆடுவாள். பல பாஷைகள் நன்றாகப் படிப் பாள்; பேசுவாள். உனக்குச் சரியானபடி பொழுதுபோக்கு உண்டாக்குவாள். தெரிந்ததா? நீ உன்னிஷ்டபடி அவளிடம் விளையாடலாம்" என்று படபடவென்று கூறுவதைக்கேட்ட வீரலட்ச்மி வியப்புடன் முகவாய்க்கட்டையில் கையைவைத்துக் கொண்டு "எம்மா! அப்படியானால் இனி திவான் இங்கு வரவே மாட்டாரோ?" என்று வெடுக்கெனக் கேட்டாள்.

வள்ளி:—அசட்டுப் பிசட்டென்று கேள்விகள் கேட்காதே. திவான் அரசாங்க நிர்வாகத்தைச் கவனித்து அதற்கானபடி வேலை செய்வாரேயன்றி அனாவசியமாய் இங்கு இருப்பது மிகவும் இழி வல்லவா? அவர் எப்போதாவது வேலையிருந்தால் வருவார். பேசாமல் சமத்தாயிரு. கண்ட தரித்திரங்களுடனும் இனி சகவாசம் செய்யாதே. உன் அரசம்பட்டி நினைவை அறவே ஒழித்துவிடு....

வீர:—(இடைமறித்து) என்ன! என்ன! அரசம்பட்டி நினைவை அறவே ஒழிப்பதா! பேஷ்! தான் பிறந்த நன்னாட்டைப் பொன்னாடாக எண்ணி அதைப் போற்றிப் பணிவது மக்களின் கடமையேயன்றி அதை மறப்பது மகா பாபமல்லவா? எம்மா திடீரென்று உன்போக்கு இப்படி மாறிவிட்டது? நான் ஒரு நாளும் அரசம்பட்டியை மறக்கவேமாட்டேன். அனேகமாய் நான் பிறந்த அந்த சிறிய வீடு பெரிய பள்ளிக்கூடமாகக் கட்டிமுடிந் திருக்கும். திவானும் நானும் போய் அதைத் திறந்துவைத்து விழாக்

கொண்டாடி மகிழப்போகிறேம். அந்தசமயம் பேசுவதற்குக்கூட திவான் எனக்குப் பழக்கிக்கொடுத்திருக்கிறர். இதோ சொல்கிறேன் கேள்...

"மகாஜனங்களே! என் தாய்நாட்டு அன்பர்களே! ஒவ்வொரு மனிதருக்கும் கடமைகளும், பொறுப்புகளும் பலபல விதத்தில் இருக்கின்றன. அவைகளில் முக்யமானது வாழ்க்கையில் சத்தியமும் தூய்மையும் அத்யாவச்யம். அதற்குச் சாதனம், பக்தி. அதை வளர்ப்பது கல்வி. கல்விக்கு ஆலயம் பள்ளிக்கூடம். ஞானக்கண்களைத் திறந்துவைத்து அறிவும் ஆற்றலும் சிறந்த முறையில் ஓங்கி வளரச்செய்வதற்கு முதல் கருவி உபாத்தியாயர்கள். பள்ளிக்கூடம் தேவாலயமாகும்; கல்விபோதிக்கும் ஆசாரியனே முதற் கடவுளாகும். அறிவு இல்லாத மனிதர்கள் அணுவுக்குச் சமானம். சகல அறிவிலும் கல்வியறிவே சிறந்தது. கல்வி அறிவு மக்களின் வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்திச் செல்லும் பெரிய தூண்டுகோல் போன்றது. சாதாரணமாக மனிதன் தேகபலத்தை மட்டும் தேடிக்கொண்டால் போதாது. அது எதற்கும் உபயோகமில்லை. அறிவு என்பதுகூட வேண்டும். சாதாரண அறிவு ராட்சஸ பலத்திற்கு ஒப்பானதாகிவிடும். சிறந்த கல்வியறிவும் ஆத்ம ரட்சணத்திற்கான விவேகத்துடன் கூடிய சுத்த அறிவும்தான் அதிமுக்யமானதாகும்...

அத்தகைய சிறந்த முறையை உலகத்திலுள்ள சகலமான மனிதர்களும் அடையவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நான் பிறந்த இந்தப் புனித க்ராமத்தில் நான் பிறந்த இடத்தைக் கலைக்கோயிலாக்கி, அறிவு தேவாலயத்தில் ஆத்ம பணிபுரியும் கூட்டத்தைப் பெருக்கி அதைக்கண்டு இன்புறுவதற்கே என்மனம் பேராவல்கொண்டது...

இதுவரையில் வள்ளி தன்னையும் மறந்து ஏதோ தடைகட்டிய நாகம்போல் நின்றுவிட்டதில், பெண்ணைத் தடுக்கவும் தோன்றுமல் தன்னையறியாது ஏற்பட்ட ஆச்சரியத்தை மறக்கவும் முடியாமல் மெய்மறந்தாள். சில நிமிஷங்கள் சென்றதும் வீரலட்ச்மியின் ஆவேசம் நிறைந்த மொழிகளால் சடக்கென்று விழிப்பு உண்டாகித் தன் சுயநினைவை அடைந்தாள். அப்போது வீரலட்ச்மி,

"என்னருமை சிநேகிதர்களே! என் தாய்நாட்டின் புண்ணியப் பெரியார்களே!...

என்கிற வாக்யங்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

வள்ளியம்மாள் ஒரு ஏளனச் சிரிப்புடனும் ஆவேசத்துடனும் ...."தாய்நாட்டின் புண்ணியப் பெரியார்களாம்.......புண்ணியப் பெரியார்கள்!...அசடே! உன்னுடைய நிலைமை என்ன! நீ அந்த அற்பப் பேய்களை இப்படிக் கொண்டாடக்கூடாது; பேசக்கூடாது. உன் கீழே அடங்கிக் கிடக்கும் லட்சக்கணக்கான உன் ப்ரஜைகளை விட்டுவிட்டு நீ ஏன் அந்தக் குக்ராமத்து மக்களிடம் பேசவேண்

டும்? சமத்தாயிரு. இந்த ப்ரஸங்கமெல்லாம் நீ பெரியவளாகிய பிறகு வைத்துக்கொள்ளலாம். இப்போது வேண்டாம்; சொல்வதைக் கேளு....மஞ்சுளா! நீதான் இந்தக் குழந்தையைச் செவிலித்தாயைப் போல கவனித்துக்கொள்ளவேண்டும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இன்றைய புதிய சம்பவங்களையும் பேச்சுக்களையும் பார்த்ததும் கேட்டதும், சிறுமியாகையால் அவளால்புரிந்துகொள்ளமுடியாத ஒரு குழப்பமும் ஆச்சரியமும் உண்டாகி அவளை ப்ரமிக்கச்செய்தது.

## 16

இங்கிருந்து சென்ற திவானுக்கு உண்மையில் மனது குழம்பி இதயம் பிளந்துவிடும்போலாகிவிட்டது. இந்தகைய திடீர்மாறுதலுக்குக் காரணம் வள்ளியம்மாள்தான் என்பது திவானுக்கு வெகு தெளிவாகப் புரிந்துவிட்டது. இந்த சம்பவம் எந்த விபரீதத்தில் இந்த அரசாங்கத்தைக் கொண்டுவிடுமோ என்கிறபயம் உள்ளூர அவருக்கு உண்டாகிவிட்டது. மகாமேதாவியும் வெகுவெகு கெட்டிக்காரியுமான குழந்தை ராணியின் வாழ்க்கைக்கு இந்த மாறுதல்களின் பயங்கரம் வித்யரஸத்தை விளைவிக்காதிருக்க வேண்டுமே என்கிற கவலை இதயபாதாளத்தில் தோன்றி மிகவும் வருத்தத் தொடங்கியது.

இன்றளவும் தன்னிடம் இத்தகைய விச்வாசத்துடன் இருந்த ப்ரபாகருக்கு ஏன் இப்போது இத்தகைய யாறுதல் எண்ணம் உண்டாகியிருக்கவேண்டும்? இந்த மர்மத்தைத்தான் அவரால் அறியவே முடியவில்லை. ஆபிஸ் அறையில் இதுபற்றி வெகு நேரம் யோசித்தார். ஒன்றுமே தோன்றாமல் குழம்பியதால் தனது அரண்மனைக்குப்போய்த் தனது ஏகாந்தத் தனியறையில் படுத்தார்.

வழக்கத்திற்கு விரோதமாய் வெகு சீக்கிரத்தில் தன் கணவன் வந்துவிட்டதையறிந்த அவரது மனைவி உடம்பிற்கென்னவோ என்கிற கவலையுடன் அங்குவந்து....“ஸ்வாமீ! ஏன் இப்பொழுதே வந்துவிட்டீர்கள்? உடம்பு ஒன்றுமில்லையே?” என்று அன்பே உருவாய்க் கேட்டாள்.

திவான்:—விலாஸினி! இப்படி உட்காரு. எனது உடம்புக்கு ஒன்றுமில்லை. பயப்படவேண்டாம். நமது அரசாங்கத்தில் தான் ஏதோ சில மாறுதல்கள் திடீரென்று உண்டாகி இருக்கின்றன. நான் இந்த சமஸ்தானத்தில் திவானாக வந்து இதுபரியந்தம் எந்த அதிகாரிகளும் மரியாதைக் குறைவாய் என்னை நடத்தியதும் இல்லை; பேசியதும் இல்லை. இன்று மந்திரி ப்ரபாகர் நடந்துகொண்டமாதிரி என்னிதயத்தையே பிளக்கின்றது. (என்று நடந்த வரலாற்றைக் கூறிப்பின்) விலாஸினீ! குழந்தை மகாராணி அதிமேதாவி, அபாரமான புத்திசாலி. ஏதோ பூர்வ ஜன்மவாஸனையினால்தான் இந்தக் குழந்தைக்கு இத்தகைய மதிநுட்பம் உண்

டாகி இருக்கிறது. அந்தத் தாயாரின் வயிற்றில் எப்படியோ பிறந்திருக்கிறாள்......

விலா:—(இடைமறித்து) ஸ்வாமீ! நேற்று நடந்த ஒரு சம்பவம் தங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

திவான்:—என்ன! என்ன! நேற்று சம்பவமா? எனக்கு ஒன்றுமே தெரியாதே! என்ன சொல்லு!

விலா:—நேற்று இரவு மந்திரி ப்ரபாகருடைய பிறந்த நாளுக்காக மகாராணியின் தாயார் அனேக விதமான தின்பண்டங்களுடனும் ப்ரத்யேகப் பரிசுகளுடனும் தனித்துச் சென்று பார்த்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்களாம். இந்த செய்கையை மந்திரியின் அரண்மனை பரிவாரங்கள் ப்ரமாதமாய்ப் பேசிக்கொள்கிறார்களாம். எந்த ஒரு விஷயமும் வேலைக்காரர்களுக்குத்தானே முதலில் தெரிந்து காற்றினும் கடியவேகத்தில் வெளிவந்து விடுகிறது. திவான்...என்ற பதம் அடிக்கடி வந்ததாம். அந்த இடத்தில் யாருமே இல்லாது காவல் போட்டுவிட்டார்களாம். அந்த அம்மாள் இதுபரியந்தம் மந்திரியிடம்பேசியதே கிடையாதாம். இன்று இதைச் சாக்குவைத்துக்கொண்டு போனதாகவும் ஏதோ குசுமசவென்று பலமான ரகஸ்யவார்த்தைகள் வெகு நேரம் பேசிக்கொண்டதாயும் வேலைக்காரர்கள்மூலம் நான் கேள்விப்பட்டேன்.

திவான்:—என்ன! உண்மையாகவா! விலாஸினீ! இது...

விலா:—ப்ரபோ! தங்களிடம் நான் பொய் வேறு சொல்ல வேண்டுமா! இந்த விஷயம் தங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று கூட நினைத்தேன். நேற்றிரவு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தது தவிர, இன்று விடியற்காலையில் மந்திரி ப்ரபாகர் வள்ளியம்மாளின் வீடுதிக்கு வந்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தாராம். அங்குதான் காலை ஆகாரம் சாப்பிட்டாராம். பிறகு வள்ளியம்மாளும் மந்திரியுடன் கூடவே சென்றார்களாம். அவர்கள் வெகுநேரம் சென்று தம் வீடு திரும்பினார்களாம். இதை எல்லாம் சற்றுமுன் தான் நமது தாதி கமலம் சொன்னாள். அதன்பலனாகத்தான் இதுவும் இருக்குமோ என்னவோ?

திவான்:—விலாஸினீ! இந்த விஷயங்கள் எல்லாம் எனக்கு ஏதோ அதிர்ச்சியாயும் ஆச்சரிய பயங்கரமாயுங்கூடத் தோன்றுகின்றன. ப்ரபாகர் உண்மையில் நியாயம் தவறாத உத்தம மந்திரியாகத்தான் இருக்கிறார். இன்று அவருடைய செய்கையால் நான் ப்ரமித்தேபோனேன். இந்தமாறுதலுக்கு என்ன காரணமிருக்கக் கூடும் என்று இப்போதும் எனக்குப் புரியவில்லை.

விலா:—ஸ்வாமி! அரைகுறையாக அவர்கள் காதில் விழுந்த வார்த்தையில் இன்னொரு விஷயங்கூடப் புரிவதாகச் சொல்கிறார்கள். அதாவது, வீரலக்ஷ்மியை மந்திரியின்மகன் முரளீதரனுக்கு விவாகம் முடித்துத் தாங்களே சகலத்தையும் கவனிக்கப் பேசுகிறார்களாம்.

திவா:—அடாடாடா!... மகாராணிக்கு முரளீதரன் கணவனுவதா, மகாராணி மந்திரியின் மகனை மணப்பதா? மகாராணிக்கு ஏற்ற மகாராஜாக்கள் நானு நீ என்று போட்டியிட்டுக்கொண்டு காத்திருக்கையில் தன் மகளை சாதாரண மந்திரியின் மகனுக்குக் கொடுப்பதற்கா அந்தமனுஷி முன்வந்திருக்கிருள்; என்ன ஆச்சரியம்! சரிதான்....இத்தனை தூரம் முற்றிவிட்டபிறகு நாம் ஜாக்ரதையாகத் தான் இருக்கவேண்டும்.

விலா:—வாஸ்தவம், வீண்புகாரும் அபக்யாதியும் பழியும் வருவதற்குமுன்பு ராஜிநாமாச் செய்துவிட்டு விலகிவிடுவது நல்லது என்று தோன்றுகிறது. இத்தனைகாலம் கண்ணியமாகப் பிழைத்ததை ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்?

திவான்:—விலாஸினீ! நீ சொல்வதுமிகவும் சரியானயோசனை· தண்ணீரும் மூன்று பிழைகள் பொறுக்கும் என்பார்கள். அது போல் இந்தச் சிறிய சமாசாரத்திற்கே முதலில் நமது மாறுதலே நாம் காட்டிவிடக்கூடாது. இன்னும் என்னதான் நடக்கிறது என்பதைப் பார்க்கலாம். மகாராணியின்மீது நான் பெற்ற குழந்தையைவிட அதிக பாசத்தை வைத்துவிட்டதால் அக் குழந்தைக்காக என் மனது மிகவும் அலைகிறது. பூர்வஜென்மாந்திர வாஸனை இல்லாமல் இத்தகையஒரு புதுமையான பதவியும் சொர்க்க போகமும் யாருக்கும் கிடைக்காது. அப்படிக்கிடைத்திருப்பதைக் கொண்டு சீரும் சிறப்புமாகவைத்து வாழச்செய்யாமல் எங்கே சிதறவடித்துவிடுகிறுர்களோ என்று பயமாக இருக்கிறது. சின்னஞ் சிறு குழந்தைக்குஇப்போது என்ன விவகாரம் தெரியும்? கட்டாயக் கல்யாணத்தைச் செய்துவிட்டால் பிறகு மாற்ற முடியுமா?.

விலா:—ஸ்வாமீ! நாம் எத்தனை ராஜபக்தியுடன் உழைக்க வேண்டுமோ அப்படித்தான் உழைத்துவருகிறோம். பெண்ணைப் பெற்றவர்களுடைய செயல் ப்ரதிகூலமாகிவிட்டால் அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? இன்னும் சில நாள் பார்க்கலாம். அதற்குள் இன்னும் விவரங்கள் புரிந்துவிடும். நம்மை நாம் காத்துக்கொள்ளும் முறையில் எப்படி நடந்தால் உசிதமோ அப்படி நடக்கலாம். வீணுகக் கவலைப்படவேண்டாம்...என்று சமாதானம்செய்தாள்.

திவானுக்குமட்டும் ஏதோ ஒருவித குழப்பமும் கவலையும் குடிகொண்டு வாட்டியதால் அப்படியும் இப்படியும் தீர்க்கமாக யோசனை செய்தபடியே உலாவிக்கொண்டிருந்தார். அச்சமயம் திவான் ப்ரமித்து நடுங்கிவிடும்படியாய் மகாராணி வீரலக்ஷ்மி தன்னந்தனியாய் "திவான் சாகேப்!" என்று கண்ணீர் பெருகப் புலம்பிக்கொண்டே ஓடிவந்து அவர் காலைக் கட்டிக்கொண்டு மேலே பேசமுடியாமல் தேம்பித்தேம்பி அழுதாள்.

ஏற்கெனவே குழம்பித் தவிக்கும் திவானுக்கு இந்தக் காட்சியினுல் மனம் உருகிப்போய் ஒருவித பயமும் உண்டாகி சரீரமே நடுங்கியது. வீரலக்ஷ்மியைத் தூக்கி எடுத்துத் தோள்மீது சாத்தி அணைத்தவாறு "மகாராணீ! மகாராணீ! அழாதீர்கள்.......இதோ

பாருங்கள்! ஏன் தாங்கள் இப்படி அழுகிறீர்கள்? தாயே! தாங்களே இந்த இடத்திற்கு வரலாமா? அதிலும் தனித்து வரலாமா? தங்கள் தாயாருக்குத் தெரியுமா தாங்கள் வந்தது?...முதலில் அழுகையை நிறுத்தி இப்படிப் பாருங்கள்" என்று கண்ணீர் பெருகக் கூறிச் சமாதானம் செய்கையில், விலாஸினி ஓடிவந்து "மகாராணீ! நமஸ்காரம். ஏன் இப்படிப் புலம்புகிறீர்கள்?"...என்றபடியே தான் அவளை வாங்கிக்கொள்ள முயன்றாள். ஆனால் திவானின் கழுத்தைக் கட்டிக்கொண்டு புலம்பும் வீரலக்ஷ்மி "திவான் சாஹேப்! நீங்கள் அங்கில்லாமல் நான் இருக்கமாட்டேன். நான் இங்கேயே இருந்துவிடுகிறேன். எனக்கு உங்கள் கதைதான் பிடிக்கிறது. நான் உங்களைவிட்டுப் போகமாட்டேன், நான் ஒத்தருக்கும் தெரியாமல் ஓடி வந்துவிட்டேன். உங்களை அழைத்துக்கொண்டுதான் போவேன்" என்று வெகு அன்புடன் கூறினாள்.

திவான்:—(தன் கண்ணைத் துடைத்துக்கொண்டு) மகாராணீ! தாங்கள் இந்த வேளையில் இப்படி வருவது சரியில்லை. தங்கள் தாயாருக்கும், மந்திரியாருக்கும் கோபம் வரும். தாயே! தயவு செய்து இப்போது அரண்மனைக்குப் போய்விடுங்கள். நாளைய தினம் நான் வருகிறேன். வீணாக உங்கள் தாயாருக்கு மனவருத்தத்தை உண்டாக்காதீர்கள். நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். தாயே! அரண்மனைக்குக் கொண்டுவிடச் சொல்கிறேன்; தயவுசெய்து போய்வாருங்கள். வீணான களுபுரா அரண்மனையில், உண்டாகிவிடும்....என்று சமாதானம் செய்துகொண்டிருக்கையில் ஒரு ஆள் அதிவேகமாக ஓடிவந்து "பிரபோ! அரண்மனையில் மகாராணியைக் காணவில்லை என்று புகார் நடக்கிறது. மூலைக்குமூலை ஆட்கள் தேடக் கிளம்புகிறார்கள். மந்திரியார் அரண்மனைக்கே வந்து கவலைப்படுகிறார்கள்" என்று பதறியவாறு சொல்லும்போது மகாராணி இங்கிருப்பதைத் தற்செயலாக பார்த்துவிட்டு, ஆச்சரியத்துடன் "ஆ!...இதோ மகாராணி இருக்கிறார்களே! நான்போய் சொல்லிவிட்டு வரட்டுமா?" என்றான்.

வீரலக்ஷ்மி சற்று கோபத்துடன் கடுகடுத்த குரலில் "யாரடா அது?....என்னை ஒருவரும் தேடவேண்டாம்...என்னை எந்த திருடத்னும் தூக்கிக்கொண்டு போய்விடவில்லை. நான் சரியாய்த்தான் இருக்கிறேன்" என்று அந்த மந்திரியிடம் சொல்லு. நான் இப்போது வரமாட்டேன். திவானுடன்தான் வருவேன். மூலைக்குமூலை ஆளையனுப்பவேண்டாம் என்றுசொல்லிவிட்டுவா...திவான்சாஹேப்!... நீங்கள் வந்துவிட்டபிறகு நான் ஆகாரமே கொள்ளவில்லை... எனக்குப் பசிக்கிறது. ஏதாவது கொடுங்கள்" என்று மிக்க செல்லத்துடன் கொஞ்சலாகக் கேட்டாள்.

உடனே,உயர்ந்த பழவகைகளும் பாலும் விலாஸினி கொண்டு வந்து வைத்தாள். திவான் தானே பழவகைகளை எடுத்துக் குழந்தைக்கு ஊட்டி அதைக் கண்டு உள்ளம்பூரித்துப் பேரானந்தமடைந்தவாறு...."மகாராணி! நான் இன்றுதான் பாக்யசாலியானேன்...

அது கிடக்கட்டும். அரசம்பட்டி கிராமத்தில் நீங்கள் பேசவேண்டிய பேச்சு சரியானபடி உருவாகிவிட்டதா?" என்றார்.

வீர:—ஓ! வெகு நன்றாகப் பாடமாகிவிட்டது. அதை என் தாயாருக்குச் சொல்லிக்காட்டினேன். ஆனால்....இதைச் சொல்லும்போது முகம் சுருங்கிவிட்டது. கையில் எடுத்த பழத்தை அப்படியே வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

அதே சமயம் பெரிய சிங்கம்போல் கர்ஜனை செய்தபடியே பிரபாகரும், வள்ளியம்மாளும் அங்குவந்து "பேஷ்! திவான் சாஹேப்!.......நீங்கள் இத்தனை மித்ரத்ரோகி என்பதை உடனே விளக்கிக் காட்டிவிட்டதுபற்றி மிகவும் சந்தோஷம். சின்னஞ்சிறு குழந்தையின் மனத்தைக்கலைத்துப் பாழாக்குவது போதாமல் பெற்ற தாயாருடன்கூட நேசமில்லாது பிரித்துவைத்து துரோகம் செய்வது கொஞ்சமும் நன்றாயில்லை. இதென்ன காரியம்? அரண்மனையிலிருந்து குழந்தையை நீர் அழைத்துவருவதற்கு உமக்கென்ன அதிகாரமிருக்கிறது? ஒரு சாம்ராஜ்யத்தின் மகாராணியை தன்கீழ் அடிமைவேலை செய்யும் திவான் வீட்டில் இப்படிவந்து சாப்பிடச் செய்வது வெகு அழகு! இதைவிட ராஜநிந்தனையும் மித்ரத்ரோகமும் வேறு என்ன வேண்டும்! இந்த செய்கை ஒன்றே உமது மனப்பான்மையை நன்றாகக் காட்டிவிட்டது. இந்த அநியாயத்தைக் கண்ட ஊர் ஜனங்கள் என்ன சொல்வார்கள்?....

என்று தாறுமாறுமாக மந்திரி கத்துகிறார். வள்ளியம்மாள் வீரலக்ஷ்மியின் ஆகாரத்தைப் பிடுங்கி வீசி எறிந்துவிட்டு அவளைத் தூக்கித் தன்னிடுப்பில் அமர்த்திக்கொண்டபடியே "கண்ணா! ஏன் அழுகிறாய்? உன்னையிங்கு யார் தூக்கிக்கொண்டு வந்தார்கள்? உனக்கு இந்த ஆகாரத்தினால் வயிற்றில் ஏதாவதுசெய்கிறதா?...... ஐயோ!...மந்திரியாரே! குழந்தை முகத்தைப் பாருங்களேன். ஏதோமாதிரி விழிக்கிறாளே!......உடனே டாக்டரைக் கூப்பிடுங்களேன்! என்மனம் கொதிக்கிறதே. பெற்ற தாயாரிடம் குழந்தையைச் சேரவிடாது பிரிக்கும் பாவிகள் அவளை இந்த உலகத்திலிருந்தே பிரித்துவிடுவார்களே?...எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று கத்துவதைக் கண்ட திவானின் கோபம் வானையளாவுகிறது. வேண்டுமென்று இப்படி சதிசெய்யவே வந்திருப்பதாக நன்றாகத் தோன்றியதால், அடக்கமுடியாத ஆத்திரத்துடன் "ப்ரபோ! திடீரென்று இத்தகைய அநியாய வார்த்தைகளைக் கூறி வருத்துவது சரியில்லை. இப்படி அவமானப்படுத்துவதும் அழகல்ல.... இந்த ப்ரமாத திவான் உத்தியோகத்திற்காக நான் வேலை செய்யவில்லை. எனது இதய பூர்வமான ராஜ விச்வாசமும் சத்தியத்தில் நோக்கமும் ப்ரதானமேயன்றி வேறில்லை .....என்பதற்குள், மந்திரி ப்ரபாகர் கடகடவென்று பெரிதாக ஒரு சிரிப்பு சிரித்தார். அச்சிரிப்பின் ஒலி அந்தக் கட்டிடம் பூராவும் எதிரொலி செய்து சுற்றிக்கொண்டது. அந்த அதிர்ச்சியினால் திவானின் உள்ளம் சுக்கல் நூறாக வெடித்ததுபோலாகிவிட்டது.

# தாய்மை

பெண்மையின் வெற்றிச் சிகரமே தாய்மை. ஒரு பெண் தாய்மை ஸ்தானத்தை அடைவதைப்போன்ற மகத்தான பாக்கியம் வேறு ஒன்றுமே இல்லை. ஒரு சக்தியின் புனிதத்துவத்தை விளக்குவதே தாய் என்ற சொல். தான் பிறந்து வளர்ந்த நாட்டை தாய்நாடு என்கிறோம். தன் நினைவு தெரிந்தது முதல் பேசிப் பழகின பாஷையை தாய்பாஷை என்கிறோம். தாய்மையை அடையவே பெண்ணுள்ளம் இயற்கையில் பண்பட்டு இருக்கிறது. ஒரு பெண் பிறவியிலிருந்தே தாயாக ஆகும்படியாக வளருகிறாள். அவள் மக்களுள் தாயாகும் நிலையை அடையப்பெற்றால் வாழ்க்கையின் பூரணத்துவத்தை அடைந்ததாக உணர்ந்து பொங்கிப் பூரிக்கிறாள். எவ்வளவு பாக்கியங்களைப் பெற்றபோதிலும் மக்கட்செல்வத்தைப் பெறாவிட்டால் பெண்கள் மனம் மலர்ந்து பூரிப்பதில்லை. ஆனால், ஒவ்வொரு பெண்ணும் இயற்கையின் நியதியில் தாயாக ஆகும் பாக்கியம் பெற்றாலும், பெறாவிட்டாலும் உள்ளம் தாயுள்ளமாக இருக்கிறது.

துன்பத்தில் உழலும் மக்களுக்கும் ஏழைக் குழந்தைகளுக்கும் அநாதை ஆசிரமங்களில் சிலர் தாயாக தெய்வமாக விளங்கும் பாக்கியம் பெற்றிருக்கிறார்கள். அவ்விதமானவர்களுக்குத்தன்னுடையதென்று மக்கள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்கள் விரிந்து பரந்த மனப்பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் மேன்மையுறச் செய்வதே பெண்ணுள்ளம். இந்தப் பான்மையில் ஒவ்வொரு பெண்ணும் அமரத்துவமடைகிறார்கள். பெண்களால் அன்பு செய்யாமல் இருக்கவேமுடியாது. தனக்காகத் தனித்து வாழவும் முடியாது.

பெரியாழ்வார் கண்ணனைத் தன் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் பாவித்து பக்திசெய்செய்கிறார். ஆழ்வாராகிய யசோதை குழந்தைக்குத் தொட்டிலிடும் வைபவத்தை வர்ணிக்கிறாள். குழந்தையின் தொட்டில் கல்யாணம் சாமான்யமா? நான்முகன், ருத்திரன், இந்திரன், அஷ்டதிக் பாலகர்கள், ஸ்ரீதேவி, பூதேவி, துர்க்காதேவி, அனைவரும் அழைக்கப்படுகிறார்கள். அவரவர்கள் யோக்கியதைக்கு தக்க அன்பளிப்புடன் வந்ததாக யசோதை தன் குழந்தை கண்ணனுக்குத் தாலாட்டுகிறாள்.

"மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி
ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ!
    வையமளந்தானே தாலேலோ!"

என்று பிரமனுடைய அன்பளிப்பான தொட்டிலையும், இதர தேவாதி தேவர்களுடைய அன்பளிப்பையும் வர்ணிக்கிறாள். மூன்று திக்பாலகர்களுடைய அன்பளிப்பை முறையே வர்ணித்துச் சொல்லிவிட்டு தென் திசையான் அன்பளிப்பைச் சொல்லாமல் விட்டுவிடுகிறார்பெரியாழ்வாராகிய யசோதை. அதைச் சொல்வது குழந்தை க்ஷேமத்திற்கும், சுபத்துக்கும் குறைவாக நினைக்கிறார். இதில் பெண்ணுள்ளத்தின் தாய்மை எவ்வளவோ இயற்கை பாவகமாகப் பொருந்தியிருக்கிறது.

பாரதியார் கண்ணனைத் தோழனாகக்கண்டார்; தாயாகக்கொண்டார். இன்னும்—தந்தை, சேவகன், சற்குரு, பள்ளித்தோழன், காதலி—இப்படி

By courtesy of A. I. R, Madras.

யாக அநேக பாவத்திலும் கவிதைபுரிந்தார். ஆனல், கண்ணனைக் குழந்தை யாகக்கண்டு புரிந்த கவிதையின் அழகு உலகமுள்ளளவும் புதுமையாகவும் நம் அனைவரையும் வசீகரப்படுத்தும்படியும் இருக்கும். கவியின் மன உலகில் அவர் தாய்மை விளங்கும்பொழுது என்னதான் அழகென்று சொல்லிமுடியாது.

தாய்மையின் மற்ற இரு அம்சங்கள் வற்ருத அன்பு, வஞ்சக மில்லாதஅன்பு. ஒருதாய் தன் ஒரு குழந்தையிடம்தான் அன்பு செலுத்த முடியுமென்பதில்லை, நான்கைந்து குழந்தைகளை அடைந்துவிட்டபோதி லும் பெண்ணுள்ளத்தின் அன்புச்சுனை வற்ருத; ராமுவுக்கு பழமென்ருல் உயிர். கமலாவுக்கு இனிப்புப் பண்டமென்ருல் ஆசை. பாபுவுக்கு ரஸ மும், சாதமும் இருந்தால் போதும். தாயோ பெருமையுடன் அவரவர் களுக்குப் பிடித்தமானதை வழங்குகிருள். ஒவ்வொரு குழந்தையை ஒவ்வொருவிதமாக அரவணைக்கிருள். தாய்மையில் வஞ்சனை உண்டா வதேயில்லை.

கர்ணபரம்பரையில் மகாபாரதத்தில் ஒருகதை உண்டு. பாஞ்சாலி யின் சுயம்வரத்தில் இருந்த நிபந்தனையை வென்று அர்ச்சுனன் அவளை அழைத்துவருகிருன். வீட்டிற்கு வெளியே இருந்துகொண்டு "அம்மா! நாங்கள் ஒரு கனி கொண்டுவந்திருக்கிருேமென்று தெரிவிக்கிருர்கள். குந்திதேவியார் என்னவென்று கேட்காமலே ஐவரும் எடுத்துக்கொள்ளுங்க ளென்று உள்ளிருந்தபடியே சொல்லுகிருராம். இந்தக் கதை எவ்வளவு வரை உண்மையென்று ஆராய்வதைப் பௌராணிகர்களுக்கு விட்டு விடுவோம். ஆனல், அந்த வஞ்சனையற்ற தாய்மை அங்கு தலைதூக்கி நிற்பதை அறிகிருேம்.

ஜீஜீபாய்:—தன் கணவர் கோழைமுாக நடந்துகொண்டதைச் சகி யாமல் மனம் வெதும்புகிருள். அந்தத் தயரத்தின் வேகம் தன் மகனை வீரனை வளரச்செய்யும்படித் தூண்டுகிறது. சிவாஜிக்கு ஆகாரத்துடன் வீரத்தையும் கதைவாயிலாக ஊட்டுகிருள். அவர் விரும்பியபடியே சிவாஜி நம் சரித்திரத்திலேயே இணையற்ற வீரராகவும் பக்தராகவும் விளங்குகிருர். பள்ளியில் படிக்கும் படிப்பில்மட்டும் மக்கள் மனம் மலராது. தாய்மை என்ற தூய்மையில்தான் மக்கள் குணக்குன்ருய் விளங்குவர்.

இன்றும் நம் இந்திய சரித்திரத்தில் சிகரமாக விளங்கும் தாய் அன்னை கஸ்தூரிபா. கஸ்தூரிபா அவர்கள் தன் மக்களுக்குமட்டும் தாயாக இல்லை. ஆசிரமத்தில் இருக்கும் அனைவருக்கும் தாயாக விளங்கியிருக் கிருர். தாய்மையின் விசேஷ குணம் தன் கையால் தன் மக்களுக்கு அன்னமிட்டு இன்பம் அடைவதுதான். அநேகமாய் கஸ்தூரிபா தன் கையால் சமைத்த உணவுகளையே ஆசிரமவாசிகளுக்குக் கொடுத்து சந்தோஷமடைந்திருக்கிருர்.

சில வருஷங்களுக்கு முன் தினசரி பத்திரிகையில் அநேகர் படித் திருக்கலாம். பம்பாயில் கர்ப்பவதியான ஒரு பெண் வயிற்றில் பிரமாத நோய் ஏற்பட்டிருந்ததாம். அதற்கு உடனே ஆயுத சிகிச்சை செய்து நிவர்த்திக்காவிட்டால் தாயின் உயிருக்கு ஆபத்தென்று வைத்திய நிபுணர் அறிந்தார்களாம். அதோடு மயக்கம் கொடுத்து அந்த சிகிச்சை செய் தால் சேய் பிழைத்திருக்கமுடியாதென்றும் கண்டு கொண்டார்கள். இதை அறிந்த அந்தப் பெண் தன் வயிற்று சிசு உயிருடனிருக்கத் தான் மயக்கமின்றியே ஆயுதசிகிச்சை செய்துகொள்வதாகத் துணிந்து சொல்லி யிருக்கிருர், வைத்தியர்களுக்கு ஒருபக்கம் ஆச்சர்யமும், வலியை

அந்தப் பெண்ணால் பொறுக்கமுடியுமாவென்ற அளவற்ற சந்தேகமும் உண்டாயிற்று. ஆனால், அந்தப் பெண் பிடிவாதமாக மயக்கமின்றியே ஆயுத சிகிச்சை செய்துகொண்டாள். அவள் தாய்மை வெற்றி அடைந்தது. சில தினங்களுக்குப்பின் உயிருள்ள குழந்தையை அடைந்தாள். அந்தப் பெண்ணின் சகிப்புத் தன்மையும் தாய்மையும் மனோபாவமும் மக்களை ஆச்சர்யத்தில் மூழ்கச்செய்தது. கற்பனை செய்யக்கூட முடியாத வலியைப் பொறுத்துச் சிசுவைத் தாய் காப்பாற்றிக்கொண்டது பெண்ணுள்ளத்தினால்தான் ஸாத்தியம்.

நாம் சிறுவயதில் நீதிக்கதைகள் வாசித்திருக்கிறோம். ஒரு புருஷனின் இரு மனைவிகள் ஒரு சிறு அழகான குழந்தையைத் தன்தனதென்று வழக்குச் செய்கிறார்கள். நியாயஸ்தலத்தில் இருவரும் தன்தன் குழந்தையெனச் சாதிக்கிறார்கள். தாய்மையை அறிந்த நீதிபதி ஒரு விசித்திரத் தீர்ப்புச் சொல்லுகிறார்:—

"இந்தக் குழந்தையை இரண்டாகத் துண்டித்து இருவரும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்பதுதான். இதைக் காதில் கேட்கப் பிடிக்காமல் ஒருத்தி காதுகளைப் பொத்திக்கொண்டு, "அம்மாதிரி செய்யவேண்டாம்; குழந்தை உயிரோடு இருந்தால் போதும். அவளே எடுத்துக்கொள்ளட்டும்" என்று கத்தினாள். உடனே நீதிபதிக்கு இவள்தான் குழந்தையின் தாயெனத் தெரிந்தது. அவளிடமே குழந்தையைக் கொடுத்தார். கதை பிரமாதமானதன்று. ஆனால், தாய்மையின் பெண்ணுள்ளத்தில் குழந்தைக்கு ஒரு எறும்பு கடித்தால்கூட மனம் பொறுக்காது. இது பொறுக்குமா?

சென்ற வருஷம் எங்கள் பக்கத்து வீட்டில் ஒருவர் நான்கு குழந்தைகளுடன் குடித்தனம் வந்தார். அவர் ஒரு சாதாரண குமாஸ்தா. ஏழ்மையுடன் விளையாடுபவர். குழந்தைகளில் மூத்த பெண்ணுக்கு சுமார் 12-வயதிருக்கும். கடைசிக் குழந்தைக்கு ஒரு வயதிருக்கும். அந்தக் குழந்தைகள் தாயை இழந்துவிட்டிருக்கிறார்கள். மூத்தபெண் தாய்க்குமேல் வாஞ்சையுடன் தம்பி, தங்கைகளை அன்புடன் வளர்த்தாள். அந்தக் குழந்தைகள் எவ்வளவு தொந்தரவு செய்தாலும் அவள் அன்பு, பொறுமையுடன் சமாளிப்பாள். அந்தப் பெண்ணின் குணத்தில் ஆச்சர்யமடைவேன். சிறுமியான அவளிடம் தாய்மை குடிகொண்டிருந்தது. இருக்கும் பொருளைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து தான் நிம்மதியாக இருப்பாள். அவர்களின் உடுப்புகளும் அப்படியே; பற்றாக் குறைக்கு இறங்கி, நான் அந்தப் பெண்ணுக்கு ஒரு சிறிய பட்டுதாவாணி வாங்கிக் கொடுத்தேன். அடுத்துவரும் தீபாவளி பண்டிகைக்கு சமத்தாக உடுத்திக் கொள்ளென்று சொல்லியும்வைத்தேன். ஆனால், தீபாவளிஅன்று அந்தப் பெண் பழைய பாவாடை, தாவாணியுடன் வந்தாள். பின்னோடு புது தாவாணியுடன் தயாரித்த குட்டிப்பாவாடை சொக்காய்களை உடுத்திக் கொண்டு குழந்தைகள் வந்தார்கள். புது தாவணி எங்கேயென்று கேட்க வாயெடுத்த நான் அப்படியே நின்றுவிட்டேன். வயதில் சின்னவரும் தன்மையில் பெரியவருமான அந்தப் பெண் முன்னால் நான் வெட்கிச் சின்னவளாக நின்றேன். அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்காமல் அந்தப் பெண்ணுக்குமட்டும் நான் கொடுத்த தவறை உணர்ந்தேன்.

சுமார் நான்கைந்து வயதுள்ள ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் விளையாடுவதைச் சற்று கவனித்தால் தாய்மையின் வித்து பெண்ணுள்ளத்தில் பிறவியிலேயே நட்டிருப்பதை அறியலாம். பெண் குழந்தை தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெப்பர்மின்ட், பிஸ்கோத்தை பொம்மையின் வாயில் ஊட்டும்! தன் பாவாடையின் ஒரு பக்கத்தில்

பொம்மையைத் தூங்கச்செய்து அதன் தூக்கத்தைக் கெடுக்காமல் உஷாராக விழிப்புடன் இருக்கும். ஆண் குழந்தையோ தின்பண்டத்தை வாயில்போட்டுத் தின்றுவிட்டு இரண்டு கட்டைகளைப் பாலம்கட்டி விளையாடுவான். இது இயற்கையின் நியதி.

மேல்நாட்டில் ஒரு மாது தன் ஐந்து பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்துவந்திருக்கிறாள். ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு துறையில் பெரியவனாக விளங்குகிறான். இதற்காக அந்த மாதிற்கு டாக்டர் பட்டம் கொடுத்து அரசாங்கத்தார் கௌரவித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஒவ்வொரு வருஷமும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று "தாய்த் திருநாள்" கொண்டாடப்படுகிறது. அன்றையதினம் பள்ளிக்கூடம், மாதாகோவில் போன்ற பொதுஸ்தலத்தில் தாய்மையைப் போற்றிச் சொற்பொழிவுகள் நடக்கும். இது அரசாங்கத்தின் அங்கீகாரத்தில் நடைபெறுகிறது. பிரதி வருஷமும் ஒரு வயது சென்ற நேர்மையான மாதைத் தாய்த் திருநாளின் தாயாகத் தேர்ந்தெடுத்து கௌரவிப்பார்கள்.

தாயின் மனோபாவத்தில் இன்னொரு அதிசயம். புகழ், கீர்த்தி என்பன பெரிய லாகிரி. புகழ் அடைய விரும்பாத மானிடவர்க்கமேயில்லை. ஆனால், ஒரு தாயிடம் "மாமி! உங்கள் பெண் ஜெயா கெட்டிக்காரி; அவ்வளவு சமத்தாக என்னை வந்து அழைத்தாள்; உங்களுக்குக்கூட இவ்வளவு நன்றாய்ப் பேசத்தெரியாது" என்று சொல்லிப்பாருங்கள். தாய் அதைக் குறைவாகக் கருதாதது மட்டுமல்ல; பெருமையுடன் "அதையேன் சொல்லுகிறீர்கள், மகாசுட்டி! பேச்சால் வருகிறவர்களையெல்லாம் மயக்கிவிடுகிறாள். அவ அப்பாவே ஆச்சரியப்படுகிறார்" என்று ஸந்தோஷமாகச் சொல்லுவாள். இது தாய்மையின் உறவில்தான் இருக்கும்.

தாய்மை மகத்தான பொறுப்பு வாய்ந்தது. ஆனால், இயற்கைப் பெண்ணுள்ளத்தில் அதற்குத் தேவையான தியாகம், பிரதிபலனற்ற அன்பு, உழைப்பு, பொறுமை எல்லாவற்றையும் கொடுத்து நிறைத்திருக்கிறது.

---

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 3-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்பிரவாகம்
வெளுத்த வானம்

தெய்வீக ஒளி
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
அணா 12
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
அணா 8
உருத்த இதயம்

183/60

## ஐந்து ரூபாய்க்கு அரிய தமிழ்விருந்து

**வை. மு. ஸ்ரீ. 1–வது நவீனம் — உதய சூரியன் — ரூ. 1–4.**

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திக்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச் சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்ய பாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்ட வானம் 15. உதய சூரியன்.

**வை. மு. ஸ்ரீ. 2–வது நவீனம் — மதமா, மனமா? — ரூ. 1–4.**

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. விழிப்பும் உழைப்பும் 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப் போம் 14. உயிர் நிலை—உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 6. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 10. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

**வை. மு. ஸ்ரீ. 3–வது நவீனம்— அவசரமூர்த்தியின் நிதானகீர்த்தி தோதுத்து அளிக்கும் விவித விருந்து — அபூர்வ டயரி — ரூ. 1–8–0**

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4 பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனைமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ கிருஷ்ணாம்ருதம் 10 கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13 எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15 ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

**வை. மு. ஸ்ரீ. 4–வது நவீனம் — ராணி சீலாவதி — ரூ. 1–0–0**

1. உபன்யாசமும் உதாசீனமும். 2. பேய்க்குக்கள் வார்த்த கதைதான் 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே! 4. நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும். 6 வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும் — சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும் 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12 ராஜரிஷியின் இதய கீதம்.

ஷை நான்கு நவீனங்களையும் ஒரேசமயத்தில் வாங்குவோர் ரூ. 5. அனுப்பினால் தபாற்செலவின்றி ரிஜிஸ்தர் போஸ்டில் அனுப்பப்படும். தனியே வாங்குவோர் தமக்கு வேண்டிய புத்தகத்தின் விலையுடன் 4 அணா ரிஜிஸ்ட்ரேஷனுக்காக அனுப்பவும்.

---

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.

*Managing Editor:* V. M. SRINIVASAN, M. A. B. L.




பிரதிபாவின்

# ஸ்ரீலக்ஷ்மம்மா கதை

தயாரிப்பு, டைரெக்ஷன்:

ஜி. பலராமய்யா

ஆந்திரா, ஸீடட், நிஜாமுக்கு:
பூர்ணு வெளியீடு

மைசூருக்கு:
தள்ளம் வெளியீடு

அஞ்சலி தேவி,
நாகேஸ்வர ராவ்,
சிவராவ், பிரபாகர், காடேபள்ளி,
ஜி. வரலக்ஷ்மி, சூர்யபிரபா,
சேஷமாம்பா நடித்தது.